REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 மார்ச் 23 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 70 | Wednesday 23, March, 2022 | 32பக்கங்கள் | 30/-

மல்வத்து, அஸ்கிரிய மகா நாயக்கர்கள்

ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு நிபுணர்களைக் கொண்ட பல தரப்பு மாநாட்டை கூட்டி, நிலையான அபிவிருத்திக்காக திட்டமொன்றை வகுப்பதன் முக்கியத்துவம் மற்றும் ஏனைய 13 விடயங்களை 06

மனித உரிமைகள், மனித சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் புதிய திருத்தச் சட்டம்

பயங்கரவாத தடைச் சட்டத் திருத்தம் குறித்து அமைச்சர் ஜீ.எல்.

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

அரசாங்கம் முன்வைத்துள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் திருத்தத்தில், மனித உரிமைகள் மற்றும் மனித சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வெறும் கண்துடைப்பென இதனைக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென குறிப்பிட்ட அமைச்சர், சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டுமாயின் மக்கள் ஆணை அவசியமென்றும் சபையில் தெரிவித்தார்.

பயங்கரவாத தடை சட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களானது மேலோட்டமான திருத்தமென எவரும் கருதக் கூடாது. இந்த திருத்தங்கள் 06

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்,கோஷங்களை எழுப்பி அரசியல் இலாபம் பெற முயற்சி

தொடர்ந்தும் பொறுமை காக்கிறது அரசாங்கம்

ஷம்ஸ் பாஹிம்

மோதலை ஏற்படுத்துவதன் மூலம் தனிநபரையோ அல்லது குழுவையோ அசௌகரியத்திற்குள்ளாக்கி அரசியல் ஆதாயம் பெறவே ஆர்ப்பாட்டக்காரர்கள் விரும்புவதாகவும், இவ்வாறான நிலையில் மிகவும் பொறுமையாக செயற்படும் பாதுகாப்புப் படையினருக்கும் பொலிஸாருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் இணை அமைச்சரவை பேச்சாளர் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். திட்டமிட்ட முறையில் தங்களிடமுள்ள பெற்றோலை விநியோகிக்காமல் மறைத்து வைத்துள்ளனரா? என்பது குறித்து ஆராயவும் பெற்றோல் விநியோக 06

பயங்கரவாத தடுப்பு தற்காலிக ஏற்பாடுகள் திருத்த சட்டமூலம்

51 மேலதிக வாக்குகளால் திருத்தத்துடன் நிறைவேற்றம்

ஆதரவாக 86, எதிராக 35 வாக்குகள்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

பயங்கரவாத தடைச்சட்டம் தற்காலிக ஏற்பாடுகள் திருத்தச் சட்டமூலம் நேற்று (22) சபையில் திருத்தங்களுடன் 51 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக 86 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்டதால், 51 மேலதிக வாக்குகளால் சட்ட மூலம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

சட்ட மூலத்தை சபையில் சமர்ப்பித்து நேற்றைய தினம் வெளிவிவகாரஅமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சட்டமூலம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். விவாதத்தின் போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சியினர் ஆதரவாகவும் எதிராகவும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர்.

விவாதத்தின் இறுதியில், தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி சுமந்திரன், மக்கள் விடுதலை முன்னணி எம்.பி அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் வாக்களிப்பைக் கோரினர்.

இதையடுத்து வாக்களிப்பு நடைபெற்றது. பயங்கரவாத (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச்சட்ட மூலத்தை கடந்த 10 ஆம் திகதி வெளிவிகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த நிலையில், இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்று 06

வாக்களிப்பின் போது 103 எம்பிக்கள் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வரும் பொதுமக்கள், அங்கு கடமை புரியும் ஊழியர்களின் பாதுகாப்பு கருதி நாட்டிலுள்ள பிரதான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாதுகாப்பு படையினர் காவலுக்கு நிறுத்தப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: சுலோசன கமகே)

அமைச்சர் காமினி லொக்குகேயின்

சாரதியை கொலை செய்த பிரதான சந்தேக நபர் கைது

03

சர்வகட்சி மாநாட்டை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிப்பது ஆரோக்கியமானதல்ல

சகலரும் பங்கேற்று கருத்துக்களை முன்வைக்க வேண்டும்

ஷம்ஸ் பாஹிம்

எதிர்க்கட்சியினர், சர்வகட்சி மாநாட்டை பகிஷ்கரிக்காது தமது தரப்பு யோசனைகளை முன்வைக்க முன்வர வேண்டுமெ இணை அமைச்சரவை பேச்சாளர் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் பல கட்சிகள் சர்வகட்சி மாநாட்டை பகிஷ்கரித்துள்ளமை குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் தெரிவித்ததாவது,

சர்வகட்சி மாநாட்டை நடத்த காலதாமதம் ஆகியிருக்கலாம். சுதந்திரக் கட்சியின் கோரிக்கைப்படி இந்த மாநாடு நடத்தப்படுகிறது. எதிர்க்கட்சியினர் மாநாட்டை 06

எரிபொருள், எரிவாயு, மின்சார நெருக்கடி

மக்கள் எதிர்நோக்கியுள்ள அனைத்து பிரச்சினைக்கும் அடுத்த வாரம் தீர்வு

எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரம் ஆகிய அத்தியாவசிய சேவைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு எதிர்வரும் வாரம் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். எரிவாயு இறக்குமதிக்கு தேவையான கடன் பத்திரத்தை விநியோகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அமைச்சரவை கூட்டத்தின்போது குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் (21) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள 06

மக்களுக்கு முடிந்தளவு நிவாரணம்

எரிபொருளும் குறைந்த விலையிலே விற்பனை

ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில்தான் எரிபொருள் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டு மக்களுக்கு முடிந்தளவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அமைச்சர் எஸ். பி திஸாநாயக்க தெரிவித்தார். ஜனாதிபதி தலைமையில் (21) இரவு நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். மேலும் குறிப்பிட்ட அவர், சமையல் எரிவாயு, எரிபொருள் ஆகியபிரச்சினை 06

மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்திய கடனுதவியை பயன்படுத்த வேண்டும்

கடன் பெற்றதற்கு எமது கட்சியும் ஆதரவு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

நாட்டின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக இந்திய அரசாங்கத்தினால் ஒரு பில்லியன் டொலர் கடன் வழங்குவது தொடர்பில் எம்மிடமும் வினவப்பட்டது.

அதற்கு நாம் ஆதரவு தெரிவித்திருந்தோமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்தியாவின் கடன் தொகையின் மூலம் பட்டினியுடன் வாடும், வரிசையில் நிற்கும் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண 06

தனியார் வங்கியில் நிதி மோசடி

76 கணக்குகளிலிருந்து 15 கோடி ரூபா மாயம்

வங்கி முகாமையாளர் CIDயினரால் கைது

தனியார் வங்கி ஒன்றில், நடைமுறைக் கணக்குகளைப் பேணும் 76 வாடிக்கையாளர்களின் கணக்குகளிலிருந்து சுமார் 15 கோடி ரூபா பணத்தை மோசடியான முறையில் கையாடல் செய்தமை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் திட்டமிட்ட நிதிக் குற்றங்களில் ஈடுபடும் செல்டல் ரவி என்பவரும் 06

சிறையிலுள்ள ரஞ்சனுக்கு 'மக்கள் நடிகர்' விருது

2022 ஆம் ஆண்டுக்கான SlimKanter விழாவில்

சிறைத் தண்டனை அனுபவிக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல சிங்கள திரைப்பட நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க, மக்கள் நடிகருக்கான விருதை வென்றுள்ளாரென தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கலைஞர், ரஞ்சன் ராமநாயக்க, மக்கள் நடிகருக்கான விருதை வென்றுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 06

இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து

நிமல் லான்சா இராஜினாமா!

கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான நிமல் லான்சா, தமது இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளார். இராஜினமா கடிதத்தை, ஜனாதிபதிக்கு கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் பதவி விலக தயாரென இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா கடந்த காலங்களில் தொடர்ந்து தெரிவித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மின் விநியோகம் உட்பட மூன்று சேவைகள் அத்தியாவசியமாகின

ஜனாதிபதியால் அதிவிசேட வர்த்தமானி வெளியீடு 03

மட்டு. கல்லடி பால வாவியில் பெண்ணின் சடலம்

பொலிஸார் தீவிர விசாரணை 03

மின்சாரம், நீர் கட்டண அதிகரிப்பு அமைச்சரவையில் எதுவும் ஆராயப்படவில்லை

03

வட மாகாண கல்வி அமைச்சை முற்றுகையிட்டு ஆசிரியர் ஆர்ப்பாட்டம்

நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி தொண்டர் ஆசிரியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமாகாண கல்வி அமைச்சுக்கு முன்னால், இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நல்லூர் செம்மணி வீதியிலுள்ள வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக நேற்றுக் காலை ஒன்று திரண்ட தொண்டர் ஆசிரியர்கள், அலுவலக பிரதான வாயிலை முற்றுகையிட்டு இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

மூன்று மாதத்துக்குள்

2,50,000 சுற்றுலா பயணிகள் வருகை

நாட்டில், இந்த வருடத்தில் இதுவரை 2,50,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் சுமார் 1,08,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்களென எதிர்பார்க்கப்படுவதாக அதன் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்தார். மேலும், மின்வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சுற்றுலாத்துறையில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

வாடகை குடியிருப்பாளர்களுக்கு 'உறுதிப்பத்திர வாடகை வீடு'

பிரதமர் முன்மொழிவு, அமைச்சரவை அங்கீகாரம்

ஷம்ஸ் பாஹிம்

காணி, வீடுகள் இன்மையால் குறைந்த வசதிகளுடன் வாழ்கின்ற வாடகைக் குடியிருப்பாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் உறுதிப்பத்திர வாடகை வீடு' எனும் பெயரில் முன்மொழிவுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக கிராமிய வீடமைப்பு, கட்டுமானங்கள் மற்றும் கட்டடப் பொருட்கள் தொழிற்றுறை ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இக் கருத்திட்டத்தின் கீழ், 04 மாடிகளுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புக்களை நிர்மாணிப்பதற்கும், 06

விக்கல் வீராச்சாமி

அண்ணே, கொழும்பு ரோட்டுகள்ல போற வாகனங்கள பாத்தா நாட்டில பெட்ரோல் டீசலுக்கு தட்டுப்பாடு இருக்கிற மாதிரி தெரியலையே....

உண்மைதான் தம்பி, பெட்ரோல் செட்டுகள வழிச்சு துடச்சி வாங்கிப் பதுக்கினா அப்பப்ப வாங்குற கொஞ்சபேரு வரிசையிலதானே நிக்க வேணும்...!!!

சர்வதேச செய்திகள்

ஜப்பானுடனான 2ஆம் உலகப் போர்; அமைதி பேச்சை கைவிட்டது ரஷ்யா

உக்ரைன் படையெடுப்புக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுத்த ஜப்பானுடனான இரண்டாம் உலகப் போரின் அமைதிப் பேச்சுவார்த்தையை கைவிட ரஷ்யா முடிவு செய்துள்ளது. இதற்கு ஜப்பான் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

'உக்ரைனுக்கு எதிரான ரஷ்ய ஆக்கிரமிப்பின் விளைவாகவே தற்போதைய நிலை ஏற்பட்டுள்ளது. அந்தப் பிரச்சினையை ஜப்பான் – ரஷ்ய உறவில் திசை திருப்ப ரஷ்யா எடுக்கும் முயற்சி நியாயமற்றது மற்றும் ஏற்க முடியாதது' என்று ஜப்பான் பிரதமர் பியுமியோ கிஷிடா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப் போருக்கு பின்னரான உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு ஜப்பான் மற்றும் ரஷ்யா பல ஆண்டுகளாக முயன்று வருகிறது. எனினும் ஜப்பான் உரிமை கோரும் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் நான்கு தீவுகள் பற்றிய விவகாரம் இதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது.

இந்நிலையில் இந்தப் பேச்சுவார்த்தையை கைவிடுவதாக ரஷ்யா திடீரென்று அறிவித்துள்ளது. 'எமது நாட்டின் நலனுக்கு கேடு விளைவிக்க முயற்சிக்கும் வெளிப்படையான எதிர்ப்பு நிலைப்பாடு ஒன்றை எடுத்திருக்கும் நாடு ஒன்றுடன் தொடர்ந்து பேசுவது சாத்தியமில்லை' என்று ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய இந்த தீவுக்கு ஜப்பானியர்களுக்கு விசா இன்றி பயணிப்பதற்கான அந்தஸ்தையும் அகற்றி இருக்கும் ரஷ்யா அங்கு கூட்டு பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகளில் இருந்தும் விலகியுள்ளது.

உக்ரைன் படையெடுப்புக்கு எதிராக ஜப்பான், ரஷ்யா மீது கடுமையான பொருளாதார தடைகளை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

புடினை சமரசத்துக்கு அழைக்கிறார் உக்ரைனிய ஜனாதிபதி செலென்ஸ்கி

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான நேரடி பேச்சுவார்த்தைக்கு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி மீண்டும் ஒரு முறை அழைப்பு விடுத்துள்ளார். கிட்டத்தட்ட கடந்த ஒரு மாதமாக நீடிக்கும் போரில் சமரசம் ஒன்றை காண்பதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் கிழக்கில் உள்ள சர்ச்சைக்குரிய பகுதிகளின் அந்தஸ்து தொடர்பில் விவாதிக்க முடியும் என்றும் ரஷ்ய படைகள் வாபஸ் பெறுவதற்கு பகரமாக உக்ரைன் தனது நேட்டோவில் இணையும் நோக்கத்தை கைவிடுவதற்கு விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ரஷ்ய ஜனாதிபதியுடனான முதல் சந்திப்பில் இந்த விவகாரங்கள் குறித்து பேச நான் தயாராக உள்ளேன்" என்று உக்ரைன் தொலைக்காட்சி சேவைகளுக்கு கடந்த திங்கட்கிழமை அளித்த பேட்டியில் செலென்ஸ்கி தெரிவித்தார்.

"மேற்குலகை பொறுத்தவரை நேட்டோ தொடர்பில் எம்முடன் என்ன செய்வது என்று தெரியாதுள்ளது. உக்ரைனை பொறுத்தவரை எமக்கு பாதுகாப்பு உத்தரவாதம் தேவை. ரஷ்யாவை பொறுத்தவரை நேட்டோ மேலும் விரிவடையக் கூடாது. இது அனைவருக்கும் சமரசத்தை தருவதாக இருக்கும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

புடினுடன் எந்த வகையிலும் பேசுவதற்கு தயாராக இருப்பதாக கூறி உள்ள செலென்ஸ்கி, ஆனால் எந்த ஓர் உடன்படிக்கையும் மக்கள் கருத்துக்கணிப்புக்கு உட்பட்டிருக்கும் என்று தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டு கிரிமியா தீபகற்பத்தை கைப்பற்றிய ரஷ்யா கிழக்கு உக்ரைனில் பிரிந்து சென்ற டொனட்ஸ்க் மற்றும் லுஹன்ஸ் பிராந்தியங்களை அங்கீகரித்து விரைவில் உக்ரைன் மீது படையெடுத்தது.

தீவிரமடையும் ரஷ்ய தாக்குதல் குறித்து பொதுமக்களுக்கு உக்ரைன் எச்சரிக்கை

முக்கியமான உட்கட்டமைப்புகள் மீது ரஷ்யாவின் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல் தொடரும் என்று பொதுமக்களை உக்ரைன் இராணுவம் எச்சரித்திருக்கும் நிலையில் ரஷ்யா இரசாயன தாக்குதல்களை நடத்த திட்டமிட்டு வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்து நான்கு வாரங்கள் கடந்திருந்த போதும் அதனால் எந்த ஒரு பெரிய நகரையும் இன்னும் கைப்பற்ற முடியாமல் போயுள்ளது. ரஷ்யாவின் வான் தாக்குதல்கள், நீண்ட தூர ஏவுகணைகள் மற்றும் பீரங்கி தாக்குதல்களால் குடியிருப்பு பகுதிகளில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

தெற்கு துறைமுக நகரான மரியுபோல் ரஷ்ய தாக்குதல்களின் முக்கிய புள்ளியாக மாறியுள்ளது. அந்த நகரில் கட்டடங்கள் இடிந்து வீதிகளில் சடலங்கள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. உக்ரைனின் இரண்டாவது மிகப்பெரிய நகரான கார்கிவிலும் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிக திறன்படைத்த ஆயுதங்கள் மற்றும் அழிவை ஏற்படுத்தும் வெடிபொருட்களுடன் முக்கிய உட்கட்டமைப்புகள் மீதான ரஷ்யாவின் தாக்குதல் தொடரும் என்று எதிர்பார்க்க முடியும் என உக்ரைன் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் "உக்ரைன் வான் தளத்தில் ரஷ்யப்படைகளின் விமானங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக" உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை உக்ரைன் மீது உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தித் தாக்குதல் நடத்துவது குறித்து ரஷ்ய ஜனாதிபதி புடின் பரிசீலித்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். எனினும் தனது குற்றச்சாட்டுக்கான ஆதாரங்கள் எதையும் பைடன் வெளியிடவில்லை.

உக்ரைன் தலைநகர் கியேவில் உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக புடின் ஆதாரமின்றி குற்றஞ்சாட்டுவது உக்ரைன் மீது அவ்வாறான ஆயுதங்களை பிரயோகிப்பதற்கு முயற்சியாகவே கருத முடிகிறது எனவும் பைடன் குறிப்பிட்டார்.

இந்நிலையில் பைடனின் இந்தக் குற்றச்சாட்டு குறித்து வொஷிங்டனில் உள்ள ரஷ்ய தூதரகத்திடம் கேள்வி எழுப்பியபோதும் உடனடியாக பதிலளிக்கவில்லை என ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் சைபர் தாக்குதல் குறித்து வர்த்தகங்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் பைடன் கூறியுள்ளார். "இதுவும் ரஷ்ய திட்டத்தில் ஓர் அங்கம்" என்று அவர் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த வாரம் ஐரோப்பாவுக்கு பயணமாகி இருக்கும் பைடன் ரஷ்யா மீதான தடைகள் பற்றி தனது கூட்டணி நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். ஏற்கனவே முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ரஷ்யாவுக்கு எதிராக தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ரஷ்யப் படைகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள மரியுபோலில், உக்ரைன் அப்படைகளை "தொடர்ந்து எதிர்த்துவருவதால்", ரஷ்யப்படைகளின் இயக்கம் "நிறுத்தப்பட்டுள்ளதாக" பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உக்ரைனில் சண்டை நடைபெற்று வரும் பகுதிகளிலிருந்து மேலும் 8,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக உக்ரைன் கடந்த திங்கள்கிழமை தெரிவித்தது. அவர்களுள் சுமார் 3,000 பேர் மரியுபோல் நகரத்தைச் சேர்ந்தவர்கள் என, உக்ரைன் துணை பிரதமர் இரினா வெரேஷ்சுக் தெரிவித்தார்.

நாஜிக்களிடம் தப்பியவர் ரஷ்ய தாக்குதலில் பலி

இரண்டாம் உலகப் போரில் நாஜி வதை முகாமில் இருந்து தப்பிய உக்ரைனியர் ஒருவர் கிழக்கு நகரான கார்கிவில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ரஷ்யா நடத்திய ஷெல் தாக்குதலின்போது 96 வயதான பொரிஸ் ரொமன்ட்ஸ் சென்கோ தனது தொடர்மாடி குடியிருப்பில் இருந்ததாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய எல்லையில் இருந்து 30 மைல்கள் தூரத்தில் இருக்கும் கார்கிவ் மீது ரஷ்ய படை கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக ஷெல் தாக்குதல் நடத்தி வருகிறது. அங்கு 500க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக உக்ரைன் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

1926 ஆம் ஆண்டு பிறந்திருக்கும் ரொமன்ட்ஸ்சென்கோ, நாஜிப் படை சோவியத் ஒன்றியத்தின் மீது படையெடுத்தபோது பிடிபட்டு 1942 ஆம் ஆண்டு வதை முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளார். 1945 ஆம் ஆண்டே அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சுவீடன் கல்லூரியில் மாணவன் தாக்குதல்: இருவர் உயிரிழப்பு

தெற்கு சுவீடனில் உள்ள உயர் கல்லூரி ஒன்றில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் இரு பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் அந்தக் கல்லூரியில் கற்கும் 18 வயது மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது 50 வயதுகளில் இருக்கும் இரு பெண்களும் அந்தக் கல்லூரியில் பணியாற்றுபவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றம்சாட்டப்பட்டிருக்கும் அந்த மாணவர் பொலிஸ் அவசரப் பிரிவுக்கு அழைத்து இருவரைக் கொன்றதாக ஒப்புக்கொண்டுள்ளார் என்று உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. அவர் கத்தி மற்றும் கோடாரி ஒன்றை வைத்திருந்ததாக கூறப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இந்த சம்பவம் இடம்பெறும்போது ஆசிரியர் மற்றும் மாணவர்கள் என 50 பேர் வரை கல்லூரியில் இருந்துள்ளனர்.

இந்த சம்பவத்தின் பின்னணி பற்றி கண்டறிய விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீன விமான விபத்து

தகவல் கிடைக்கும் வரை குடும்பத்தினர் காத்திருப்பு

தெற்கு சீனாவில் விபத்துக்குள்ளான விமானத்தில் உயிர் தப்பியோரைத் தேடி நேற்று மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. விமானத்தில் இருந்தவர்களின் உறவினர்கள் அருகில் இருக்கும் விமானநிலையத்தில் புதிய தகவலுக்காக காத்திருந்தனர்.

132 பேருடன் பயணித்த சைனா ஈஸ்டர்ன் பிளைட் எம்.யு. 5735 விமானம் குவான்சி மாகாணத்தின் மலைப்பாங்கான பகுதியில் கடந்த திங்கட்கிழமை விழுந்து நொறுங்கியது. இந்த விபத்து சீனாவில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. இது பற்றி முழுமையான விசாரணைக்கு ஜனாதிபதி ஷி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளார்.

மீட்புப் பணிகளுக்காக விபத்து இடம்பெற்ற பகுதிக்கு நூற்றுக்கணக்கானோர் அனுப்பப்பட்டுள்ளனர். விமானப் பாகங்கள் மற்றும் சிதைவுகள் அந்த மலைப்பிரதேசத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

விமானம் விழுந்த பகுதியில் காட்டுத் தீ ஏற்பட்டிருப்பது மீட்புப் பணிகளிலும் சிரமத்தை ஏற்படுத்தியது. இந்த விபத்தில் எவரும் உயிர் தப்பியிருக்க வாய்ப்பு இல்லை என்று அஞ்சப்படுகிறது.

வேற்று கிரகங்கள் 5000ஐ தாண்டியது

எமது சூரிய குடும்பத்திற்கு அப்பால் 5,000க்கும் அதிகமான வேற்று உலகங்கள் இருப்பதை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா உறுதி செய்துள்ளது.

நாசா தனது வேற்றுக்கிரகப் பட்டியலில் கடந்த திங்கட்கிழமை புதிதாக 65 கிரகங்களை இணைத்ததை அடுத்து இந்த விஞ்ஞான மைல்கல் எட்டப்பட்டுள்ளது. பல்வேறு முறைகளை பயன்படுத்தி கண்டுபிடிக்கப்படும் வேற்றுக்கிரங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுகிறது.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட வேற்றுக் கிரகங்களில் 30 வீதமானவை இராட்சத வாயுக் கோள்களாக இருப்பதோடு 35 வீதமானது பூமியை விடவும் பெரிதான 'சுப்பர் ஏர்த்' வகைகளாகவும், 35 வீதமானது நெப்டியூன் போன்றவைகளாகவும் உள்ளன. இதில் வெறுமனே 4 வீதமானது தான் பூமி அல்லது செவ்வாய் போன்ற பாறை உலகங்களாகக் காணப்படுகின்றன.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கிரகங்களில் இரண்டு பூமியின் அளவு கொண்டதாக இருந்தபோது அங்கு சுமார் 327 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை காணப்படுகிறது.

கொவிட்–19: சீனாவின் வர்த்தக நகரில் பூட்டு

சீனாவில் 4,000க்கும் அதிகமான கொவிட்–19 தொற்று சம்பவங்கள் பதிவானதை அடுத்து ஒன்பது மில்லியன் மக்கள் வாழும் வர்த்தக நகரான ஷென்யங்கில் நேற்று பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டது.

நாடு முழுவதும் 4,770 புதிய தொற்று சம்பவங்கள் பதிவான நிலையில் அதிக பரவல் பதிவானலியோனின் மாகாணத்தில் பொது முடக்கம் அமுல்படுத்தப்படுவதாக சுகாதார நிர்வாகம் அறிவித்துள்ளது.

பி.எம்.டபிள்யு கார் தயாரிப்பு நிறுவனம் உட்பட பல தொழிற்சாலைகளும் இருக்கும் ஷென்யங்கில் நேற்று 47 புதிய தொற்று சம்பவங்கள் பதிவாகி உள்ளன. இதனையடுத்து அனைத்து வீட்டு வளாகங்களையும் மூடியுள்ள நிர்வாகம், 48 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட கொவிட் இல்லை என்ற சோதனை முடிவை பெற்றவர்களே வெளியே வர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே தொடர்ந்து சீனாவின் பல பகுதிகளில் முடக்கநிலையை அறிவிப்பதால் நாட்டின் வளர்ச்சி பாதிப்படையக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 23 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

21 முதல் 24 வரை

சுபஹ்	04.59
லுஹர்	12.19
அஸர்	03.31
மஃரிப்	06.21
இஷா	07.31

இன்றைய சுபதினம்

பிலவ வருடம் மாசி 20

ராகுகாலம் : பகல் : 09.30 - 10.30வரை
சுபநேரம் : காலை : 12.00 - 01.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

பயங்கரவாத தடைச்சட்டத்தில்
மீளாய்வுகள் மேற்கொண்டு தனிச்சட்டமாக்க வேண்டும்

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

பயங்கரவாதத் தடைச்சட்டம் நாட்டுக்கு மிக அவசியமானது. தற்போது அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் எதிர் காலத்தில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அது முழுமையான சட்டமாக கொண்டு வரப்பட வேண்டுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இதனை அரசியல் சூழ்ச்சி என எவரும் கூறுவார்களானால் அது நகைப்பிற்கிடமானதென்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று பயங்கரவாத தடைச்சட்டம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்: 1979ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர் .ஜயவர்த்தன எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த சட்டத்தை கொண்டு வந்தார்.

தற்போது நடைமுறையிலுள்ள பழைய சட்டத்தில் திருத்தம் மட்டுமே கொண்டு வரப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டங்களைப் பார்க்கும் போது, எமது நாட்டிலுள்ள சட்டத்தில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தனியான சட்டமாக இது கொண்டுவரப்பட வேண்டும் என்பதே எனது கருத்து.

06

தவக்கால சிந்தனை

இறைவனுடைய எதிர்பார்ப்பு

வேத கால பதிவுகளிலிருந்து இன்று வரை கத்தோலிக்க மதம் சார்பான தனிப்பட்ட கல்வி பண்பாட்டுப் போக்குகள் சிறப்பாக வளர்தெடுக்கப்படடுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தன்னலமற்ற இயேசுவின் பாதையில் பயணிக்கும் நாம் மனமாற்றத்தின் காலத்தில் மாற்றங்களை உள்வாங்கிக் கொள்வதுடன் அதை வாழவும் பழகிக் கொள்ள வேண்டும். "நான் கற்றுத்தரும் நியமங்கள், முறைகளின் படி ஒழுகுங்கள். உங்கள் வாழ்நாளெல்லாம். நீங்கள் அவற்றை மறக்க வேண்டாம். உங்கள் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் அவற்றை எடுத்துக் கூறுங்கள்" என்ற இறைவார்த்தை பகுதியானது இஸ்ரேல் மக்களின் கடவுளுக்கு உகந்தவாழ்க்கை முறையானது திருச் சட்டத்தின் இன்றியமையாத தன்மையை எடுத்தியம்புகிறது. ஆகவே இது புதிய ஏற்பாட்டு சூழலுக்கு ஏற்றவகையில் அமைத்திருப்பதாக காணப்படுவதை பின்வரும் இறைவார்த்தை கூறி நிற்கின்றது. "விண்ணும், மண்ணும் ஒழிந்து போகும் திருச்சட்டம் யாவும் நிறைவேறும்." இயேசுவின் பொன் மொழி புதிய ஏற்பாட்டுக்கு வழி வகுக்கிறது. "உன்னைப் போல உன் அயலவனை நேசிப்பாயாக" என்ற இறைவார்த்தை அன்பு என்ற கிறிஸ்தவ தத்துவப் பொருளில் இறை அன்பையும் அயலவர் அன்பையும் கூறி, நாம் குரல் எழுப்பும் போதெல்லாம் நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு உள்ளார் எனும் விசுவாசத்துடன் நாம் பயணிக்க, கற்றுக் கொள்ள வழி செய்கிறது.

நாமும் நம் பிள்ளைகளுக்கு நல்லவற்றை கற்றுக் கொடுக்கவும் கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வாக்கிக் கொள்ள வாய்ப்பளித்து, நற்பிரஜைகளை நாட்டிற் குவழங்கும் அன்பு சமூகத்தை வளரக்க அயலவரையும் இணைத்து கூட்டொருக்கியக்க தோழமைக்கு இட்டுச் செல்வோம்.

திருச் சட்டமும் இறை திட்டமும் இறையன்பை நாம் மற்றவர்களோடு பகிர்ந்து, இறையன்பால் கட்டப்பட்ட சமூகமாக வாழ வழிவகுக்கின்றது என்பதில் எந்த ஐயமும் இல்லை.இறைவனுடைய எதிர் பாரப்பும் அதுவாகவே அமைகின்றது.

அருட்கோ.அ. அன்ரனி டனோஷன் (CMF)...

இராசி பலன்கள்

மேஷம்	பொறுமை
ரிஷபம்	பாராட்டு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	முயற்சி
துலாம்	நன்மை
விருச்சிகம்	செலவு
தனுசு	வெற்றி
மகரம்	மறதி
கும்பம்	நிறைவு
மீனம்	சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

மின் விநியோகம் உட்பட மூன்று சேவைகள் அத்தியாவசியமாகின

ஜனாதிபதியால் அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

மின்சார விநியோகம், வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல் தொடர்பான பணிகள், மருத்துவ சிகிச்சை நிலையப் பணிகள் மற்றும் அதற்கு நிகரான பணிகள் என்பவற்றை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே, இது தொடர்பில் ஜனாதிபதியினால் விஷேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த போதும், அந்த அறிவிப்பு மீளவும் வெளியிடப்பட்டுள்ளது. மின்சார விநியோகம் மற்றும் வைத்தியசாலை சேவைகள் உள்ளிட்ட அதனுடன் தொடர்புடைய சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஏற்கனவே 2022.02.11 என திகதியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டிருந்தது. தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார சேவைகளைச் சேர்ந்த 18 தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

மின்சாரம், நீர் கட்டண அதிகரிப்பு
அமைச்சரவையில் எதுவும் ஆராயப்படவில்லை

(ஷம்ஸ் பாஹிம்)

மின்சாரம் மற்றும் நீர் கட்டண அதிகரிப்பு தொடர்பில் நேற்று (22) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எவ்வித கலந்துரையாடலும் இடம் பெறவில்லையென இணை அமைச்சரவை பேச்சாளர் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

ரயில் கட்டணங்கள் எதிர்வரும் காலங்களில் அதிகரிக்கப்படலாம் என போக்குவரத்து அமைச்சர் கடந்த அமைச்சரவை கூட்டத்தில் தெரிவித்ததாக, அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். எதிர்வரும் சில நாட்களுக்குள் இலங்கையில் நிலவும் எரிவாயு தட்டுப்பாடு முழுமையாக தீர்க்கப்படுமென நம்புகிறோம். இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட இரண்டு எரிவாயு கப்பல்களையும் விடுவிப்பதற்கான கடன் பத்திரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் தினங்களில் எரிவாயு பிரச்சினை தீரும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த செயல்பாடுகள் அனைத்தும் டீசல் மற்றும் எரிபொருள் விலை பிரச்சினையுடன் தொடர்புபட்டவை. ரயில்வே துறை, போக்குவரத்து சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை ஆகிய அனைத்தும் கடுமையான நஷ்டத்தை சந்தித்துள்ளன. நாட்டு மக்கள் இந்த இழப்பைச் சுமக்க நேரிட்டுள்ளது.இவை ஒரு நல்ல நிதி நிலையை அடைவதில் கவனமாக இருக்க வேண்டும். மக்களுக்கு சலுகை விலையில் சேவைகளை வழங்குவதுடன், நிறுவனத்தைப் பாதுகாக்கவும் இந்த நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன என்றார்.

தினகரன் தௌபீக்கின் தாய் மாமனார் காலமானார்

அக்கரைப்பற்று 3ஆம் குறிச்சியைச் சேர்ந்த மொஹமட் முஸ்தபா (வயது 77, முன்னாள் கிராம சேவகர்) நேற்று காலமானார்.

இவர் முன்னாள் ஊடகத் துறை பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீனின் ஒன்றுவிட்ட சகோதரரும் தினகரன் உதவி ஆசிரியர் ஏ.ஜி.எம். தௌபீக்கின் தாய் மாமனாருமாவார். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவரின் ஜனாஸா இன்று (23) அஸர் தொழுகையின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

அமைச்சர் காமினி லொக்குகேயின்
சாரதியை கொலை செய்த பிரதான சந்தேக நபர் கைது

அமைச்சர் காமினி லொக்குகேயின் சாரதியை தாக்கி கொலை செய்ததாக கூறப்படும் பிரதான சந்தேகநபரை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

களுபோவில பிரதேசத்தில் வைத்து இந்த நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அமைச்சர் காமினி லொக்குகேயின் வாகன சாரதி ஒருவர் தனிப்பட்ட பகையால் பிலியந்தலை – மாவிட்ட பகுதியில் நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கெஸ்பேவ – மாவித்தர பகுதியைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் தலைமையில் சர்வகட்சி மாநாடு இன்று

சு.க. உட்பட முக்கிய கட்சிகள் பங்கேற்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வுகாணும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் சர்வகட்சி மாநாடொன்று இன்றைய தினம் கொழும்பில் நடைபெறுகிறது.

இந்த மாநாட்டிற்காக அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைதொடர்பில் விரிவாக ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் வகையிலேயே, மேற்படி மாநாடு கூட்டப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பல கட்சிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளன.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 10 கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மேற்படி மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லையென தெரிவித்துள்ளனர். அதுதொடர்பில் அமைச்சர் வாசு தேவ நாணயக்கார முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மம்பில ஆகியோர் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். இந்த மாநாட்டில் தாம், கலந்துகொள்ளப் போவதில்லை. எனினும் தமது சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான அதுரலிய ரதன தேரர் மற்றும் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.(ஸ)

மக்களுக்கு சேவையாற்றும் ஊழியர்களை பாதுகாக்கவே எரிபொருள் நிலையங்களுக்கு பாதுகாப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில், நேற்று முதல் இராணுவத்தினர் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

எரிபொருள் விநியோகத்தை மேற்பார்வை செய்வதற்கும், மக்களை பாதுகாப்பதற்குமே இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் நிலையங்களில், பொதுமக்கள் நீண்ட வரிசையில் நிற்கின்றனர். இதனால் எழும் சர்ச்சைகளும் ஏற்படுகின்றன.

06

தினகரன் வாரமஞ்சரி வானவில்

மிகைக் கட்டண வரி சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணல்ல

உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சபாநாயகர் அறிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

"மிகைக் கட்டண வரி" சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரண்படாததால் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால், அதனை நிறைவேற்ற முடியுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதுள்ளதாக சபாநாயகர் நேற்று சபையில் அறிவித்துள்ளார்.

சபாநாயகரின் மேற்படி அறிக்கையை பிரதி சபாநாயகர் நேற்று சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்றுக் காலை 10 மணிக்கு கூடிய போது சபாநாயகர் அறிவிப்பின்போதே இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியிடப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

06

யாழ்."நீதிக்கான அணுகல்" நடமாடும் சேவையின் விஷேட மீளாய்வு உயர்மட்ட கலந்துரையாடல்

வட மாகாண மக்களின் சட்ட ரீதியான சிக்கல்களை தீர்ப்பது தொடர்பாக இடம்பெற்ற "நீதிக்கான அணுகல்" நடமாடும் சேவையின், மீளாய்வு விஷேட உயர்மட்ட கலந்துரையாடல் (21) வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், நீதி அமைச்சர் அலி சப்ரி, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற "நீதிக்கான அணுகல்" நடமாடும் சேவையில் கிடைக்கப்பெற்ற வடமாகாண மக்களின் காணி, வனவள, வனஜீவராசிகள்,

06

பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும்

சபையில் சுமந்திரன் எம் பி.

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டுமென்றும் நாட்டில் அனைத்து இன, மத மக்களையும் சந்தித்து அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம் பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த சட்டத்தினால் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வருடக் கணக்கில் கடுழிய சிறைத்தண்டனை அனுபவித்து வருவதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தச் சட்டமூலம்

06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	183.25	192.37
கனடியன் டொலர்	195.26	204.12
யூரோ	278.29	288.81
ஜப்பான் யென்	2.1570	2.2543
சிங்கப்பூர் டொலர்	185.58	192.47
ஸ்டேலிங் பவுன்ஸ்	263.51	271.91
சுவிஸ் பிராங்க்	270.59	281.79
அமெரிக்க டொலர்	249.96	259.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	608.26	கட்டார் ரியால்	62.81
குவைத் டினார்	755.13	சவூதி ரியால்	61.12
ஓமான் ரியால்	595.66	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	62.43

தினகரன்
THINAKARAN
நிகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 09ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 19

குறள் தரும் சிந்தனை

பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்

இரக்க உணர்வு, அன்பு எனும் கண்ணோட்டத்துடன் பொருந்தி வராத கண்ணும், பாடலுடன் பொருந்தி வராத இசையும் பயன் தராதவையாகும்.

மக்கள் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான மற்றொரு ஏற்பாடு

இலங்கையரின் பிரதான உணவுப் பொருள் அரிசியாகும். இந்நாட்டு மக்களின் உணவுப் பழக்கத்துடன் இரண்டறக் கலந்துள்ள ஒன்றாக விளங்குகிறது அரிசி. ஆரம்ப காலம் முதல் விவசாய நாடாக விளங்கும் இலங்கையானது, நெற்செய்கைக்கு அவசியமான சீதோஷண நிலையையும் இயற்கை வளத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இதன் பயனாக இந்நாட்டின் பிரதான உணவு உற்பத்தி பொருள் என்ற இடத்தை அரிசி பெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதேநேரம், ஒரு காலத்தில் தெற்காசியாவின் நெற்களஞ்சியமாக விளங்கிய இலங்கை, வெளி நாடுகளுக்கு கூட அரிசியை ஏற்றுமதி செய்த வரலாற்றைக் கொண்டுள்ளது. நாலாபுறமும் இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்டுள்ள போதிலும், தனக்கேயுரிய தனித்துவம் மிக்க விவசாய நீர்ப்பாசன நாகரிகத்தை இந்நாடு கட்டியெழுப்பியது. அந்த நாகரிகத்தின் அடித்தளமாகவும் நெற்செய்கையே விளங்கியது.

ஆனபோதிலும் போர்த்துக்கேயரின் வருகையோடு ஆரம்பமான ஐரோப்பியரின் ஏகாதிப்பத்தியம் 443 வருடங்கள் இந்நாட்டில் நீடித்தது. அதன் விளைவாக இந்நாடு சந்தித்த பாதிப்புகளும் இழப்புகளும் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றில் இந்நாட்டுக்கே உரித்தான நீர்ப்பாசன நாகரிகம் பல வீனமடைந்ததோடு நெற்செய்கையும் கூட வீழ்ச்சியடைந்தது.

இருந்தும் கூட இந்நாட்டினரின் பிரதான உணவாக அரிசியே இற்றை வரையும் விளங்கிக் கொண்டிருக்கின்றது. மூன்று வேளையும் அரிசியைப் பிரதான உணவாகக் கொள்பவர்கள் நாட்டின் பல பிரதேசங்களிலும் காணப்படுகின்றனர். இந்நாட்டினரின் தனிநபர் அரிசி நுகர்வு வருடமொன்றுக்கு 93 கிலோ கிராமாக உள்ளது. அந்த வகையில் தற்போது இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசியில் 90 வீதத்திற்கும் மேற்பட்ட அரிசி உள்நாட்டு நுகர்வுக்கே பயன்படுத்தப்படுகின்றது.

தற்போது 21.8 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் இந்நாட்டில் 708,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. அதுவும் சிறுபோகம், பெரும்போகம் என்ற இரண்டு போகங்களும் பெரும்பாலும் செய்கை பண்ணப்படுகின்றன. 18 இலட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளின் வாழ்வாதார பயிர்ச்செய்கையாக விளங்கும் நெற்செய்கையில் நாட்டின் மொத்த தொழிலாளர் படையில் 30 வீதத்திற்கும் மேற்பட்டோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்டுள்ளனர்.

2019 ஆண்டின் இறுதிப் பகுதியில் சீனாவில் தோற்றம் பெற்று உலகம் முழுவதும் குறுகிய காலப் பகுதியில் பரவிய கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார சவாலுக்கு இந்நாடும் முகம் கொடுத்திருக்கின்றது. அதன் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடிகளின் காரணமாக பல பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அவற்றில் அரிசியும் அடங்கியுள்ளது. இது மக்களின் வாழ்வில் பெரிதும் தாக்கம் செலுத்தக் கூடியதொரு விவகாரமாகும்.

மூன்று வேளையும் அரிசியைப் பிரதான உணவாகக் கொள்ளும் மக்கள் வாழும் நாட்டில் இது முக்கியத்துவத்துக்குரிய விடயமுமாவதால் நாட்டின் எல்லா மட்டத்தினரதும் அவதானத்தைப் பெற்றுள்ளது.

அந்த வகையில் நாட்டு மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வரும் அரசாங்கம் இவ்விடயத்திலும் விஷேட கவனம் செலுத்தியுள்ளது. இந்நிலையில் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்ட அமைச்சரவைப் பத்திரமொன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் போவதாகக் குறிப்பிட்டுள்ள விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, எதிர்வரும் சிங்கள தமிழ் புத்தண்டு காலப் பகுதியில் நாட்டு மக்கள் அரிசியைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வர்' என்று கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கையானது கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாகியுள்ள மக்களுக்கு பாரிய நிவாரணமாக அமையும். தற்போதைய சூழலில் மக்களின் எதிர்பார்ப்பும் அதுவாகவே உள்ளது.

அரிசியைப் பிரதான உணவாகக் கொள்ளும் மக்களுக்கு புத்தாண்டு காலப் பகுதியிலும் அரிசியின் தேவை பெரிதும் அதிகமாகவே இருக்கும். அதனால் மக்கள் நியாயமான குறைந்த விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது மிகவும் அவசியமான விடயமாகும். அந்த அடிப்படையில் அமைச்சர் இந்த அறிவிப்பை விடுத்திருக்கின்றார். இதனை நம்பிக்கை தரும் ஆறுதலான அறிவிப்பாகவே மக்கள் பார்க்கின்றனர்.

ஆகவே கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார சவால் தோற்றுவித்துள்ள நெருக்கடிகள் மக்களுக்கு சுமையாகவும் தாக்கமாகவும் அமைவதைத் தவிர்ப்பதில் அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு இது மற்றொரு சான்று என்பதில் ஐயமில்லை.

editor.tkn@lakehouse.lk

இலங்கை இதழியல் கல்லூரியின் 19ஆவது ஆண்டு நிறைவுவிழா

இலங்கை இதழியல் கல்லூரியானது பொறுப்புணர்வு மிக்க ஊடகத்துறையின் முக்கியத்துவத்தை ஊக்குவிக்கும் மற்றும் தகவலறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு நாட்டின் பிரஜைகளை ஊக்குவிப்பதில் அதன் பங்களிப்பையும் ஊக்குவிக்கும் வகையிலான பல்வேறு நிகழ்வுகளுடன் தனது 19ஆவது வருட நிறைவைக் கொண்டாடுகின்றது.

இலங்கை இதழியல் கல்லூரியானது, 2004ஆம் ஆண்டு டிப்ளோமா கற்கைநெறியை ஆரம்பித்தது முதல், இன்று வரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்களை உருவாக்கியுள்ளதோடு, ஊடகத்துறையினரால் நடத்தப்படும் ஒரே இதழியல் பயிற்சி நிறுவனமாகும்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் ஆதரவுள்ளதால், இதழியல் கல்லூரிக்கு ஊடகத் துறை சார்ந்த வலுவான தொடர்புகள் உள்ளன.

இதழியல் கல்லூரியானது மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு சமூக ஊடகம், பொது இராஜதந்திர தொழில்முறை ஆங்கிலம், மொழிபெயர்ப்பு, ஊடகத்துறை சார்ந்த கற்கை நெறிகள் மற்றும் நிபுணத்துவ தொடர்பாடல் போன்ற பாடத்திட்டங்களின் குறுகிய கால சான்றிதழ் பயிற்சிநெறிகளையும் வழங்குகின்றது.

இந்த ஆண்டுநிறைவு விழாவை முன்னிட்டு பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, பணிபுரியும் ஊடகவியலாளர்கள், ஊடகவியல் மாணவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகளை ஒன்றுதிரட்டி, இவ்வாறான நெருக்கடியான சூழலில் ஊடகங்கள் எவ்வாறு சவால்களை எதிர்கொள்கின்றன என்பது பற்றிய தொடர் கலந்துரையாடல்களை முன்னெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊடகப் பயிற்சி வழங்குவதில் முன்னணியில் உள்ள இதழியல் கல்லூரியானது, அதன் பழைய மாணவர்களுக்கு பிரதான ஊடகங்கள், மாற்று ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் தொடர்புபடும் வகையிலான சமூக ஊடகத் தளங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றது. மக்களது கருத்துக்களுக்கு செவிசாய்த்து மதிப்பளிக்கக் கூடிய ஊடக கலாசாரத்திற்கு இளைஞர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது பற்றிய கலந்துரையாடலை இதன் மூலம் உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மேலும், சமூக உரையாடலுக்கு வழிவகுக்கும் மற்றும் உள்ளடங்கல் வழிமுறையாகக் காணப்படும் இணைய வானொலியில் ஆர்வமுள்ள சுமார் எழுபது இளைஞர்களுக்கு அண்மையில் பயிற்சியளிக்கப்பட்டதோடு, இதழியல் கல்லூரி மாணவர்களால் நிர்வகித்து நடத்தப்படும் இணைய வானொலி ஒலிபரப்பு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதழில் கல்லூரியின் பாடத்திட்டமானது, செயற்பாட்டு ரீதியானதாகவும், ஆய்வின் மூலம் தகவலளிக்கப்பட்டதாகவும் மற்றும் துறைசார் நிபுணர்களால் தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யப்படுவதாலும் மிகவும் தனித்துவமானது. கல்லூரியானது மூன்று கருப்பொருள் ஆய்வுப் பகுதிகளை அடையாளம் கண்டுள்ளது. அவையாவன உண்மைச் சரிபார்ப்பு, பால்நிலை மற்றும் புதிய ஊடகங்களின் பயன்பாடு ஆகியனவாகும். பாடத்திட்டத்தை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஆய்வுத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்லூரியில் தொலைக்காட்சி மற்றும் வானொலிக்கான கலையக வசதிகள் உள்ளதால், டிப்ளோமா கற்கையை தொடரும் மாணவர்கள் செயற்பாட்டு பயிற்சியையும் பெற்றுக் கொள்ளலாம். அத்தோடு, விரிவுரையாளர்கள் யாவரும் ஊடகத்துறையில் திறன்வாய்ந்தவர்கள் ஆவர். டிப்ளோமா பாடத்திட்டத்தை தொடரும் மாணவர்களுக்கு, இத்துறையின் இயக்கவியலை புரிந்துகொள்ள உதவும் வகையில் ஊடக நிறுவனமொன்றில் விரிவான மூன்று மாதகால பயிற்சி வழங்கப்படுகின்றது.

இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரல் மார்ச் மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. மேலதிக தகவல்கள் எமது இணையத்தளத்தில் உள்ளன.

நேர்முகத் தேர்வுகள் மற்றும் மேலதிக தகவல்களுக்கு:

எம்.ஜே.ஆர். டேவிட்
(தலைவர், இலங்கை இதழியல் கல்லூரி)
இல. 96, பேர்னாட் டி சொய்சா மாவத்தை
கொழும்பு_ 05
தொலைபேசி: 0094 115353635
மின்னஞ்சல்: info@slcj.lk
இணையம்: www.slcj.lk

இஸ்லாமாபாத்தில் இஸ்லாமிய வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு

பாகிஸ்தானுடன் முஸ்லிம்கள் கொண்டுள்ள ஒற்றுமையின் சிறந்ததொரு வெளிப்பாடு

பாகிஸ்தான் சுதந்திரம் பெற்று 75 ஆவது ஆண்டில், இஸ்லாமாபாத்தில் இஸ்லாமிய வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது பாகிஸ்தானுடனான முஸ்லிம்களின் ஒற்றுமையின் சிறந்ததொரு வெளிப்பாடாகும். இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பானது, உலகின் இரண்டாவது பெரிய அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். இஸ்லாமிய உலகின் ஒட்டுமொத்த குரலாகவும் அது செயற்படுகிறது.

இது சர்வதேச அமைதி, பாதுகாப்பு, நாகரிகங்கள், கலாசாரங்கள், மதங்களுக்கு இடையே புரிதல்கள் மற்றும் உரையாடல்களை மேம்படுத்தவும், அமைதி, நீதி மற்றும் பரஸ்பர மரியாதை போன்ற விழுமியங்களை மேம்படுத்தவும் முயன்று வருகிறது.

உலக வரலாற்றில் ஒரு முக்கியமான தருணத்தில் இஸ்லாமாபாத்தில் இந்த மாநாடு நடைபெறுகிறது. இஸ்லாமிய நாடுகள் புதிய யதார்த்தங்களை கவனமாக கையாள வேண்டும். பெரும் அதிகாரப் போட்டிகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதன் மூலமும், இஸ்லாத்தின் உள்ளே காணப்படும் மோதல்களைத் தீர்ப்பதன் மூலமும் மற்றும் வெளிநாட்டு தலையீட்டைத் தடுப்பதன் மூலமும், இஸ்லாமிய நாடுகள் தங்கள் சொந்த இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மேம்படுத்தி பாதுகாக்க கடமைப்பட்டுள்ளன.

இரண்டாவதாக, நீதியுடன் கூடிய சமாதானத்தை ஆதரிக்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பானது, பாலஸ்தீனம் மற்றும் காஷ்மீரின் சுயநிர்ணய உரிமை மற்றும் அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெறுவதற்கான நியாயமான காரணங்களை தொடர்ந்து ஆதரிக்க வேண்டும்.

இந்தியா உட்பட அனைத்து அண்டை நாடுகளுடனும் நாங்கள் நட்புறவை பேணவே விரும்புகிறோம். மக்கள் தொகை மாற்றங்கள் உட்பட, ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீரில் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளை நிறுத்துவதன் மூலமும், அனைத்து மனித உரிமை மீறல்களைத் நிறுத்துவதன் மூலமும், பாகிஸ்தான் மற்றும் காஷ்மீரிகளுடன் நேர்மையான மற்றும் முடிவு சார்ந்த உரையாடலுக்கு உகந்த சூழ்நிலையை இந்தியா ஏற்படுத்த வேண்டும்.

40 ஆண்டுகளுக்குப் பிறகு, ஆப்கானிஸ்தான் மற்றும் பிராந்தியத்தில் அமைதி மற்றும பாதுகாப்பை மீட்டெடுக்க ஒரு சிறந்த வாய்ப்பு காணப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் மனிதாபிமான நெருக்கடி மற்றும் பொருளாதார சரிவைத் தவிர்க்க நாம் கூட்டாகச் செயல்பட வேண்டும். மேலும், மனித உரிமைகள், குறிப்பாக பெண்களின் உரிமைகள் ஆகியற்றை ஊக்குவிக்கவும், ஆப்கானிஸ்தானிலிருந்து பயங்கரவாத அச்சுறுத்தலை அகற்ற பயனுள்ள திட்டங்களை தீட்டவும், ஆப்கானிஸ்தான் அதிகாரிகளுடன் தீவிரமாக ஈடுபாடு கொள்ள வேண்டியிருக்கிறது.

இம்ரான் கான்
பாகிஸ்தான் பிரதமர்

சிரியா, லிபியா மற்றும் யேமன் ஆகிய நாடுகளில் உள்ள மோதல்களை சம்பந்தப்பட்ட இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்பின் மூலம் தீர்ப்பதும், இந்த மோதல்களில் இருந்து முஸ்லீம் அல்லாதவர்களின் தலையீட்டை விலக்கவதும் மிகவும் முக்கிய அம்சங்களாகும். முஸ்லிம் நாடுகளுக்கிடையில் அல்லது முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாத நாடுகளுக்கிடையில் அல்லது முஸ்லிம் அல்லாத நாடுகளுக்கிடையில் மோதல்கள் எழும்போதெல்லாம், பயனுள்ள பேச்சுவார்த்தைகள் மூலம் மோதலைத் தீர்ப்பதற்கான, அதன் அமைதி மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பை நிறுவுவது குறித்து இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு தீவிரமாக சிந்திக்க வேண்டியிருக்கிறது.

கொவிட்19 தொற்றுலிருந்து மீள்வதற்கும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் போதுமான வளங்களை திரட்ட இஸ்லாமிய நாடுகள் மற்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டும். சர்வதேச நிதி, வர்த்தகம் மற்றும் வரிவிதிப்பு முறைமை ஆகியவற்றில் நியாயமான மற்றும் சமமான செயற்பாட்டினை நாங்கள் கோர கடமைப்பட்டுள்ளோம். ஊழல், மோசடி, வரி நீக்கம் ஆகியவற்றின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் நமது நாடுகளில் இருந்து வெளியேறும் பில்லியன் கணக்கான பணத்தினை நாம் தடுத்து நமது நாட்டுக்குள் மீளப்பெற வேண்டும்.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பானது, எதிர்காலத்தில் அறிவு சார்ந்த, ஒருங்கிணைந்த மற்றும் டிஜிட்டல் ரீதியான உலகளாவிய பொருளாதாரத தரத்திற்கு தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் நிதி ஆகியவற்றில் உள்ள போக்குகளை ஆய்வு செய்வதற்கும் தெளிவான நீண்ட கால மூலோபாயத்தை பரிந்துரைக்கவும் இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான ஒரு அமைப்பின் கீழ் எதிர்காலத்திற்கான ஆணையம் ஒன்று நிறுவப்பட வேண்டும்.

மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய அனைத்து நாடுகளுடனும் பொருளாதார ஒத்துழைப்பை நாம் ஊக்குவிக்க வேண்டும். அதே சமயம், இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி மற்றும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் பிற நிறுவனங்களைப் பயன்படுத்தி, இஸ்லாமிய நாடுகளுக்கு இடையே உள்ள பொருளாதார சிக்கல்களை சரி செய்யவும் கடமைப்பட்டுள்ளோம். இஸ்லாம் மீதான உலகளாவிய மரியாதையை நாம் மேம்படுத்த வேண்டும். மேலும்,உலகில் வாழும் அனைத்து முஸ்லிமும் பாதுகாப்பாக வாழ்வதை உறுதி செய்ய வேண்டும். இஸ்லாமோ, நமது புனித அல்குர்ஆனோ அல்லது நமது இறைத்தூதர் அவர்களோ இழிவுபடுத்தப்படுவதை நாம் கடுமையாக எதிர்க்க வேண்டும்.

அனைத்து மதங்களையும் மதித்தலை ஊக்கப்படுத்துதல், நாகரிகங்களுக்கிடையில் உரையாடலை மேம்படுத்துதல் ஆகியவை மூலம் அமைதியான சகவாழ்வு மற்றும் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை மேம்படுத்த நாம் தொடர்ந்து பாடுபடுவோம்.

பீகாரில் நிர்மாணிக்கப்படவுள்ள உலகின் மிகப் பெரிய கோயில்

உலகின் மிகப் பெரிய கோயிலாக விராட் ராமாயண் மந்தீர் இந்தியாவின் பீகாரில் கட்டப்பட உள்ளது. இந்த கோயிலுக்கு முஸ்லிம் குடும்பத்தின் சார்பில் ரூபா 2.5 கோடி மதிப்பிலான நிலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் அனைவரையும் நெகிழ்ச்சியடைய செய்துள்ளது.

இந்தியாவில் சகிப்புத்தன்மை குறைந்து வருவதாகவும், வெறுப்புணர்வு அதிகரித்து வருவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. மேலும் மொழி, இனம், மதத்தின் அடிப்படையில் மக்களை சில சக்திகள் பிரிக்க முயற்சிப்பதாகவும் அரசியல்வாதிகள் ஒருவரையொருவர் பகிரங்கமாக குற்றம்சாட்டி வருகின்றனர். இருப்பினும் நாட்டில் பொதுமக்களிடம் இன்னும் சகோதரத்துவம், மனிதநேயம் என்பது மறைந்து போகவில்லை. சாதி, மதம், இனம் பாகுபாடுகளை மறந்து ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி வருகின்றனர். இது இந்தியாவின் இறையாண்மையை காக்கும் வகையில் உள்ளது என்று நடுநிலையில் சிந்திப்போர் கூறுகின்றனர்.

இந்நிலையில், பீகாரில் விராட் ராமாயண் மந்தீர்(Virat Ramayan Mandir) எனும் கோயில் பிரமாண்டமாக கட்டப்பட உள்ளது. உலகில் மிகப் பெரிய கோயிலாக இதை கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. பீகார் மாநிலம் கிழக்கு சாம்பரான் மாவட்டம் கைத்வாலியா பகுதியில் இந்த கோயில் அமைய உள்ளது. அதன்படி கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட் புத்த ஆலயத்தை விட இது பெரிதாக அமைகிறது. இந்த கோயில் கட்ட ரூ.2.5 கோடி மதிப்பிலான நிலத்தை முஸ்லிம் குடும்பம் ஒன்று தானமாக வழங்கியுள்ளது. அதாவது தொழிலதிபர் இஸ்தியாக் அகமது கான் என்பவர் தனது குடும்பத்தினரின் பெயரில் உள்ள ரூ.2.5 கோடி மதிப்பிலான நிலத்தை கோயில் கட்ட தானமாக வழங்கியுள்ளார்.

இது தொடர்பான பத்திரப்பதிவு கேசாரியாவில் நடந்தது. இதுபற்றி இஸ்தியாக் அகமது கான் கூறுகையில், "இந்தக் கிராமத்தில் பெரும்பாலான நிலங்கள் எங்கள் குடும்பத்துக்குச் சொந்தமானவை. இந்தக் கோயில் கட்டுவதற்கு பங்களிப்பு செய்வது என்பது எனது பொறுப்பு. இதுதான் எங்கள் குடும்பத்தின் பாரம்பரியமாக உள்ளது. நிலம் தானமாக வழங்கியதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார்.

கிழக்கு சாம்பரான் பகுதியில் வசிக்கும் இஸ்தியாக் அகமது கான் கவுகாத்தியில் தொழில் செய்து வருகிறார். இதுகுறித்து பாட்னாவை தலைமையிடமாக கொண்டு செய்படும் மகாவீர் மந்தீர் அறக்கட்டளையின் தலைவர் ஆச்சாரியா கிஷோர் குணால் கூறுகையில், "விராட் ராமாயண் மந்தீர் கட்ட இஸ்தியாக் அகமது கான் குடும்பத்தினர் தங்களது நிலத்தை தானமாக வழங்கியுள்ளனர். கோயில் கட்ட உதவி செய்வதாக இஸ்தியாக் அகமது கான் மற்றும்அவரது குடும்பத்தினர் கூறினர். தற்போது அதை நிறைவேற்றி உள்ளனர். சமூக நல்லிணக்கத்துக்கு இஸ்தியாக் அகமது கான் சிறந்த உதாரணமாக உள்ளார். முஸ்லிம் மக்களின் உதவி இல்லாவிட்டால் இந்த கனவு திட்டம் உண்மையாக வராது. இஸ்தியாக் அகமது கானை தொடர்ந்து பலர் கோயிலுக்கு தானமாக நிலங்கள் வழங்கியுள்ளனர். தற்போது வரை 100 ஏக்கர் நிலம் அறக்கட்டளையிடம் உள்ளது. இந்தக் கோயில் ரூபா 500 கோடி மதிப்பில் உருவாக்கப்பட உள்ளது. இந்த கோயில் 270 அடி உயரம், 1080 அடி நீளம், 540 அடி அகலத்தில் அமைய உள்ளது" என்றார்.

ரூபா 2.5 கோடி பெறுமதியான நிலத்தை அன்பளிப்பாக வழங்கிய முஸ்லிம் குடும்பத்துக்கு பாராட்டுகள்

புராதன காலம் தொட்டு தொடருகின்ற இலங்கை–இந்திய பூர்வீக நட்புறவு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவு பூர்வீக காலம் தொட்டு நிலவி வருகின்றது. விஜயனின் வருகையுடன் இந்தியாவுடனான நட்புறவு இலங்கையில் ஆரம்பமானதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். விஜயன் தனது 700 தோழர்களுடன் இலங்கையில் வந்திறங்கி, நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் குடியேற்றங்களை அமைக்கத் தொடங்கியதில் இருந்து இலங்கையில் இந்தியத் தொடர்பு ஆரம்பமாகி விட்டதென்பதே வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும்.

இலங்கையின் பிரதான நதிக்கரையோரங்களை அண்டியதாக விஜயனின் தோழர்களால் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. அதன் பின்னரே இலங்கையில் நீர்வள நாகரிகம் தோற்றம் பெற்றது. இந்தியாவில் அசோகச் சக்கரவர்த்தியின் அரசாட்சியின் போது இலங்கையில் பௌத்தம் பரவியது. பௌத்த சமயத்தின் ஊடாக இலங்கையில் சிறப்பான கலாசார விழுமியங்கள் ஓங்கத் தொடங்கின.

இலங்கையில் நீர்வள நாகரிகம் மாத்திரமன்றி உயர்வான கட்டடக் கலைகள், சிற்பக்கலை, ஓவியக்கலை, பௌத்த மதத்தின் சிறப்பான கலாசார பண்பாடுகள் அனைத்தும் இந்தியாவுடனான நட்புறவின் வாயிலாகவே உண்டாகின. அன்றைய இருதரப்பு தொடர்புகள் அத்துடன் நின்று விடவில்லை. அத்தொடர்புகள் இன்று வரை தொடர்ந்து கொண்டே வருகின்றன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே வரலாற்று ரீதியாக காலத்துக்குக் காலம் இராஜதந்திர ரீதியில் சிறுசிறு கசப்புணர்வுகள் தோன்றியிருக்கின்றன. மன்னராட்சிக் காலத்தின் போது மட்டுமன்றி ஜனநாயக அரசுகள் தோற்றம் பெற்றதன் பின்னரும் இவ்வாறான கசப்புணர்வுகள் இரு நாடுகளுக்குமிடையில் தோன்றியுள்ளன. ஆனால் அக்கசப்புகள் ஒருபோதும் நீடித்ததில்லை. காலப்போக்கில் அக்கசப்புகள் மறைந்து விடுவதுண்டு. இதுதான் இரு நாட்டு உறவுகளில் வழமையாகும்.

இந்திய தேசமானது இலங்கையை ஒருபோதுமே வேற்றுநாடாகப் பார்த்ததில்லை. 'சிறிய சகோதரன்' என்ற நேச உணர்வுடனேயே இலங்கையை இந்தியா நோக்குகின்றது.

இலங்கையின் அனைத்து நெருக்கடி வேளையிலும் நேசக்கரம் நீட்டும் அயல்தேசம் பாரதம்

இலங்கைக்கு எந்த விதத்திலாவது நெருக்கடிகள் தோன்றினாலும் முதன் முதலில் வந்து கைகொடுக்கும் நாடாகவே இந்தியா உள்ளது. கொவிட் தொற்று காரணமாக இலங்கை நிலைகுலைந்து நின்ற போதும், பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்கித் தவித்த போதும் இந்தியா அளித்த உதவிகள் அளப்பரியனவாகும்.

அதுமாத்திரமன்றி, இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட பல்வேறு பகுதிகளிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களையும் இதற்கான உதாரணமாகக் கொள்ளலாம். இலங்கையின் 'மூத்த சகோதரன்' பாத்திரத்தில் நின்று இலங்கைக்கு இந்தியா உதவிகளை வழங்கி வருகின்றது. இலங்கைக்கு நெருக்கடி ஏற்படுகின்ற எந்த வேளையிலும் இந்தியா கைகொடுப்பதற்கு தயங்கப் போவதில்லை என்பதையே இந்த வரலாற்று நிகழ்வுகள் எமக்கு உணர்த்துகின்றன. நெருக்கடி வேளையில் தோள் கொடுக்கும் தனது நட்புறவுக் கொள்கையில் இருந்து இந்தியா என்றுமே பின்வாங்கியதில்லை என்பது இன்றைய காலத்திலும் நன்கு புரிகின்றது.

தற்போதைய இக்கட்டான நிலைமையில் இலங்கைக்கு இந்தியா மீண்டும் கைகொடுத்து உதவியுள்ளது. இந்தியா இப்போது இலங்கைக்கு வழங்கியுள்ள கடனுதவியை வரலாற்று ரீதியான நட்புறவின் முக்கிய அடையாளமாகவே நாம் கருத வேண்டும்.

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை இலங்கைக்கு இந்தியா கடந்த வாரம் வழங்கியுள்ளது. இலங்கையை நிதி நெருக்கடியில் இருந்து மீட்பதற்கும், மருந்து, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கும் இந்தியா இந்த ஒரு பில்லியன் டொலர் கடனை வழங்கியது. இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியை ஈடுகட்டும் வகையில், இந்தியாவுடன் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ புதுடில்லி சென்றிருந்தார். இரண்டு நாள் பயணமாக இந்தியா சென்றிருந்த பசில் ராஜபக்ஷ, மத்திய அரசுடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அதனையடுத்தே இந்திய கடனுதவி கைச்சாத்தானது.

இந்தியா ஏற்கனவே கடந்த மாதம் இலங்கைக்கு 3,750 கோடி ரூபா கடனுதவி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தொகையை கொண்டு இந்தியாவிடம் இலங்கை எரிபொருட்களை வாங்கியிருந்தது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நட்புறவில் முன்னர் சில காலம் இடைவெளியொன்று நிலவியதுண்டு. ஆனாலும் அந்த இடைவெளியானது சீர்செய்யப்பட்டுள்ளதென்பதையே இந்தியாவின் இன்றைய உதவி தெளிவுபடுத்துவதாக இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

அயல்நாட்டு நெருங்கிய நண்பராக, அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதில் இந்தியா முன்னிற்குமென்று பிரதமர் நரேந்திர மோடி நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது தெரிவித்திருந்ததை இங்கு நினைவுபடுத்துதல் பொருத்தமாகும்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது இரு தரப்பு நெருக்கடிகள் தொடர்பிலும், உதவிகளை வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விவசாயம், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி, சுற்றுலா மற்றும் மீன்பிடித்துறை தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப்பொருள், மருந்து மற்றும் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு இந்தியா கடனுதவியை வழங்கல், அந்நிய செலாவணியை அதிகரிக்க Swap ஒத்துழைப்பு வழங்கல், திருகோணமலை எண்ணெய்க்குத கட்டமைப்பை நவீனமயப்படுத்தல் மற்றும் இலங்கையில் இந்திய முதலீட்டு வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் அவற்றில் உள்ளடங்குகின்றன.

இரு தரப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்திக்கொள்வது தொடர்பில் இதன் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை பிரஜைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்தியா தொடர்ந்து பங்களிப்பு செய்யும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் தமது ட்விட்டரில் பதிவிட்டிருந்தார். இவற்றுக்கெல்லாம் அப்பால் கொவிட் தடுப்பூசி உதவிகள், வீடமைப்புத் திட்டங்கள், கடனுதவி, புகையிரதப் பாதை கட்டுமானம் உட்பட புதுடில்லி வழங்கும் எல்லையற்ற உதவிகள் இலங்கைக்கு பெரும் உதவிகளாகும் என்பதில் ஐயமில்லை.

கொவிட் தடுப்பூசி, வீடமைப்புத் திட்டங்கள், கடனுதவி, புகையிரத பாதை கட்டுமானம் உட்பட புதுடில்லி வழங்கும் எல்லையற்ற உதவிகள்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான தொடர்புகள் மேலும் தொடர்ந்து கொண்டேயிருக்கும் என்பதையே இந்த இருதரப்பு நட்புறவு புலப்படுத்துகின்றது.

எம்.சாரங்கன்...✍

பொருளாதார நெருக்கடிக்குள் உலகை தள்ளி விடும் ரஷ்ய–உக்ரைன் யுத்தம்!

உக்ரைன் மீது ரஷ்யா முன்னெடுத்துள்ள போர் ஆரம்பமாகி நாளையுடன் ஒரு மாதமாகியும், யுத்தம் இன்னும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இப்போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதி, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பம் முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இற்றைவரை யுத்தம் நிறுத்தப்படவில்லை.

ரஷ்யா இப்போரை ஆரம்பித்ததும் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி அவசர அவசரமாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு தொலைபேசி அழைப்பெடுத்தார். தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடி யுத்தத்தை உடனடியாக நிறுத்திக் கொள்வதே அவரது எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் அவரது தொலைபேசி அழைப்புக்கு ரஷ்ய ஜனாதிபதி பதிலளிக்கவில்லை. என்றாலும் உக்ரைன் ஜனாதிபதி, 'தாம் சமாதானத்திற்கு தயார்', 'யுத்தத்தை நிறுத்துங்கள்', 'எம்மைக் காப்பாற்றுங்கள்' என ஆரம்பம் முதல் வெளிப்படையாகத் தொடர்ந்து அபயக்குரல் எழுப்பி வருகின்றார்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ஜி. 7 நாடுகள் என்பன இந்த யுத்தத்திற்கு எதிராக ரஷ்யா மீது உடனடியாகப் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. ரஷ்ய வங்கிகள் சிலவற்றின் நிதிச் செயற்பாடுகளுக்கும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகள் ரஷ்யாவில் இருந்து எண்ணெய் இறக்குமதியை நிறுத்தியுள்ளன. அத்தோடு ரஷ்யாவில் செயற்பட்டுவரும் பல்தேசிய நிறுவனங்கள் பலவும் தம் வர்த்தக நடவடிக்கைகளை ரஷ்யாவில் இடைநிறுத்தியுள்ளன. இருந்த போதிலும் இவற்றைக் கண்டு கொள்ளாது உக்ரைன் மீதான போரை முன்னெடுக்கும் ரஷ்யாவை, அமைதி வழிக்கு கொண்டுவரும் முயற்சியில் துருக்கி, இஸ்ரேல் போன்ற நாடுகள் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளன.

என்றாலும் போர் நீடித்து வருவதால் இருதரப்பிலும் உயிரிழப்புக்கள் தொடர்கின்றன. உக்ரைன் அழிந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது. அந்நாடு சாம்பல் மேடாகி வருகின்றது. 32 இலட்சத்திற்கும் மேற்பட்ட உக்ரைனியர்கள் தம் தாய்நாட்டை விட்டு பாதுகாப்புத் தேடி அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள அதேநேரம், 6.5 மில்லியன் மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பொருளாதாரத் தடையினாலும், ஏற்றுமதி இறக்குமதி பாதிப்பினாலும் உலக நாடுகள் எதிர்கொள்ளப் போகும் பேரவலம்!

இரு நாடுகளிலும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு வீழ்ச்சியடைந்து வருவதோடு ஆயிரக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்புக்களை இழந்து வருகின்றனர். இந்த யுத்தத்திற்கு எதிராக ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள சர்வதேசப் பொருளாதார தடைகளால் ரஷ்யாவின் நாணயமான ரூபிள் யுத்தம் ஆரம்பமான முதல் சில நாட்களுக்குள் சுமார் 30 வீத வீழ்ச்சியைக் கண்டுள்ளது. தம் மீதான பொருளாதாரத் தடையின் தாக்கங்களை சீர்செய்யவென ஒரு ட்ரில்லியன் (09 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) ரூபிளை செலவிட ரஷ்யா உத்தேசித்துள்ளது. அத்தோடு இந்த யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு வரும் உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் நிதியுதவிகளை வழங்கவும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

இவ்வாறான சூழலில் இந்த யுத்தத்தின் விளைவாக உலக பொருளாதாரமும் பாரிய சவாலுக்கும் வீழ்ச்சிக்கும் உள்ளாகக் கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக உலகளாவிய பொருளாதார நிபுணர்களும், சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வங்கி போன்ற சர்வதேச அமைப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த யுத்தத்தின் விளைவாக உலக சந்தையில் ஒரு பரல் மசகு எண்ணெயின் விலை 110 டொலர்களுக்கும் மேல் அதிகரித்துள்ளது. இதன் காரணத்தினால் உலகலாவிய ரீதியில் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. குறிப்பாக கொவிட் 19 தொற்றின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார சவாலுக்கு முகம் கொடுத்திருக்கும் இலங்கையிலும் அதன் தாக்கம் பிரதிபலிப்பதாக இந்திய பொருளாதார நிபுணர் ஆனந்த் ஸ்ரீநிவாசன் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நிலைக்கு உலகின் பல நாடுகளும் எதிர்கொண்டுள்ளன.

அந்த வகையில் சர்வதேச நாணய நிதியம், 'இப்போரின் விளைவாக மக்கள் மரணமடைதல், அகதிகள் பிரச்சினை என்பவற்றைத் தாண்டி உலகளாவிய ரீதியில் பொருளாதாரமும் பாதிக்கப்படக் கூடிய அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக பொருட்களின் விலைகள் உயரும், உணவுப் பஞ்சமும் ஏற்ப முடியும். உணவு பொருட்கள், எரிபொருள் என்பவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்படும். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களின் நாடுகள் பலவற்றின் பொருளாதாரம் வீழச்சியடையலாம். குறிப்பாக உலக பொருளாதார வளர்ச்சி 4.4வீதம் குறைவடையும். சர்வதேச சந்தையில் நிச்சயமற்ற தன்மை ஏற்படும்' என்று தெரிவித்துள்ளது.

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கை!

அத்தோடு சுற்றுலா, எண்ணெய், வர்த்தகம் என்பவற்றை நம்பி நிற்கும் நாடுகளும் கூட இப்போரின் விளைவாகப் பாதிக்கப்படும் என்றும் குறிப்பட்டுள்ளது சர்வதேச நாணய நிதியம்.

மேலும் உலகில் சூரிய காந்தி எண்ணெய் உற்பத்தியில் 50 வீதத்தையும் கோதுமை உற்பத்தியில் 30 வீதத்தையும் ரஷ்யாவும் உக்ரைனும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இந்த எண்ணெயைப் பயன்படுத்தும் நாடுகள் அதனை வழமை போன்று பெற்றுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்ளக் கூடிய அச்சுறுத்தலையும் இப்போர் தோற்றுவித்துள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபை, ஆபிரிக்க கண்டத்திலுள்ள 45 நாடுகள் தங்களது கோதுமைத் தேவையில் மூன்றிலொரு பங்கை ரஷ்யா மற்றும் உன்ரைனில் இருந்துதான் இறக்குமதி செய்கின்றது. இதிலும் 18 நாடுகள் 50 வீதமான கோதுமையை இவ்விரு நாடுகளிலும் இருந்து பெற்றுக் கொள்வதோடு, எகிப்தின் கோதுமைத் தேவையில் 80 வீதத்தை ரஷ்யாவும், உக்ரைனும்தான் வழங்கிக் கொண்டிருக்கின்றன. அத்தோடு மத்திய கிழக்கு நாடுகளும் தம் கோதுமைத் தேவையில் குறிப்பிடத்தக்களவில் இவ்விரு நாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்கின்றன. அதனால் இந்த யுத்தம் காரணமாக இவ்விரு நாடுகளும் தாம் உலக நாடுகளுக்கு வழங்கி வந்த கோதுமையை வழங்க முடியாத நிலை ஏற்படுவதோடு ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உணவுப் பஞ்சம் ஏற்படவும் வாய்ப்புள்ளது' என்று குறிப்பிட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, உலகில் ஈரான், கட்டார் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக அதிக எரிவாயு வளத்தைக் கொண்டுள்ள நாடான ரஷ்யா, உலகில் எரிவாயு உற்பத்தி செய்யும் 10 முன்னணி நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது. எரிவாயு ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் 2019 ஆம் ஆண்டு தரவுகளின்படி, ரஷ்யாவிலிருந்து 37 நாடுகள் எரிவாயுவை இறக்குமதி செய்கின்றன. அவற்றில் பொஸ்னியா ஹேர்கோ கோவினா, பெலாரஸ், நோர்வே, சேர்பியா ஆகிய நாடுகளின் 99 வீத எரிபொருள் தேவையை ரஷ்யாவே வழங்குகிறது. இத்தாலியின் எரிவாயு தேவையில் மூன்றிலொரு பங்கு ரஷ்யாவில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது. இவ்வாறான நிலையில் ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையின் விளைவாக, ஐரோப்பிய நாடுகள் எரிபொருள் பற்றாக்குறை பிரச்சினைக்கு நேரடியாக முகம் கொடுப்பதோடு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும்' என்றும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த யுத்தத்திற்கு எதிராகப் பொருளாதார தடை விதிக்கப்பட்டதும் ஜேர்மனிக்கான எரிவாயு விநியோகக் குழாயை மூடிவிடப் போவதாக ரஷ்யா எச்சரித்திருந்தமை இங்கு கவனிக்கத்தக்கது.

அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகள் ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய், எரிவாயு இறக்குமதியை நிறுத்தியுள்ள போதிலும், அவற்றின் தேவையை வேறு உற்பத்தி நாடுகளில் இருந்து அந்நாடுகள் பெற்றுக் கொள்ளவே செய்யும்.

(06ம் பக்கம் பார்க்க)

மர்லின் மரிக்கார்...✍

மீளாய்வுகள் மேற்கொண்டு...

(03 ஆம் பக்கத் தொடர்)...

பயங்கரவாதம் உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தலாகியுள்ள நிலையில், அதற்கு ஒன்றிணைந்த நடவடிக்கைகள் அவசியமாகிறது.

பயங்கரவாதிகளுக்கு நிதி உதவி செய்பவர்களும் பயங்கரவாதிகளாகவே கருதப்படுவர். அந்தவகையில் பயங்கரவாதிகளுக்கு உணவு, தங்குமிட வசதி வழங்குவோர் மற்றும் தடை செய்யப்பட்ட பயங்கரவாத குழுக்களுக்கு உதவி செய்பவர்களும் சர்வதேச ரீதியில் பயங்கரவாதிகளாகவே கருதப்படுகின்றனர். சர்வதேச நாடுகளிலுள்ள சட்டங்களை பார்க்கும்போது நீதிமன்ற உத்தரவுக்கு அப்பாலும் தடுத்து வைக்கப்படலாம் என அவற்றில் கூறப்படுகிறது. எமது நாட்டில் எல்லைக் கிராம தாக்குதல், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற தாக்குதல்களில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறான நடவடிக்கைகளை தடுப்பதற்கு இந்த சட்டம் அவசியமாகும்.

அத்துடன் சைபர் தாக்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். சைபர் தாக்குதல்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றை தடுப்பதற்கும் இந்த சட்டத்தில் விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வாடகை குடியிருப்பாளர்களுக்கு...

முதலாம் கட்டத்தின் கீழ் மாகாண மட்டத்தில் 464 வீடுகளுடன் கூடிய 09 வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்கு ஆரம்பக் கொடுப்பனவை செலுத்துவதற்கான இயலுமை இன்மையால், மாதாந்தம் 15,000/ ரூபா வாடகைப் பணமாக 31 வருடங்களுக்கு அறவிடுவதற்கும், இரண்டாவது அல்லது மூன்றாவது பரம்பரைக்கு வீட்டு உரிமையை ஒப்படைக்கக் கூடிய வகையிலும், எந்தவொரு காரணத்துக்காகவும் வீட்டை விற்பனை செய்வதற்கு இயலாத வகையிலும் பயனாளிகளுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, இக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக, பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

51 மேலதிக வாக்குகளால்...

நடைபெற்றது. எதிர்க்கட்சி சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம், சி.வி.விக்கிணேஸ்வரன். கு மார் பொன்னம்பலம். எம்.ஏ.சுமந்திரன் போன்றோர் இந்த சட்டத்துக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்தனர். ஆனால் ஆரம்ப முன்னெடுப்பாகவே இந்த திருத்தங்கள் முன்வைக்கப்படுவதாக ஆளும் தரப்பு சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டுமென எதிர்தரப்பு சார்பில் கருத்து முன்வைக்கப்பட்டது. ஆளும் தரப்பு சார்பில் நீதி அமைச்சர் அலி சப்ரி பதிலளித்தார். விவாத்தின் இறுதியில் வாக்கெடுப்பு கோரப்பட்டதால், வாக்கெடுப்பு நடைபெற்றது. இதன் போது ஆளும் தரப்பு எம்.பிக்களுடன் கூட்டணி கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன. எதிரணி சார்பில் அநுர குமார திசாநாயக்க, ரவூப் ஹக்கீம்,ரிசாத் பதியுதீன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.ஸ்ரீதரன் உள்ளிட்ட த.தே.கூ. எம்.பிக்களும் எதிராக வாக்களித்தனர். வாக்களிப்பின் போது 103 எம்.பிக்கள் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

76 கணக்குகளிலிருந்து ...

அந்த வங்கியின் முகாமையாளர் ஒருவரும் குற்றப்புலனாய்வு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தனியார் வங்கியின் முகாமையாளர்களில் ஒருவரான நீல் கிறிஸ்தோபர் சொய்ஸா மற்றும் திட்டமிட்ட நிதிக் குற்றங்களில் ஈடுபடும் நபராக அறியப்படும் செல்டல் ரவி எனும் திலகரத்னம் ரவிச்சந்திரன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிஐடியின் வணிக குற்ற விசாரணைப் பிரிவினர் இந்த கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் இவர்களை ை விளக்கமறியலில் வைத்துள்ளது.

குற்றப்புலனாய்வினரின் வணிக குற்ற விசாரணைப் பிரிவின் பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர், நிரோஷினி ஹேவாபத்திரன தலைமையிலான குழுவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்தனர். செல்டல் ரவியின் ஆலோசனைக்கமையவே இந்த மோசடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த இந்த தனியார் வங்கியின் தலைமையகத்தில் கணக்கைப் பேணும் அவ்வங்கியின் முக்கிய வாடிக்கையாளர்களான பிரபல வர்த்தகர்கள் மூவரின் கணக்குகளிருந்தும் பணம் கையாடப்பட்டுள்ளது.

இந்த மோசடி கடந்த 06 மாதங்களில் முன்னெடுக்கப்பட் டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரிய வருகிறது. சந்தேக நபர்கள் இருவரும் மோசடி செய்த பணத்தை தமது வங்கிக் கணக்குகளுக்கு மாற்றியுள்ளதாக கூறும் விசாரணையாளர்கள், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ...

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விஷேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் பிரச்சினை காரணமாக எரிபொருளை பெற்றுக்கொள்ள வரிசையில் நின்ற 04 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். இது பெரும் பிரச்சினையாகும்.

மக்கள் வாழமுடியாத பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதனால் நாட்டின் நிலைமையை கருத்திற்கொண்டு இந்திய அரசாங்கம் ஒரு பில்லியன் டொலர் கடன் வழங்க முன்வந்தது. அதனை வழங்குவது தொடர்பில் எம்மிடமும் கேட்டிருந்தனர். நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியில் அதனை வழங்குவதறகு நாங்களும் ஆதரவளித்தோம். என்றாலும் இந்த பணத்தை பயன்படுத்தி 14,000 கிராமசேவகர் பிரிவுகளை அடிப்படையாக்கொண்டு, வீட்டுக்கடையென வேலைத்திட்டம் அமைத்துக்கொண்டு அவற்றுக்கு 08 இலட்சம் ஒதுக்கி விட்டு பொதுஜன பெரமுன ஆதரவாளர்களுக்கு இரண்டாயிரம் ரூபா கூப்பன் அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதும் மாகாணசபை தேர்தல் சட்டத்தில் தங்களுக்கு நன்மை ஏற்படும் வகையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டில் ஏற்பட்டுள்ள வரிசை யுகத்தினால் மக்கள் பாரிய கஷ்டத்தை அனுபவிக்கின்றனர். பிள்ளைகளுக்கு தேவையான பால்மாவை பெற்றுக்கொடுக்க முடியாமல் தாய்மார்கள் வீதியில் கஷ்டப்படுகின்றனர். பால், தேநீர் ஒரு கோப்பை 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறான நிலைமையில் மக்கள் எவ்வாறு வாழ்க்கையை கொண்டுசெல்ல முடியும். மக்கள் வாழ்வதற்கு போராடும் நிலையில், இந்திய அரசாங்கத்தினால் கிடைத்துள்ள ஒரு பில்லியன் ரூபா கடன் உதவியை தமது ஆதரவாளர்களுக்கு நிவாரணம் வழங்க தயாராவது மிகவும் வெட்கப்படவேண்டிய விடயம்.

அதனால், இந்திய அரசாங்கம் வழங்கியுள்ள கடன் தொகை மூலம் அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து வேலைத் திட்டங்களின் அறிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என பிரேரணை முன்வைக்கின்றேன்.

பட்டினி, தாகத்துடனுள்ள மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண,இந்திய உதவியை பயன்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

பொருளாதார நெருக்கடிக்குள்...

(05ம் பக்கத் தொடர்)

இது சர்வதேச சந்தையில் எரிபொருள் மற்றும் எரிவாயு விலை அதிகரிப்புக்கு வழிவகுப்பதோடு அவற்றின் உற்பத்தியிலும் சமநிலையற்ற தன்மை ஏற்படவும் வழிவகுக்கும்.

அதேநேரம் இலங்கையின் தேயிலையை அதிகளவில் இறக்குமதி செய்யும் முதல் மூன்று நாடுகளில் ஈராக். துருக்கிக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் ரஷ்யா உள்ளது. உக்ரைனும் குறிப்பிடத்தக்களவில் இலங்கைத் தேயிலையை வருடாந்தம் இறக்குமதி செய்கின்றது. இந்த யுத்தம் இதனையும் பாதிக்கவே செய்யும் என்பதே பொருளாதார நிபுணர்களது கருத்தாக உள்ளது. அதேபோன்று ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் தேவையான பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளையும் ரஷ்யாவிலிருந்தும் உக்ரைனில் இருந்தும் பொருட்களை இறக்குமதி செய்துவரும் நாடுகளையும் இப்போர் பாதிக்கவே செய்யும். இவ்வாறான நிலையில் உலகளாவிய ரீதியில் பொருளாதார வீழ்ச்சியும் நெருக்கடியும் நிச்சயம் ஏற்படும். அவை மக்களையே பாதிக்கும்.

ஆகவே மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்த யுத்தத்தை விரைவாகவும் வேகமாகவும் முடிவுக்கு கொண்டு வருவதில் உலகளாவிய நாடுகள் கவனம் செலுத்த வேண்டும். உலகின் அமைதி சமாதானத்திற்கும் பொருளாதார பாதுகாப்பும் இது மிகவும் அவசியம். இந்த யுத்தத்தின் விளைவாக உலகம் எதிர்கொள்ளக் கூடிய பல நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ளவும் இது வழிவகுக்கும். அதனால் எல்லா நாடுகளும் இவ்விரு நாடுகளதும் யுத்தம் முடிவுக்கு கொண்டு வர அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதே உடனடித் தேவையாகும்.

மக்கள் எதிர்நோக்கியுள்ள அனைத்து...

நெருக்கடி நிலைமை மற்றும் எரிபொருள் பற்றாக்குறையினால் நாளாந்தம் அமுல்படுத்தப்படும் மின் விநியோக தடை குறித்து விஷேட கவனம் செலுத்தப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறையிலுள்ள ரஞ்சனுக்கு 'மக்கள் நடிகர்'...

2022 ஆம் ஆண்டுக்கான SlimKanter விருது வழங்கும் விழாவில், அவருக்கு இந்த விருது கிடைத்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் தற்போது சிறையிலிருக்கும் ரஞ்சன்ராமநாயக்க பலமுறை மக்கள் நடிகருக்கான விருதை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊழியர்களை பாதுகாக்கவே...

(03 ஆம் பக்கத் தொடர்)...

இதனையடுத்தே, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தீவிர கண்காணிப்புகளை மேற்கொள்ளும் பொருட்டு இராணுவத்தினரை ஈடுபடுத்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கும் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் பாதுகாப்பை வழங்கவே இராணுவம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாவும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக எரிபொருள் வரிசையில் காத்திருந்த மூன்று பேரும், தகராறு ஏற்பட்டதால் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், எரிபொருள் விநியோகம் செய்யப்படுவதை கண்காணிப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஒவ்வொன்றிலும் தலா இரண்டு இராணுவ வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

எரிபொருளும் குறைந்த விலையிலே...

இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல. முழு உலகமும் இப்பிரச்சினையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

எரிபொருளின் விலை, அதிகளவில் அதிகரிக்கப்படவில்லை.

எரிபொருள் பற்றாக்குறை ஏற்படுமென்ற தவறான புரிதலுடன், பொதுமக்கள் தங்களின் வாகனங்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொண்டு, தாங்கிகளிலும் எரிபொருளை நிரப்புகின்றனர். இதனால்தான் தற்போது எரிபொருள் விநியோகத்தில் அதிக கேள்வி எழுந்துள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் இப்பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றார்.

எதிர்ப்பு ஆரப்பாட்டங்கள்,கோஷங்களை...

பொறிமுறையை கண்காணித்து முறையாக ஒழுங்குபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்ததாகவும் பாதுகாப்புப் படையினரின் உதவியை நாட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது,நாட்டில், கடந்த இரண்டு நாட்களாக கடன் வழங்க முடியாத காரணத்தினால் டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும், நாட்டில் போதியளவு பெற்றோல் கையிருப்பு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்களாகியும் போராட்டங்களுக்கு தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின் போது கூட ஒரு தடியடியோ, தண்ணீர் பிரயோகமோ பிரயோகிக்கவில்லை. ஆர்ப்பாட்டங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் அதே வேளை சில அரச நிறுவனங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பாதுகாப்புத் தரப்பினருக்குண்டு. பாதுகாப்புத் தரப்பினர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்ய மாட்டார்களெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மிகைக் கட்டண வரி...

(03 ஆம் பக்கத் தொடர்)...

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "மிகைக்கட்டண வரி" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்துள்ளது.சட்டமூலத்தின் ஏற்பாடுகளை முற்றுமுழுதாகப் பரிசீலனை செய்யுமிடத்து, சட்டமூலமோ அல்லது அதன் எந்த ஏற்பாடுகளுமோ அரசியலமைப்பின் 12ஆம் உறுப்புரை அல்லது 13ஆம் உறுப்புரைகளுக்கு ஒவ்வாதனவாக இல்லாமல் இருப்பதாக உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் "மிகைக் கட்டண வரி" இச்சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மை ஒன்றின் மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றலாமென உயர் நீதிமன்றம் மேலும் தீர்மானித்துள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமெனவும் சபாநாயகர் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்."நீதிக்கான அணுகல்"...

(03 ஆம் பக்கத் தொடர்)...

கடற்றொழில், கரையோர பாதுகாப்பு, கடல் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் முன்வைத்திருந்தார்.இதற்கமையவே,

நேற்த உயர்மட்ட கலந்துரையாடல் வெளியுறவுதுறை அமைச்சில் நடைபெற்றது. நீதி அமைச்சு, வெளியுறவுதுறை அமைச்சு, காணி அமைச்சு, வனஜீவராசிகள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, கடற்றொழில் அமைச்சு, உள்ளிட்ட பல அமைச்சுகளின் செயலாளர்களும், திணைக்கள தலைவர்களும் இக்கலந்துரையாடலில், பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டம்...

(03 ஆம் பக்கத் தொடர்)...

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்;

பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆறு மாத காலத்துக்கென தற்காலிகமாக கொண்டு வரப்பட்ட ஒரு சட்டமாகும். இந்த சட்டம் அரசியலமைப்பு ரீதியாக கொண்டு வரப்பட்டதென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார். எனினும் இந்த சட்டம் அவ்வாறு கொண்டுவரப்பட்ட ஒன்றல்ல என்பதை உறுதியாகக் கூற முடியும்.

அவசர சட்டமூலமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டது. நீதிமன்றம் அது தொடர்பில் ஆராய்வதற்கு முன்னரே, அன்று அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது. தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் இந்த சட்டத்தை நீக்காமல் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்துள்ளன. இது பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக பாவிக்கப்பட்டதை விட, துஷ்பிரயோகங்களுக்காகவே அதிகம் பாவிக்கப்பட்டுள்ளது.

பல, அப்பாவி மக்கள் கைது செய்யப்பட்டு வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு குடும்பங்கள் அனாதரவாகிய சம்பவங்களுக்கும் இந்த சட்டம் காரணமாக உள்ளது. அதற்கான பல்வேறு சான்றுகள் உள்ளன. புலிகளுக்கு உணவுப்பொதி வழங்கிய குற்றத்திற்காக வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சம்பவம், 20 வருடங்களுக்கு மேல் கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்கும் சம்பவங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

அதேவேளை, குற்ற ஒப்புதலை பொலிஸாருக்கு வழங்குதல் தொடர்பில் புதிய திருத்தத்தில் தொட்டும் பார்க்கப்படவில்லை.

மக்களுக்கு நன்மை பயக்காத இந்த பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்.அதனால் நாட்டில் அனைத்து இன, மத மக்களையும் சந்தித்து நாம் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

பயங்கரவாதச் சட்டத்தினால் ஜே.வி.பி யினர் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். இப்போது முஸ்லிம் சமூகமும் அதனால் பாதிக்கப்பட்டு வருகிறது. இது முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

சர்வகட்சி மாநாட்டை எதிர்க்கட்சிகள்...

பகிஷ்கரிக்காது தமது யோசனைகளை முன்வைக்கலாம். விமர்சனம் முன்வைத்தாலும் தீர்வு யோசனை எதுவும் முன்வைக்கவில்லை. ஈபீரீ, ல,சு,க. உள்ளிட்ட 11 கட்சிகள் முன்வைத்த யோசனைகளில் உள்ளவை செயற்படுத்தப்படும் என்றார்.

நாட்டு நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

நிதி நிலைமை சீராக இருந்த போது கடந்த இரண்டு வருட காலத்தில் கொரோனா காலத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்கினோம். தடுப்பூசி முழுமையாக வழங்கினோம். தற்போதைய நிலையில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது.

ஊடகங்களில் சுற்றுலா பயணிகளின் பஸ்களை மறித்து ஆர்ப்பாட்டம் செய்யும் நிலையை கண்டோம். ஊடக பயன்பாட்டின் போது கடந்த நாட்களில் சாதகமான எந்த விடயமும் காண்பிக்கப்படவில்லை. அரசுகள் மாறும். அரசியல்வாதிகள் மாறுவர். செய்திகளில் நெருக்கடி நிலை மற்றும் ஆர்ப்பாட்டங்கள் பற்றியே காண்பிக்கப்படுகின்றன. நெருக்கடி நிலை சீராவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். நாமும் முடிந்தளவு அர்ப்பணிப்பு செய்கிறோம்.வரிசைகளில் நிற்கும் மக்கள் இறப்பது தொடர்பில் நாம் மிகவும் கவலையடைகிறோம். நெருக்கடி நிலைக்கு தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த பிரச்சினைகளே காரணம். அரசாங்கத்தின் செலவுகளை குறைத்தும் இதற்காக அர்ப்பணிக்கிறோம். சில திட்டங்களை தயாரித்தாலும் அவற்றை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்படுகிறது.

பொருளாதார சபை எத்தகைய முடிவுகளை எடுத்ததென எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,

பொருளாதார சபைக்கு ஆலோசனை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு, பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. நிதி நெருக்கடி நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடன் தொழில்நுட்ப விடயங்களுக்கு செல்வது குறித்தும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்றார்.

மல்வத்து, அஸ்கிரிய...

உள்ளடக்கி, மல்வத்து அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பி உள்ளனர்.

மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வண.வரகாகொட ஞானரதன தேரர் ஆகியோரின் கையொப்பத்துடன் இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேசிய கொள்கையை வகுப்பதன் அவசியம் அந்தக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தணிக்க அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகளின் பட்டியலின்படி, அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதார மாதிரியை உருவாக்குதலும் பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்திக்காக விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல், பொருளாதார நெருக்கடி காலத்தில்,அத்தியவசியப் பொருட்களுக்கு

பற்றாக்குறையை ஏற்படுத்துவோருக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றியும் மகாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முதலீட்டை ஊக்குவித்தல், வெளிப்படையான பொருளாதாரம், வெளிநாட்டுப் பணப் பரிமாற்றத்தை அதிகரித்தல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பல் உள்ளிட்ட விடயங்களும் கடிதத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது.மேலும் புதிய முதலீடுகளை ஊக்குவித்தல், அரச கடனை மறுசீரமைத்தல், குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குதல், வீண்விரயம், ஊழல் மற்றும் வள துஷ்பிரயோகம் ஆகியவற்றைத் தடுக்கவும் ஆலோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்காக நடைமுறைப்படுத்திய தூரநோக்குடைய வேலைத்திட்டங்கள் தொடர்பில் முழு நாட்டு மக்களினதும் பாராட்டு மற்றும் மகிழ்ச்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்கும் என்று மகாநாயக்க தேரர்கள் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

மனித உரிமைகள், மனித சுதந்திரத்தை...

நடைமுறை சட்டத்தில் காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்துமென்றும் அவர் உறுதியாக தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்பு சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:

பயங்கரவாத தடை சட்டம் மிகவும் பழமை வாய்ந்தது. 43 ஆண்டுகளாக நடைமுறையிலுள்ள இச்சட்டத்தை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். அடிப்படை விடயங்களில் முக்கியமான மாற்றங்கள் மேற்கொள்வது இதன் நோக்கமாகும்.

முழுமையாக திருத்துவதற்கு கால அவகாசம் தேவைப்படும். பல்வேறு அரச நிறுவனங்களை இணைத்துக் கொண்டே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது அவசரமான திருத்தங்கள் தேவைப்படுகின்றன. சமூக மாற்றத்தை கவனத்திற் கொண்டு அதில் திருத்தங்கள் கொண்டு வரப்படுகிறது. இந்தத் திருத்தங்களை வெறும் கண்துடைப்பென கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இது ஆரம்ப நடவடிக்கை மட்டுமே.

இதனை காத்திரமாக முன்னெடுக்கும் வகையில், நீதியமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டமைச்சு ஆகியன விடயங்களை மேற்கொள்கின்றன.

இது ஆரம்பம் மட்டுமே. தேவைப்படுமிடத்து மேலும் திருத்தங்கள் முன்வைக்கப்படலாம்.

தனிப்பட்ட நபர் அனுபவிக்கக் கூடிய சுதந்திரம் தொடர்பில் இந்தத் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் 14 ஆவது பிரிவின்படி சட்டப்படி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு கருத்து சுதந்திரம் மற்றும் பேச்சு சுதந்திரமும் வழங்கப்படுகிறது.

ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பற்றியும் புதிய திருத்தத்தில் உள்ளன. இதன் மூலம் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

எமது அரசாங்கம், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 81 பேரை விடுதலை செய்துள்ளது. பிரிவு 13இன் கீழ், விடுவிக்கப்படுவோர் தொடர்பில் ஆராயும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு விடுதலைகள் இடம் பெற்றுள்ளன. நீதித்துறை அனுபவம் கொண்ட குழு மூலமே அது இடம் பெறுகின்றது.

பொலிஸார் மற்றும் படையினரை விதி விலக்கான சமயங்களில் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் விசாரணை முடியும் வரை தடுத்து வைக்கப்பட வேண்டும் என்ற நிலை மாற்றப்பட்டு, உயர்நீதிமன்றம் தற்றுணிவின் பேரில் பிணை வழங்க முடியுமென மாற்றப்பட்டுள்ளது. தடுத்து வைத்தல் சட்டமானது சவாலுக்குட்படுத்த முடியாதென்பதை 09 ஆம் பிரிவில் தெரிவிக்கப்படுகிறது.

தடுத்து வைக்கப்பட்டவரை பார்வையிடுவதற்கு நீதவானால் முடியும். அவர் அனுமதியின்றி செல்வதற்கான நிலை இதன் மூலம் வழங்கப்படுகிறது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் நலன் தொடர்பில் முக்கிய விடயங்கள் புதிய திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் தமக்கான சட்டத்தரணியை பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு முன்னருள்ள சட்டத்தில் அதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

குற்றவியல் சட்டத்தில் இதற்கான விடயங்கள் காணப்பட்டாலும், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் நீதிமன்றத்துக்கு செல்வதற்கு முன் சட்டத்தரணியை பெற்றுக் கொள்ளக்கூடிய உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது பல முறைகேடுகளை தடுப்பதற்கு வாய்ப்பாக அமையும்.

தற்போதுள்ள சட்டத்தில், சட்டத்தரணி ஒருவரை பெற்றுக்கொள்வதற்கு உயர்நீதிமன்றத்தில் மனு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தொடர்பிலும் அவ்வாறே நடைபெற்றது. அந்த நிலை இதன் மூலம் மாற்றப் பட்டுள்ளது.

தடுத்துவைக்கப்பட்டுள்ளவரை உறவினர்கள் மற்றும் குடும்பத்தினர் சென்று பேசுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன. நடைமுறையிலுள்ள சட்டத்தில் அதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. அந்த வகையில் இந்த திருத்தங்கள் மிகவும் முக்கியமானவை.

திருத்தங்கள் தொடர்பில் எவரும் வாதங்களை முன்வைக்கலாம். பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் போது, கடைப்ப

தினகரன் பத்திரிகையின் 90வது வருட பூர்த்தியை முன்னிட்டு

தர்கா நகர் மற்றும் பேருவளையில் முப்பெரும் விழா ஏற்பாடுகள்

அதிதிகளாக பியல், மர்ஜான், இம்தியாஸ் பங்கேற்பு

(பேருவளை விசேட நிருபர்)

லேக் ஹவுஸ் நிருவனத்தின் வெளியீடான தினகரன் பத்திரிகையின் 90 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பேருவளை மற்றும் தர்கா நகர் தினகரன் வாசகர் வட்டம் ஏற்பாடு செய்துள்ள முப்பெரும் விழா எதிர்வரும் 27 ஆம் திகதி பேருவளை மற்றும் தர்கா நகர் பகுதிகளில் மிக விமர்சையாக நடைபெற வுள்ளது.

இப்பெருவிழாவின் கலை கலாசார மற்றும் பிரமுகர் கௌரவிப்பு நிகழ்வு தர்கா நகர் ஸாஹிரா தேசிய பாடசாலை எம்.ஐ.எம் நளீம் ஹாஜியார் ஞாபகார்த்த மண்டபத்தில் மு.ப 9 மணிக்கு தினகரன், தினகரன வார மஞ்சரி மற்றும் வண்ணவானவில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் நடைபெறும்.

தர்கா நகர் ஸாஹிரா தேசிய பாடசாலை, அல்ஹம்ரா மகா வித்தியாலயம், அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை, அன்னாசிகலை தமிழ் வித்தியாலயம், மதுகம கலைமகள் மகா வித்தியாலயம், வெலிப்பன்னை ரஹ்மானிய்யா முஸ்லிம் தேசிய பாடசாலை, பேருவளைப் பகுதியில் உள்ள சீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் மகளிர் தேசிய பாடசாலை, மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை, மஹகொட ஐ.எல்.எம் ஸம்ஸுதீன் மகா வித்தியாலயம் ஆகிய முஸ்லிம் தமிழ் பாடசாலைகளில் மாணவர்களது கலை கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பேருவளை, தர்கா நகர் வாசகர் வட்டத்தின் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான தேசமான்ய அல்ஹாஜ் பாஸி ஸுபைர் தலைமையில் இதற்கான பரவளான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமய, சமூக, கலை, கலாசார, கல்வி மற்றும் ஊடகத் துறை, மற்றும் விளையாட்டுத் துறைகளில் பணிசெய்த 30 பேரும் மற்றும் தேசிய மட்டத்தில் பிரசித்தி பெற்ற 10 பிரமுகர்கள் இந்த விழாவில் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த சில்வா கலந்து கொள்வார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் பேருவளை பிரதேச சபைத் தலைவர் மேனக விமலரத்ன, பேருவளை நகரசபைத்தலைவர் மஸாஹிம் முஹம்மத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பிர் எம்.எஸ்.எம் அஸ்லம் ஹாஜியார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான இப்திகார் ஜெமீல், எம்.எம்.எம் அம்ஜாத், பேருவளை நகர சபை எதிர்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி, பேருவளை பரதேச சபை முன்னாள் தலைவர் எ.ஆர்.எம் பதியுத்தீன் உட்பட நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் உலமாக்கள், பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், சமூக சேவையாளர்கள் உட்பட தினகரன் ஆசியர்பீடத்தைச் சேர்ந்த இணைஆசிரியர், செய்தியாசிரியர், உள்ளூர் செய்தியாசிரியர், துணை ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொள்வர். அன்று மாலை 4.00 மணிக்கு கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி மாளிகாஹேனை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதோடு பரிசளிப்பு வைபவமும் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர் பாஸி சுபைர் தெரிவித்தார்.

விழா ஒருங்கிணைப்பாளர்
பாஸி சுபைர்

அதே சமயம், பேருவளை ஹெட்டி முல்லை புட்சல் பேர்கர் சிடி விளையாட்டு மைதானத்தில் தினகரன் வெற்றிக்கிண்ணத் திற்காக மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியொன்றும் எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெரும் அணிக்கு தினகரன் வெற்றிக் கிண்ணத்துடன் 30,000 ரூபா ரொக்கப்பணமும் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் அணிக்கு ரனசப் கிண்ணத்துடன் 20,000 ரூபா ரொக்கப்பணமும் வழங்கப்படும். அதேசமயம் சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளர், சகலதுறை ஆட்ட வீரர் ஆகியோருக்கும் பெறுமதி வாய்ந்த பரிசில்களுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும் என ஏற்பாட்டாளரும் தினகரன் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த எம்.என்.எம் ரிம்ஸான் தெரிவித்தார்.

அல் முஹ்பாத் முன்பள்ளி 28வது வருட நிகழ்வு

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் காஸிம் வீதியில் அமைந்துள்ள அல் முஹ்பாத் முன்பள்ளியின் 28 வது வருட நிறைவு, கலைவிழா மற்றும் பரிசளிப்பு நிகழ்வு என்பன புத்தளம் மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

முன்பள்ளி பொறுப்பாசிரியை லரீபா சுஹைல் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் கலந்து கொண்டார்.

முன்பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்கள் பங்கேற்ற கலை கலாசார நிகழ்வுகள் இங்கு அரங்கேற்றப்பட்டதோடு சகல மாணவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

ஆயுர்வேத நிலையமென்ற போர்வையில் விபசார விடுதி

சுற்றிவளைப்பில் 09பேர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

ஆயுர்வேத மசாஜ் நிலையமென்ற போர்வையில் விபச்சார விடுதிகளை நடாத்திச் சென்ற நான்கு இடங்களை சுற்றிவளைத்து ஆண் ஒருவர் உட்பட ஒன்பது பேரை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய 21 ஆம் திகதி மாலை அநுராதபுரத்தின் மாத்தளை சந்தி, தஹய்யாகம மற்றும் யாழ்பாணம் சந்தி, புபுதுபுர பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே துர்நடத்தையில் ஈடுபட்டு வந்த எட்டு பெண்களையும் அவர்களுக்கு உதவிய ஆண் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 28 வயதுக்கும் 42 வயதுக்கும் இடைப்பட்ட கல்கமுவ, தம்புள்ள மற்றும் பதவிய, கஹட்டகஸ்திகிலிய, கலன்பிந்துனுவெவ, தமுத்தேகம பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்ப கட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

இலங்கை போக்குவரத்துச் சபை (SLTB)

ரோலர் பெயாரிங், போல் பெயாரிங் மற்றும் நீடில் பெயாரிங்களை வழங்குவதற்காக விலைமனு

(SLTB/TS/GEN/02-II/2021

1. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் 2022.04.12 மு.ப. 10.30 வரை தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாக ரோலர் பெயாரிங், போல் பெயாரிங் மற்றும் நீடில் பெயாரிங்களை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து, பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக இ.போ.ச பாரிய பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு - 05, கிருல வீதி, 200, இலங்கை போக்குவரத்துச் சபை, பெறுகைப் பிரிவு, செயலாளர் இடம் காணப்படும் படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அலுவலக நேரங்களில் வேலை நாட்களில் ஓர் மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 12,500/- செலுத்துவதன் பேரில் 2022.03.23 முதல் 2022.04.11 வரை விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

விபரம்	விலைமனுப் பிணை (ரூபா)
60 நாள் கடன் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு ரோலர் பெயாரிங், போல்பெயாரிங் மற்றும் நீடில் பெயாரிங்களை வழங்குதல்	2,000,000/-

2. மொத்த பெயர் குறிப்பிடப்படும் உள்ளூர் பிரதிநிதிகள்/ அங்கீகரிக்கப்பட்ட ரோலர் பெயாரிங், ரோல் பெயாரிங் மற்றும் நீடில் பெயாரிங் உற்பத்திக்கான முகவர்கள் இந்த விலைமனுவுக்கு தகைமை பெறுவர்.
3. உற்பத்தியாளர்களின் அங்கீகாரம் பெறாத விலைமனுக்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. இதற்காக தகைமை பெறுவோருக்கு உள்ளக முன்னுரிமை வழங்கப்படும்.
4. (அ) விலைமனு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் 1987ஆம் ஆண்டின் ஒப்பந்த இல 3 இன் விதிகளின் கீழ் கொழும்பு - 10, D.R விஜேவர்தன மாவத்த, 'சமாகம் மெதுர' பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் கீழ் ஓர் விலைமனுதாரரின் சார்பாக அல்லது முகவராக செயற்படும் எந்த நபர், உதவி முகவர், பிரதிநிதிப்படுத்துபவர் அல்லது பெயர் குறிப்பிடப்படுபவர். சான்றிதழின் மூலப் பிரதியை சமர்ப்பிக்க தவறும் விலைமனுதாரரின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   (ஆ) 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்டம் இல-03 விதிகளின் கீழ் பெறுகை வழங்கப்படுவதற்கு முன் மற்றும் விலைமனு சமர்ப்பித்த பின்னர் உடனடியாக தாமாகவே விலைமனுதாரர்களும் பதிவு செய்யப்படுவர். சம்பந்தப்பட்ட பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்காத எந்த விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்பட மாட்டாது.
5. விலைமனுக்கள் 2022.07.13 வரை செல்லுபடியாதல் வேண்டும். எனினும் வழங்கல் ஏற்கப்பட்டதிலிருந்து ஒரு வருடத்திற்கு விலைமனு விலைகள் இணைக்கப்படல் வேண்டும்.
6. இலங்கை மத்திய வங்கியின் பதிவு செய்த வர்த்தக வங்கி அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பதிவு செய்த ஓர் காப்புறுதி முகவரகத்தினால் வழங்கப்படும் அத்துடன் இ.போ. சபைக்கு முதலாவது எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பிப்பதன் பேரில், மாற்ற முடியாத, நிபந்தனையற்ற காசாக்கக்கூடிய 2022.08.12ம் திகதி வரை செல்லுபடியாகும் ஓர் விலைமனுப் பிணையை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும்.
7. விலைமனு ஆவணத்தின் எல்லா பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்படுவதுடன் அவரது முத்திரை இடப்படல் வேண்டும்.
8. கொழும்பு-05 கிருல வீதி 200, இலங்கை போக்குவரத்து சபை பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் விலைமனுக்கள் வைப்பிலிடப்படல் வேண்டும். அல்லது நகல்களுடன் பதிவுத் தபாலில் 2022.04.12 மு.ப. 10.00 மணிக்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ரோலர் பெயாரிங், போல் பெயாரிங், நீடில் பெயாரிங் வழங்குதல்' என்று குறிப்பிடப்பட்டு, வெவ்வேறு இரண்டு கடித உறைகளில் 'மூலப் பிரதி' மற்றும் 'பிரதி' யை உள்ளடக்கி பொறியிடப்பட்ட உறைகளில் இடப்படல் வேண்டும்.
9. 2022.02.02ம் திகதி மு.ப. 10.30 இற்கு விலைமனுக்கள் மூடப்படும் மற்றும் விலைமனுக்கள் கொழும்பு-05, கிருல வீதி, 200, இலங்கைப் போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவில் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனு திறக்கப்படும் போது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தலைவர், இபோச பெறுகைக்குழு,
இலங்கை போக்குவரத்துச் சபை,
இல-200, கிருல வீதி, கொழும்பு-05
விசாரணைகள், செயலாளர், பெறுகைக் குழு
தொ.பே - 0117706110, 0771056110, தொ.பே/ பெக்ஸ்: 0112588457

சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

325

தொழில்துறை பொது

கட்டுமானப் பணிக்கு கூலி வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. தொடர்பு கொள்வதற்கு: 0775497185, 0760095539, 0783307979. 020995

Repeat Your ad For Better Offers

திகதி 21.03.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4713
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,175,760.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 6 1 6 8 5 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 12,219,674.00

மெகா பவர் 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1061
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,006,220.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 243,045,882.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து G
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கங்கள் 01 06 43 66

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 743
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,732,760.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 01 29 61 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 103,657,464.40

ஜாதிக லொதரஸ் மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.A. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

அநுராதபுரம் இணைந்த நகர அபிவிருத்தி கருத்திட்டம்

வெற்றிடங்கள் - கருத்திட்ட பதவியணி

அநுராதபுரத்தின் இணைந்த நகர அபிவிருத்தி கருத்திட்டம் அநுராதபுரத்தின் நகர்புற உட்கட்டமைப்பு வசதிகள், சேவைகள் நடமாட்டம், போக்குவரத்து மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், பொது நகர இடங்களை மேம்படுத்துதல் மற்றும் கருத்திட்டத்தின் முதலீட்டின் ஊடாக விருத்தியடைந்த சொத்துக்களை திறம்பட முகாமைத்துவம் செய்வதற்கு பங்குதாரர்களுக்கு முடியுமான வகையில் அவர்களின் நிறுவன ஆற்றலை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்ட நகர அபிவிருத்தி முயற்சியாகும் நகரம் நகர வலயத்தில் விசேட கலாசார மற்றும் பொருளாதார சொத்துக்களை உபயோகப்படுத்தி மூலோபாய முதலீடுகளின் ஊடாக நகரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தல் இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். கருத்திட்டம் பொருட்டு பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் (AFD) ஒத்துழைப்பு வழங்குகின்றது.

அநுராதபுரம் இணைந்த நகர அபிவிருத்தி கருத்திட்டத்தில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகள் மற்றும் அனுபவமுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆங்கில மொழி தேர்ச்சி, அரசாங்கத்தின் ஒழுங்கு விதிகள் தொடர்பாக நன்கு அறிந்திருத்தல் மற்றும் கணினி கல்வியறிவு ஆகியவை அத்தியாவசிய முன்தேவைகளாகும்.

தொடர் இலக்கம்	பதவிப் பெயர்	இலக்கம்	தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்
1	முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2019 பிரகாரம்- மட்டம் PS – 1		
	கருத்திட்ட பணிப்பாளர்	01	(பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3) 1) சம்பந்தப்பட்ட விடய துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது பட்டப்படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். **அல்லது** சம்பந்தப்பட்ட விடய துறையில் முதலாவது பட்டப்படிப்புக்கு இணையான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை இருத்தல் வேண்டும். **அல்லது** இணை அங்கத்துவம்/ சம்பந்தப்பட்ட விடய துறையில் அங்கீகாரம் பெற்ற தொழில்சார் நிறுவனமொன்றில் அதற்கு இணையான தொழில்சார் தகைமை இருத்தல் வேண்டும். **மற்றும்** முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 16 ஆண்டுகளிலான பட்டப்பின் படிப்பு தகைமைகளைக் கொண்டு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அதில் 8 ஆண்டுகளிலான சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான சேவைக் காலத்தினை கொண்டிருத்தல் வேண்டும். 2) சம்பந்தப்பட்ட விடய துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது பட்டப்படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். **அல்லது** சம்பந்தப்பட்ட விடய துறையில் முதலாவது பட்டப்படிப்புக்கு இணையான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை இருத்தல் வேண்டும். **அல்லது** இணை அங்கத்துவம்/ சம்பந்தப்பட்ட விடய துறையில் அங்கீகாரம் பெற்ற தொழில்சார் நிறுவனமொன்றில் அதற்கு இணையான தொழில்சார் தகைமை இருத்தல் வேண்டும். **மற்றும்** பூரண/ பட்டயம் பெற்ற அங்கத்துவம் அல்லது சம்பந்தப்பட்ட விடய துறை தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் அதற்கு இணையான தொழில்சார் தகைமை பெற்றிருத்தல் அல்லது சம்பந்தப்பட்ட விடய துறை தொடர்பில் பெற்றுக்கொண்ட பட்டநிலை பின்படிப்பு பெற்றிருத்தல் வேண்டும். **அத்துடன்** முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 14 ஆண்டுகளிலான பட்டப்பின் படிப்பு தகைமைகளைக் கொண்டு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அதில் 7 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும். 3) சம்பந்தப்பட்ட விடய துறை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது பட்டப்படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். **அல்லது** சம்பந்தப்பட்ட விடய துறை தொடர்பில் முதலாவது பட்டப்படிப்புக்கு இணையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை இருத்தல் வேண்டும். **மற்றும்** சம்பந்தப்பட்ட விடய துறை தொடர்பாக பெற்றுக்கொண்ட பட்டநிலை பின்படிப்பு பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். **அத்துடன்** பூரண/பட்டயம் பெற்ற அங்கத்துவம் அல்லது சம்பந்தப்பட்ட விடய துறை தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் அதற்கு இணையான தொழில்சார் தகைமைகள் பெற்றிருத்தல் வேண்டும். **அத்துடன்** முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 ஆண்டுகளிலான பட்டப்பின் படிப்பு தகைமைகளைக் கொண்டு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அதில் 6 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விதிகளும் நிபந்தனைகளும்:
சம்பளம், விதிகள் மற்றும் நிபந்தனைகள் 2019.03.15 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2019 இன் படியாகும்.

விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல்:
விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் தகைமைகள், (கணினி கல்வியறிவு, ஆங்கிலம் மற்றும் ஏற்புடைய தகைமைகள் அடங்கலாக) அனுபவம், தொலைபேசி இலக்கம் மற்றும் மின் அஞ்சல் முகவரி உள்ளடக்கிய ஏனைய தகவல்களைக் குறிப்பிடப்பட்டு, அவர்களின் விண்ணப்பங்களை 2022.04.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அரசாங்க நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

செயலாளர்,
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
8 ஆவது மாடி, "சுகுருபாய",
பத்தரமுல்ல

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 மார்ச் 23
புதன்கிழமை

நியமனம் வழங்க கோரி வடமாகாண தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்

கோப்பாய் குறூப் நிருபர்

ஆசிரிய நியமனம் வழங்க கோரி வடமாகாண தொண்டர் ஆசிரியர்கள் நேற்று (22) கதவடைப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டுள்ளனர். யாழ்.செம்மணி வீதியில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சின் வாயிலில் வட மாகாண தொண்டர் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களது நியமனம் தொடர்பாக அறிந்துகொள்வதற்காக நேற்றைய தினம் அமைச்சுக்கு வருகை தந்திருந்த போதிலும் அதற்கான பதில் கிடைக்காமையால் அவர்கள் வடமாகாண கல்வி அமைச்சின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலையில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டராசிரியர்கள் காலையில் அலுவலகத்திற்கு வருகை தந்த உத்தியோகத்தர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அதனைத் தொடர்ந்து பொலிஸாரின் தலையீட்டினால் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வடமாகணத்தைச் சேர்ந்த 186 தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்தை கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உலக காடுகள் தினமான நேற்றுமுன்தினம் (21) யாழ். விநாயகர் ஞானக்குழந்தை இல்ல மாணவர்களுக்கு எதிர்காலத்தை நோக்கிய சுற்றுசூழல் கழகம் மரக்கன்றுகளை வழங்கி வைத்ததுடன், காட்டு விலங்குகளின் மூலம் மனிதர்களுக்கு கிடைக்கும் நன்மைகளை கதைகள், படங்கள் மூலம் வெளிப்படுத்தினர். இந்நிகழ்வில் இல்ல ஆசிரியை, எதிர்காலத்தை நோக்கிய சுற்றுசூழல் கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.
(படம்: கோப்பாய் குறூப் நிருபர்)

போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

யாழ்.விசேட,கரவெட்டி தினகரன் நிருபர்கள்

யாழ்.நகரப் பகுதியில் தடைசெய்யப்பட்ட போதை மாத்திரைகளுடன் ஒருவர் நேற்றைய தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவருகின்றது.

மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேசிய புத்தரிசி விழாவுக்கு அரிசி வழங்கும் நிகழ்வுகள்

யாழ்.விசேட, கரவெட்டி நிருபர்கள்

தேசிய புத்தரிசி விழாவிற்கான அரிசியினை வழங்குவதற்காக கமநல சேவை நிலையங்களில் இடம்பெறும் புத்தரிசி விழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கரவெட்டி கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்றது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை புத்த பெருமானுக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா ஏப்ரல் 03ம் திகதி அக்ர சாஸ்ய ஜெயஸ்ரீ மகா போதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்காக மாவட்ட ரீதியாக புத்தரிசி வழங்கும் விழா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கரவெட்டி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கமக்கார அமைப்பினர், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட புத்தரிசி சேகரிக்கும் விழா நேற்று முழங்காவில் கமநல சேவைகள் நிலையத்தில் கமக்கார அமைப்பினர், விவசாயிகள் என பலரின் பங்கு பெற்றலுடன் சிறப்புற இடம்பெற்றது.

வட்டுவாகல் விபத்து: தனியார் பஸ் சாரதியும் நடத்துனரும் கைது

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

வட்டுவாகல் விபத்தில் தனியார் பஸ் சாரதியும் நடத்துனரும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் பஸ் முல்லைத்தீவு பொலிஸ்நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் தனியார் பஸ் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 21 பேர் காயமடைந்துள்ளார்கள்.

கடந்த 20ஆம் திகதி முல்லைத்தீவு பரந்தன் பிரதான வீதியில் வட்டுவாகல் பகுதியில் யாழில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சென்ற தனியார் பஸ் வேக கட்டுப்பாட்டினை இழந்தமையால் விபத்து இடம்பெற்றிருந்தது.

இவ்விபத்தில் உயிரிழந்த கிளிநொச்சியினை சேர்ந்த இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் நேற்று முன்தினம் 21.03.2022 ஒப்படைக்கப்பட்டது. காயமடைந்தவர்கள் சிலர் மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்விபத்து தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். விபத்துக்குள்ளான பஸ்வண்டி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. இதனையடுத்து பஸ் சாரதி மற்றும் நடத்துனர் இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்

கரவெட்டி தினகரன் நிருபர்

சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 14 வயது சிறுவனை நன்னடத்தை பாடசாலையில் சேர்க்க யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

8 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் சிறுவன் நன்னடத்தை பாடசாலையில் சேர்க்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சிறுமியின் தாயார் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் வழக்கை பதிவு செய்தனர்.

சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், சிறுமியின் வாக்குமூலத்தையும் பொலிஸார் பெற்றுக்கொண்டனர். கைது செய்யப்பட்ட 14 வயது சிறுவனை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதனைத்தொடர்ந்து நீதிமன்றம் சிறுவனை நன்னடத்தைப் பாடசாலையில் அனுமதிக்க உத்தரவிட்டது.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு அகதிகளாக அடைக்கலம்

இலங்கையிலிருந்து ஆறு பேர் அகதிகளாக இந்தியாவில் அடைக்கலம் கோரியுள்ளனர். தமிழகத்தின் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடல் பகுதிக்கு அருகே உள்ள மணல் திட்டில் இலங்கையைச் சேர்ந்த ஒரு ஆணும் 2 பெண்களும் 3 குழந்தைகளுமாக ஆறு பேர் அடைக்கலம் கோரியுள்ளனர். (யாழ். விசேட நிருபர்)

யாழில் கொரோனா சிகிச்சை நிலையங்களில் மோசடி

கோப்பாய் குறூப் நிருபர்

யாழ் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மூன்று கொரோனா இடைத்தங்கல் முகாமில் இருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கணக்கு அறிக்கையில் இடம் பெறாமல் மாயமாகியுள்ளது. யாழ் மாவட்டத்தில் கொரோனா பரவல் அதிகரித்த காலப் பகுதியில் தனிமைப்படுத்தி சிகிச்சை வழங்குவதற்கும் பிற மாவட்டங்களிலிருந்து கொரோனா என இனங்காணப்பட்டவர்களை தனிமைப்படுத்துவதற்காக மருதங்கேணி, நாவற்குழி மற்றும் வட்டுக்கோட்டை தனிமைப்படுத்தல் நிலையம் அமைக்கப்பட்டது.

ஏ 9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயம்

சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர்ச் சந்திஇராமாவில் பகுதியில் ஏ 9 வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டி மீது கனரக வாகனம் ஒன்று மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது. இதில் முச்சக்கரவண்டியை செலுத்திச் சென்ற வெள்ளாம்போக்கட்டி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 28வயதான சு.விஜிதன் என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தவக்காலத்தை நினைவுகூரும் வகையில் மன்னார் மறைகோட்டத்திலுள்ள மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்களுக்கான ஒருநாள் தியானம் தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலய யாத்திரிகர் ஸ்தலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
(படங்கள்: தலைமன்னார் விஷேட நிருபர்)

சட்டவிரோத மணல் அகழ்வு எதிராக செயற்பட்ட சமூக செயற்பாட்டாளர் மீது தாக்குதல்

கிளிநொச்சி குறூப் நிருபர்

சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக செயற்பட்ட சமூக செயற்பாட்டாளர் மீது இராணுவ சோதனை சாவடிக்கருகில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிளிநொச்சி தர்மபுரம் உழவனூர் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்விற்குஎதிராக செயற்பட்டுவந்த சமூக செயற்பாட்டாளர் ஒருவரும் அவரது உறவினர் மீதும் கல்லாறு சுண்டிக்குளம் இராணுவ சோதனைச் சாவடிக்கருகில் இனம்தெரியாத குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது அவரது முச்சக்கர வண்டி சேதமாக்கப்பட்டுள்ளதோடு, அவரும் காயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

தர்மபுபுரம் உழவனூர், கல்லாறு பகுதிகளில் தொடர்ச்சியாக கட்டுப்பாடு இன்றி சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது. எனவே இதற்கு எதிராக தாக்குதலுக்குள்ளான சமூக செயற்பாட்டாளர் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்ததுடன், சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பல இடங்களில் முறையிட்டும் வந்துள்ளார்.

இந்நிலையில் சமூக செயற்பாட்டாளர் மீது கடந்த சனிக்கிழமை மதியம் ஏழு பேர் கொண்ட குழுவினர் சுண்டிக்குளம் கல்லாறு வீதியில் இராணுவச் சோதனை சாவடிக்கருகில் வைத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளதோடு, அவர் பயணித்த முச்சக்கர வண்டியும் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

இதன்போது காயமடைந்த அவர் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

எனவே இது தொடர்பில் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் தெளிவாக குறிப்பிட்டு முறையிட்டும் பொலிஸார் நேற்று வரை எவரையும் கைது செய்யவில்லை. ஆனால் தாக்குதல் மேற்கொண்டவர்கள் பொது இடங்களில் பகிரங்கமாக நடமாடி திரிகின்றனர் என சம்மந்தப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மருந்து தட்டுப்பாடு : கண் சத்திர சிகிச்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாட்டால் கண் சத்திர சிகிச்சைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக பதில் பணிப்பாளர் மு.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கண்சத்திர சிகிச்சைக்கான மருந்துப் பொருட்கள் சிலவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. மேலும் சில மருந்துப் பொருட்கள் குறைந்த அளவிலேயே உள்ளன. இதனாலேயே சத்திர சிகிச்சை பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் மருந்துகளுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அவை எமக்கு கிடைக்கும் பட்சத்தில் மீண்டும் சத்திரசிகிச்சைகள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

கிழக்கின் குரல்

மண்முனைப்பற்றில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனினால் வழங்கிவைப்பு

(கல்லடி குறூப் நிருபர்)

நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் "கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம் 2022" இற்கு அமைவாக மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள் திங்கட்கிழமை (21) இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்விற்கு, பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டிருந்ததுடன், பயனாளிகளுக்கான உதவித் திட்டங்களையும் வழங்கி வைத்தார்.

வரவு செலவு திட்டத்திற்கு அமைவாக அதன் முதல் காலாண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள வட்டாரத்திற்கு நான்கு மில்லியன், கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு மூன்று மில்லியன் மற்றும் பிரதேச அபிவிருத்தி குழு தலைவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 100 மில்லியன் அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகளின் அடிப்படையில் 85 பயனாளிகளுக்கான வாழ்வாதார மேம்பாட்டு உதவித்திட்டங்கள், இதன்போது இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் யோகநாதன் றொஸ்மன், மண்முனைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் சுரேந்திரன், பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.எம்.ஜெயச்சந்திரன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பயனாளிகளும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டி உள்ளிட்ட பெறுமதிவாய்ந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன், இவற்றைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் அரசாங்கத்திற்கும் இராஜாங்க அமைச்சருக்கும் தமது நன்றிகளை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

மருதமுனை விஜிலி எழுதிய இரண்டாவது தெருவின் நிழல் நூல் வெளியீட்டுவிழா கடந்த 20 ஆந் திகதி இடம்பெற்றபோது,பிரதம அதிதி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர்.ஐ.எல்.எம்.றிபாஸிடமிருந்து ஆசிரிய ஆலோசகரும் பிராந்திய செய்தியாளருமான எஸ்.சிறாஜுதீன் நூலினை பெறுவதையும் அருகே ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் முகம்மட் ஹஸன் நிற்பதையும் காணலாம்.

மதரசதுல் கௌதியாவில் பரிசளிப்பு விழா

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காங்கேயனோடை பிரதேசத்திலுள்ள அல் மதரசதுல் கௌதியாவின் பரிசளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை (20) காங்கேயனோடை முகைதீன் ஜும்ஆப்பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

பள்ளிவாசல் தலைவர் எச்.ஏ.றசாக் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ரைஸ் சிறீலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் அக்றம் அபூபக்கர் நளீமி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த வைபவத்தில் மண்முனைப் பற்று பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.பி.எம்.றஸீம், எம்.ஐ.முகம்மட் நஸீம், ஓய்வு பெற்ற அதிபர் மௌலவி ஏ.சி.எம்.றிபாய், ஓய்வு பெற்ற காதி நீதிபதியும் ஓய்வு பெற்ற அதிபருமான ஏ.எம். ஹிழுர், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது 2020ஆம் ஆண்டுக்கான அல்குர்ஆன் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த அல் மதரசதுல் கௌதியாவின் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன், கூடுதலான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

கவிதை நூல் வெளியீட்டு விழா

தோப்பூர் குறூப் நிருபர்

"கிழக்குவானம்" முஸ்தபா மௌஜூத் எழுதிய "கீழ்த்திசைக்காற்று" என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா(20) தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் ஓய்வு பெற்ற அதிபர் ஏ.நஜிமுதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், கௌரவ அதிதிகளாக மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.முனவ்வரா நளீம், முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் மற்றும் தோப்பூர், மூதூர் இலக்கிய வாதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மு.கா புதிய வீரியத்தோடு முன்னேற வேண்டிய காலம் கனிந்து விட்டது

சம்மாந்துறையில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்

(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)

முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கம் அதனுடைய வீரியம் இன்று ஏதோ விரைந்துபோய் விட்டதாக சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அது புதிய வீரியத்தோடு முன்னேறிச் செல்ல வேண்டிய காலம் கனிந்து விட்டது என, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சம்மாந்துறை முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸின் 5வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இளைஞர் ஒன்று கூடல் சனிக்கிழமை (19) சம்மாந்துறை அப்துல் மஜீட் நகர மண்டபத்தில் அதன் தலைவர் ஹாதிக் இப்றாஹிம் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், முஸ்லிம் சமூகத்திற்காக தைரியமாக முகங்கொடுப்பதற்கு பலமான இயக்கமும், போராளிகளும் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையில்தான் முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

எனவே, கட்சி போராளிகள் இருக்கும் வரைஅதன் தலைமையிடம் தயக்கம் கிடையாது. பயமில்லாமல், பீதியில்லாமல் எதிர் கொள்ளலாம்.இந்தஇயக்கத்தினை வாழ வைப்பதற்கு இந்த நிலைமாறு காலத்தில் இந்த இயக்கம் இன்னும் புதிய வீரியத்தோடு முன்னேறிச் செல்ல அனைவரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். என்றார்.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.எல்.தவம், எம்.எஸ். உதுமாலெவ்வை, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

பாலமுனையில் காட்டு யானைகளால் வீட்டுதோட்ட பயிர்கள் சேதம்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

பாலமுனை பிரதேசத்தின் மக்கள் குடியிருப்பு பிரதேசத்தினுள் ஞாயிற்றுக்கிழமை (20) அதிகாலை வேளையில் புகுந்த யானைகள் வீட்டுத் தோட்டத்திலுள்ள தென்னை, மா ,பலா, வாழை மற்றும் உடமைகள் என்பன சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் இரவு நேரங்களில் அச்சம் நிலவிவருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை யானைகளின் அட்டகாசத்தினால் வீட்டு சுற்றுப்புறச் சுழலிலுள்ள பயன்தரும் மரங்கள் பயிர்கள் என்பனவும் சேதமாகியுள்ளன.

அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் போன்ற வயலை அண்டிய பிரதேசங்களில் வேளாண்மை அறுவடை நிறைவடைந்த நிலையில் , காட்டு யானைகள் வருவதாகவும் இக்காலப்பகுதியில் மக்கள் அன்றாட தேவைகளுக்காக இரவு நேரங்களில் வெளிச்செல்ல முடியாது சிரமப்படுவதுடன் உயிராபத்தை எதிரநோக்கி வருவதாகவும் பிரதேச வாசிகள் சுட்டிகாட்டுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் வயலை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்கள் வேளாண்மை அறுவடை முடிந்த காலப்பகுதியில் இரவு நேரங்களில் வெளிச்செல்ல முடியாமல் அச்சத்துடன் வீட்டில் முடங்கியிருக்க வேண்டிய நிலை தொடராக காணப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

கூடுதல் விலைக்கு பால்மா விற்பனை செய்த வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை நீதவான் நீதிமன்ற நியாயாதிக்கத்திற்குட்பட்ட கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் கூடுதலான விலைக்கு பால்மா விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைத்த இரகசிய முறைப்பாட்டையடுத்து, திங்கட்கிழமை (21) மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது பால்மா பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, குறித்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக, அம்பாறை மாவட்ட பாவனையாளர் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார நவரத்ன தெரிவித்தார்.

இந்த சுற்றிவளைப்பின் போது மூன்றுக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் முற்றுகையிடப்பட்டு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் பரிசோதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

நாளாந்த விலையேற்றத்தை அடுத்து நீண்ட நாட்களாக பதுக்கி வைத்திருந்து, சந்தர்ப்ப வியாபாரத்தை மேற்கொண்டு வரும் கடை உரிமையாளர்கள் அதிக இலாபம் ஈட்டும் நோக்கில் பழைய விலைகளை மாற்றம் செய்து புதிய விலைகளை அச்சிட்டு விற்பனை செய்ய தயாரான நிலையில், வர்த்தக நிலையத்தில் மறைத்து வைக்கபட்டிருந்த ஒரு தொகை அங்கர், ரத்தி போன்ற பால்மா வகையினை கைப்பற்றியுள்ளதாக தெரிவித்தார்.

இதன்போது 1 கிலோ 1,345 ரூபா பழைய விலை பொறிக்க பட்டிருந்த அங்கர் பால் மாவினை புதிய விலைக்கு 1,950 க்கு விற்பனை செய்ததாகவும், 540 ரூபா பெறுமதியான 400 கிராம் பால்மா 700 ரூபாவுக்கு விற்பனை செய்யபட்டதாகவும், பொது மக்களிடமிருந்து கிடைக்க பெற்ற முறைப்பாட்டையடுத்தே இந்த சுற்றி வளைப்பு மேற்கொண்டதாக தெரிவித்தார். கைப்பற்ற பட்ட ஒரு தொகை பால்மாவினை பொதுமக்களுக்கு பொறிக்கப்பட்ட விலைக்கு அவ்விடத்திலேயே பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் இவ்வாறான திடீர் சுற்றிவளைப்புகள் சகல பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)

சம்மாந்துறை வயல் பகுதியில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளாறு மயில்லோடை வயல் பிரதேசத்தில் வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது திங்கட்கிழமை (21) மதியம் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிர் இழந்தவர் சம்மாந்துறை மலையடிக்கிராமத்தினைச் சேர்ந்த எம்.செயின் தம்பி (68 வயது) இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தை ஆவார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சித்திர போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபர திணைக்களத்தினால் நாடு தழுவிய ரீதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட 'தொகை மதிப்பு ஓவியர்' சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுகள் பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள பிரதேச செயலகங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, வெற்றியீட்டிய அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட பதாதை வரைதல் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற உயர்தரப் பிரிவு மாணவர்களான என்.ஹப்றின் ஹனா, ரி.இஸட். பாத்திமா பறாதிஸ், வை.எச்.நுதைஸ் அஹமட் ஆகிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், பிரதி அதிபர் எம்.இக்பால், இணைப் பாட விதானத்திற்குப் பொறுப்பான உதவி அதிபர் ஏ.எல்.சம்சல் பளீல் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

போட்டியில் வெற்றி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களுக்கும் இம்மாணவர்களை வழிப்படுத்தி தற்போது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஆசிரியர் நசீப் உள்ளிட்ட ஆசிரியர்களுக்கு தமது வாழ்த்துக்களையும் நன்றியறிதலையும் தெரிவிப்பதாக அதிபர் ஏ.பி.முஜீன் இதன்போது குறிப்பிட்டார்.

நிந்தவூர் ஜேர்மன் நட்புறவுப் பாடசாலையில் இவ்வருடம் தரம் 05 புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தியெய்திய மாணவ, மாணவியரையும், வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

ஓய்வூதிய பணிக்கொடையை தாமதியாது வழங்குமாறு கோரிக்கை

(கல்முனை விசேட நிருபர்)

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடைகளை மேலும் தாமதிக்காமல் உடனடியாக வழங்குமாறு ஓய்வூதியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி மேற்படி அமைப்பின் செயலாளர் சரத் லால் பெரேராவினால் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் ஜகத் டி.டயசுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவையில் 20 முதல் 30 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய பலருக்கு வழங்கப்பட வேண்டிய 24 மாதங்களுக்கான ஓய்வூதிய தொகையை உள்ளடக்கிய ஓய்வூதிய பணிக்கொடை 2020 ஆம் ஆண்டுக்கு பின் ஓய்வுபெற்ற பலருக்கு இன்னும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

இக்கொடுப்பனவை உரிய காலத்திற்கு அரசு வழங்காமையால் சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள வங்கிச் சலுகையை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இதன் காரணமாக ஓய்வூதியர்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கும் மன உழைச்சலுக்கும் ஆளாகி வருகின்றனர். இது பெரும் அநீதியான செயற்பாடாகும்.

மவுசாகல நீர்த்தேக்கம் வற்றியமையால் வெளி தெரியும் மத வழிபாடு இடங்கள்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மலையகத்தில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக மவுசாகல நீர்தேக்கத்தினால் நீரில் மூழ்கிய பழைய மஸ்கெலிய நகர கட்டடங்கள் தற்போது வெளித்தெரிய ஆரம்பித்துள்ளன.

1969ஆம் ஆண்டு முதல் முறையாக மவுசாகல நீர்த்தேக்கத்தில் நீர்நிரப்பப்பட்ட போது மஸ்கெலிய நகரத்தில் காணப்பட்ட சண்முகநாத சுவாமி ஆலயம், சுமனாராம விகாரை,சென் ஜோசப் கிறிஸ்தவ ஆலயம், இஸ்லாமிய பள்ளி, விநாயகர் ஆலயம், சிவனாலயம் என்பன நீரில் மூழ்கின.

ஒவ்வொரு கோடை காலத்திலும் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வரும் போது அவை வெளித்தெரிய ஆரம்பிக்கும். இக்காலப்பகுதியில் அந்த ஆலயங்களுக்கு மக்கள் சென்று வழிபடுவது வருடந்தோரும் இடம்பெற்றுவருகிறது.

இம்முறை நீர் அதிகளவு குறைந்துள்ளமையால் சிவனடிபாதமலைக்கு செல்லும் வழியிலுள்ள வர்த்தகர்கள் ஒன்றிணைந்து பௌத்தபிக்கு மூவருக்கு தானம் வழங்கியதுடன் சகல வணக்கஸ்த்தலங்களுக்கும் பூஜைகள் செய்து வழிபாடு செய்தனர்.

இரத்ததான நிகழ்வு

அக்குறணை குறூப் நிருபர்

அக்குறணை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயத்தின் பவள விழாவை முன்னிட்டு இடம்பெற்று வரும் நிகழ்வுகளில் ஒன்றாக இரத்த தானம் வழங்கும் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

பாடசாலை அதிபர். ஆசிரியர்கள். பெற்றோர்கள். பழைய மாணவர்கள் உட்பட நலன் விரும்பிகள் இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்துவருகின்றனர்.

அதில் ஒன்றாக இடம்பெற்ற இரத்ததான நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பேராதனை வைத்தியசாலை சிறுவர் பிரிவின் வைத்தியர் எம்.ஏ.எம். பைஸல் கலந்து கொண்டார்.

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து செந்தில் தொண்டமான் கலந்துரையாடல்

லுணுகல நிருபர்

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொள்வதற்கான மக்கள் சந்திப்பொன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் மற்றும் பிரதமரின் பெருந்தோட்ட பகுதிக்கான இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

பதுளை மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று(22) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பதுளை மாவட்ட இலங்கை.தொ.கா பிரதிநிதிகள், தோட்டத் தலைவர்கள் மற்றும் தோட்டக் கமிட்டி தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மலையக மக்கள் பொருளாதார ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் தேயிலைத்தோட்டங்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

மேலும் அப்பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதற்காக உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதோடு, பெருந்தோட்ட மக்கள் பொருளாதாரரீதியாக முகம்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் இதன்போது தெரிவித்தார்.

சிறுத்தைகள் நடமாட்டம்

மாணவர்கள் அச்சம்

நோர்வூட் போட்ரி தோட்டப் பாடசாலைக்கு அருகிலுள்ள மரமொன்றில் சிறுத்தையொன்று தனது இரண்டு குட்டிகளுடன் ஏறியதால், மாணவர்களும் ஆசிரியர்களும் அச்சம் அடைந்தனர்.

போட்ரி தோட்டத்தில் உலாவித் திரியும் சிறுத்தை, தனது குட்டிகளுடன் இரைத் தேடி வந்து அங்கிருந்த நாய்களை வேட்டையாட முயற்சித்துள்ளது.

எனினும் இதன்போது அங்கிருந்த தொழிலாளர்கள் கூக்குரலிட்டதால், சிறுத்தை குட்டிகளுடன் பாடசாலைக்கு அருகிலிருந்த மரத்தின் மீது ஏறியுள்ளது.

இதனையடுத்து, இவ்விடயம் தொடர்பில் நல்லதண்ணி வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு நோர்வூட் பொலிஸார் அறிவித்தனர். வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வருகைத் தந்து குட்டிகளுடன் சிறுத்தையை தேயிலைத் தோட்டத்துக்குள் துரத்தியுள்ளனர்.

அத்துடன் போட்ரி தோட்டத்தில் உலவும் இந்த சிறுத்தையை காட்டுக்கு துரத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் தொழிலாளர்களிடம் அதிகாரிகள் உறுதி வழங்கியுள்ளனர்.

நச்சுத்தன்மையற்ற உணவகம் திறந்து வைப்பு

காவத்தை தினகரன் விசேட நிருபர்

கலிகமுவ பிரதேசசபையின் மூலம் 25 இலட்சம் ரூபா செலவில் அவிசாவளை கேகாலை வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட நச்சுத்தன்மையற்ற உணவகமொன்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் நேற்றுமுன்தினம்(21) திறந்து வைக்கப்பட்டது.

இந்த உணவகம் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்துள்ளதுடன் தொழில் இல்லாதவர்களுக்கு இதன் மூலம் வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலிகமுவ பிரதேச சபை தலைவர் சமன் ஜயசிங்க,வரக்காபொல மற்றும் வெலிகபொல பிதேச சபை தலைவர்கள், கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய, மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

குருவிட்ட குப்பை மேடு எரிந்து கட்டடத்துக்கும் சேதம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

குருவிட்ட பிரதேசசபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்த குப்பை மேடு மற்றும் மீள் சுழற்சிக்காக சேகரிக்கப்பட்டிருந்த கழிவுப்பொருட்களில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இவை சேகரிக்கப்பட்டு வந்த 30 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமும் மீண்டும் பயன்படுத்த முடியாதளவுக்கு சேதமடைந்துள்ளதாக பிரதேச சபை அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

வாழ்க்கை செலவு அதிகரிப்பு மரக்கறி உற்பத்தியாளர்கள் பாதிப்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக் கிழங்கு மற்றும் மரக்கறிகளை விற்பனை செய்துக்கொள்ள முடியாமல் மரக்கறி வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கடந்த காலத்தில் நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு வியாபாரி நாள் ஒற்றுக்கு 3000 கிலோ முதல் 5000 கிலோ மரக்கறி மற்றும் உருளைக் கிழங்கு விற்பனை செய்துவந்தனர். எனினும் இன்று 200 கிலோ மரக்கறிகளை கூட விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். டீசல் தட்டுபாட்டால் வெளிமாவட்டத்திலுள்ள வியாபாரிகள் மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு வருவதில்லை. இதனால் மரக்கறி விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதேவேளை மரக்கறி உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளும் உற்பத்தி செய்யும் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாமல் அவஸ்தைப்படுகின்றனர். அத்தோடு மரக்கறி தோட்டங்களிலும் வியாபாரிகளிடம் தொழில்புரியும் தொழிலாளர்களும் வேலை இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். இது இவ்வாறிருக்க தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிப்பொருள் தட்டுபாடு மற்றும் சமையல் எரிவாயு நெருக்கடி காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும் மரக்கறி வியாபாரிகளும் 60 வீதத்தால் வீழ்ச்சியடைந்து பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் இரசாயன உரம், கிருமிநாசினி இறக்குமதி தடை செய்யப்பட்டதால் மரக்கறி உற்பத்தியில் பாரிய பாதிப்பு ஏற்பட்டது. அதனை தொடர்ந்து டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டனர். தற்பொழுது சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும் மரக்கறி வர்த்தகர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக பல இடங்களில் உணவங்களிலும் சுற்றுலா விடுதிகளிலும் உணவு மற்றும் தேனீர் வழங்க முடியாமல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இதனால் சந்தைக்கு காய்கறிகளை கொள்வனவு செய்வதற்கு ஹோட்டல்காரர்கள் வருவதில்லை.மரக்கறி உற்பத்தி செலவு தற்பொழுது அதிகரித்துள்ளது .அதற்கேற்ப மரக்கறியை நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் உற்பத்தியாளர்கள் நஷ்டமடைகின்றனர். தங்களது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்கும் சிரமப்படுகின்றனர்.

மக்கள் சுமைகளை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

எம்.ஏ.அமீனுல்லா

நாட்டில் ஏற்பட்டுள்ள சுமைகளை நீக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டி, கண்டியில் உள்ள சிவில் உள்ள அமைப்புகள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன.

கண்டி, ஹோட்டலில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று (22) கண்டி டேவேன் ஹோட்டலில் நடாத்திய ஊடக சந்திப்பில் 'சமாதானம்' அமைப்பின் பணிப்பாளர் நாயகம் நிரோசன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதியை கையில் எடுக்கும் நிலைமைக்கு ஆளாகியுள்ளனர். இது ஜனநாயக நாட்டுக்கு உகந்தது அல்ல, இதற்கான நல்லதொரு தீர்மானத்தை அரசாங்கம் எடுக்கும் என தாங்கள் நம்புகிறோம். விவசாயம்மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளில் புத்தி ஜீவிகளைக் கொண்டே இப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோத சுற்றுலா ஹோட்டல்கள் பயணிகள் அசௌகரியம்

ஹற்றன் டிக்கோயா நகர சபைக் குட்பட்ட பகுதிகளில் எவ்வித பதிவுகளும் அனுமதிகளும் இன்றி, சுற்றுலா ஹோட்டல்கள் நடத்திச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சுற்றுலாப் பயணிகள் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்திலுள்ள சில வீடுகளில் சுற்றுலாப்பயணிகள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கான உணவு விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் பொறுப்பை ஏற்பதற்கு எவரும் முன்வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே எவ்வித அனுமதியும் இன்றி நடத்திச் செல்லப்படும் சுற்றுலா விடுதிகள் தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கையொன்றை முன்வைக்குமாறு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

நானுஓயா நாவலர் ஆரம்ப கல்லூரியில் தரம் ஐந்தாம் புலமைப்பரிசில் பரீட்சையில் ஐந்து மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். அந்தவகையில் பி.ஹர்சிதா165, ஆர்.கௌசிக்நாத் 158, ஜே.மித்தீஸ் 156 ,எம்.மதுஷான் 149, ஆர்.கனிஷா 146 பெற்று சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களான ஆர்.அஜித்சிங், எஸ்.பழனிவேல், டி.நளினி ஆகியோருக்கும் 100ற்கு மேல் புள்ளிகளை பெற்ற மாணவர்களுக்கும் அதிபர் கே.சதாசிவம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். படம்: தலவாக்கலை குறூப் நிருபர்

நகர்வலம்

வரிசையில் நிற்கும் மக்களிடம் மன்னிப்புக் கோரிய அமைச்சர்

எரிபொருள் மற்றும் கேஸ் தட்டுப்பாடு காரணமாக வரிசையில் நின்று கஷ்டப்பட நேரிட்டது தொடர்பில் பொதுமக்களிடம் மன்னிப்புக் கோருவதாக ராஜாங்க அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு தனது பொறுப்பில் இருந்து மீள முடியாது எனவும் வரிசையில் காத்திருந்து மக்கள் கஷ்டப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பசளை விவகாரத்தினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பிழையான தகவல்களை வழங்குவதால் உண்மை நிலை உரிய இடங்களுக்கு சென்றடைவதில்லை என்று குறிப்பிட்ட அவர், விவசாயிகளிடமும் மன்னிப்பு கோருவதாக தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தித்திற்கு சென்றாவது நெருக்கடிக்கு தீர்வு காண முயல வேண்டும். உள்நாட்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பது பிரதானமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். பொலன்னறுவையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலே அமைச்சர் இதனை தெரிவித்தார்.(பா)

வாழைச்சேனை தேசமான்ய எம் .ஐ.எம் நவாஸ் (ஸலாமி) எழுதிய பல்லின சமூகத்தில் இன நல்லிணக்கம் என்ற நூலை நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் அண்மையில் அவரது அமைச்சில் வைத்து கையளித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவர் என்.எம்.அமீனும் படத்தில் காணப்படுகிறார்.

முஸ்லிம் பெண்கள் முன்வந்து தாதியர்களை உருவாக்க எடுத்த முயற்சி குறித்து மகிழ்ச்சி

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(தெஹிவளை கல்கிசை விசேட நிருபர்)

முஸ்லிம் இளம் பெண்கள் தாமாகவே முன்வந்து சுகாதாரக் கல்வி நிலையமொன்றை உருவாக்கி தாதியர்களாக பயிற்சி பெற்று வெளிவருவதையிட்டு மிகவும் சந்தோசம் அடைகின்றேன். இந்த தொழில் ஒரு புனிதமான தொழில். இதனூடாக நீங்கள் இந்த நாட்டில் மட்டுமல்ல உலக அளவில் தொடர்புபடுத்தப்படுவீர்கள். ஆகவே தான் முஸ்லிம் இளைஞர் யுவதிகள் தாதியர்களாக தமது டிப்ளோமா பாட நெறியைப் பயின்று வெளிவந்து இந்த துறையில் பயிற்சிகளை பெற்று முன்னேற வேண்டும். இக் காலகட்டத்தில் இந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் தாதியர் தொழிலுக்கு வெற்றிடம் உள்ளதெனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தெஹிவளையில் உள்ள சர்வதேச தாதியர் கள மற்றும் சுகாதாரக் கல்வி நிலையத்தில் தாதியர் டிப்ளோமா, உளவியல்துறை, மருந்தாக்கல் ஆகிய பயிற்சி நெறிகளைப் பயின்ற மாணவிகளுக்கு பட்டம் வழங்கும் வைபவம் ஞயிற்றுக்கிழமை (20) பி.எம்.ஐ.சி. எச்ல் நடைபெற்றது. இந் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் றிமாசா முனாப் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கலந்து கெண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், ஒவ்வொரு வருடமும் மே மாதம் முதலாம் திகதி மே தினம் நடைபெறுவது தொழிலாளர்களுக்கு இழைக்கும் அநீதிகளால் பெண்களும் பாதிக்கப்படுகின்றனர். தற்போது ஆண்களை விட பெண் தொழிலாளர்கள் அதிகரித்து வருகின்றனர். நமது பெண்கள் முன்னேறி தமது வாழ்க்கையை மாற்றுவதற்கு நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் மாறினால் தான் இந்த நாடு மாறும். என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் பேராசிரியர் சந்திமா விஜயகுணவர்த்தன, பேராசிரியர் ரமேஸ் ஜயசிங்க, தொழில்கல்வி ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் ஹசானி லக்மாலி, டொக்டர் எம். ஐ.எம். பௌமி, பொறியியலாளர் சுபியான் வஹாப் உட்பட வைத்திய விரிவுரையாளர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

காலி மாவட்டத்திற்குட்பட்ட

துந்துவை முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு மர்ஜான் பளீல் எம்.பி 22 இலட்சம் ஒதுக்கீடு

பாடசாலை வரலாற்றில் ஒதுக்கப்பட்டுள்ள ஆகக் கூடுதல் நிதி இதுவென அதிபர் தெரிவிப்பு

தென் மாகாணம் காலி மாவட்டத்திற்குட்பட்ட பெந்தர – எல்பிட்டிய தேர்தல் தொகுதியிலுள்ள ஒரேயொரு முஸ்லிம் கிராமமான துந்துவை பிரதேசத்திலுள்ள தெ./ கா./ துந்துவை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி பணிகளுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட விசேட நிதியொதுக்கீட்டிலிருந்து சுமார் 22 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளதாக பாடசாலையின் பழைய மாணவரும் பாராளுமன்ற உறுப்பினரின் தென் மாகாண ஒருங்கிணைப்பாளருமான எம்.எம். எம். முஷர்ரப் மழ்ஹார் தெரிவித்தார்.

மேற்படி பாடசாலை தொடர்பில் அதிபர் எம்.ஜே.எம். சில்மி மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களின் வேண்டுகோளின் பேரில் பாடசாலை குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் கவனத்திற்கு ஒருங்கிணைப்பாளர் முஷரப் கொண்டு வந்ததற்கிணங்கவே இந்நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல்,

அரசாங்கத்தினால் தனக்கு வழங்கப்பட்டுள்ள விசேட நிதியொதுக்கீட்டின் மூலம் பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவி செய்வதாக தெரிவித்ததோடு முதல் கட்டமாக சுமார் 22 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்வதாகவும் தெரிவித்தார்.

சுமார் 100 வருடங்கள் பழைமையான இப்பாடசாலையின் வரலாற்றில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஒதுக்கிய ஆகக்கூடுதல் நிதித்தொகை இதுவாகும் என தெரிவித்த பாடசாலை அதிபர் சில்மி, இந்நிதியுதவியின் மூலம் பாடசாலையின் பல்வேறு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவுள்ளதோடு, இந்நிதி ஒதுக்கீட்டை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலுக்கு பாடசாலை சமூகம் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள வெலிப்பன்னை ரஹ்மானிய்யா தேசிய பாடசாலைக்கு கணனி உபகரணம் வழங்கும் நிகழ்வு அதிபர் கவ்ஸீல் அமீர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கணனி உபகரணத்தொகுதியை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். படம் பேருவளை விசேட நிருபர்

மாத்தறை மாவட்ட;

இளம் விவசாயிகளை விவசாய துறையில் ஊக்குவிக்க திட்டம்

(மாத்தறை தினகரன் நிருபர்)

மாத்தறை மாவட்டத்தில் இளம் விவசாயிகளை விவசாயத் துறையில் மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாத்தறை மாவட்ட அலுவலகமும் இலங்கை மத்திய வங்கியின் மாத்தறை கிளையும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கு ஏற்றுமதி விவசாயத் திணைக்களமும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளதாக இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் சந்திரசிறி வனிகசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி மாவட்டத்திலுள்ள 16 பிரதேச சபை பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளே இந்தத் திட்டத்தில் உள் வாங்கப்படுவார்கள்.

விவசாயத் துறையில் ஆர்வமும், வீட்டுத் தோட்டங்களையுடைய இளைஞர் யுவதிகளே இத்துறைக்கு தெரிவு செய்யப்படுவர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளின் கூட்டமொன்று எதிர்வரும் 25ந் திகதி மாத்தறையிலுள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அலுவலகத்தில் நடைபெறும் என்றும் உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

குளத்தில் நீராடியவர் நீரில் மூழ்கி பலி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

தம்மன்னாவ பகுதியிலுள்ள குளம் ஒன்றில் நீராடிக்கொண்டிருந்த நபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தமுத்தேகம பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று மாலை தமுத்தேகம தம்மன்னாவ குளத்தில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் இறந்தவர் 45 வயதுடைய சுவாரபொள, பிலியந்தலை பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது.

ஹம்பாந்தோட்டை இக்ராவிலிருந்து 13 மாணவர்கள் சிறந்த பெறுபேறு

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்திலிருந்து 13 மாணவர்கள் சிறந்த முறையில் சித்தியடைந்துள்ளதாக அதிபர் எம். இஸட். எம். இர்பான் தெரிவித்தார்.

இப் பெறுபேறுகளின் படி தென் மாகாண தமிழ் மொழிப்பாடசாலையொன்றிலிருந்து ஆகக்கூடுதலான மாணவர்கள் ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்திலிருந்தே சித்தியடைந்துள்ளனர். அத்தோடு இப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களான எம். எஸ். ஹூமைத் 184 புள்ளிகளைப் பெற்று தென் மாகாணத்தில் தமிழ் மொழிப் பாடசாலைகளில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற மாணவனாக திகழ்கிறார்.

மேலும் செல்வி டீ. எப். ஜீ. பஸ்லா (171), செல்வி எம். என். எப். ரிப்னா (168), செல்வன் எம். எப். அப்துள்ளா (164), செல்வி எம். எஸ். எப். ஸஸ்பா (164), செல்வி எம். என். எப். ரிபாஸா (158), செல்வன் டீ. எப். டீ. ரசீன்தீன் (152), செல்வி எஸ். ஆர். எப். ரஹ்னா (152), செல்வி எம். ஆர். எப். ஆமினா (151), செல்வி ஜே. எப். நூரா (151), செல்வன் எம்.ஜே. ஏ. எம். அப்ரி (149), செல்வி எம், ஆர். சுமையா (148), செல்வி எம்.ஏ. எப். அமானி பின்தி 148 புள்ளிகளையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

வெலிகம மத்ரஸதுல் பாரியில் புகாரி தமாம் மஜ்லிஸும் துஆ பிரார்த்தனையும்

(வெலிகம தினகரன் நிருபர்)

இலங்கையின் முதல் அறபுக்கல்லூரியான வெலிகம, மத்ரஸத்துல் பாரி அறபுக் கல்லூரியின் புகாரி தமாம் மற்றும் துஆ மஜ்லிஸ் நிகழ்வுகள் (17) வியாழக்கிழமை காலை பாரி அறபுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் அல் ஹாபிழ் ஏ.ஆர். அப்துர் ரஹ்மான் (மழாஹிரி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,கொழும்பு (மர்கஸ்) ரஷாதிய்யா அறபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் 'பத்வா' குழுச் செயலாளருமான அஷ்ஷெய்க் இல்யாஸ் (பின்னூரி , தப்லீகி) பிரதம அதிதியாக கலந்துகொண்டு புகாரி தமாம் நிகழ்ச்சியை நடாத்தி வைத்தார்.

138 வருடங்கள் பழமைவாய்ந்த இவ் அறபுக் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்று வெளியானோர் நாட்டின் எல்லா பாகங்களிலும் காணப்படுகின்றனர். மேற்படி நிகழ்வில் 24 மாணவர்கள் விஷேட ஹதீஸ் கற்கை நெறியை (தௌரதுல் ஹதீஸ்) பூர்த்தி செய்துள்ளதோடு, 6 மாணவர்கள் இப்தா கற்கை நெறியை பூர்த்தி செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள் உட்பட மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சாரணர் சங்க 105வது வருட பூர்த்தி: கொழும்பில் பல நிகழ்வுகள்

ருஸைக் பாரூக்

இலங்கையின் பெண் இளைஞர் இயக்கமான பெண் சாரணர் சங்கத்தின் 105ஆவது வருடத்தை முன்னிட்டு பல முக்கிய நிகழ்வுகள் (20) கொழும்பில் நடைபெற்றன. இந்நிகழ்வில் சாரணர்களின் நடை பவனி மற்றும் சைக்கிள் பேரணி என்பனவும் நடைபெற்றன. பிரதம ஆணையாளர் திருமதி சுலாரி ஜயவர்தன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாட்டின் 9 மாகாணங்களைச்சேர்ந்த சாரணர்கள் கலந்து கொண்டனர். உதவிப் பிரதம ஆணையாளர் திருமதி நிர்மலி வில்லியம், தொடர்பாடல் ஆணையாளர திருமதி ருக்ஷானி அஸீஸ், சர்வதேச ஆணையாளர் திருமதி நதீகா குணசேகர, லிட்டில் பிரண்ட்ஸ் ஆணையாளர் நதுணி விக்ரமதுங்க, ஆணையாளர் Butterflies திருமதி தில்ஹானி ஹப்புஆரச்சி, மற்றும் ஆணையாளர் Rangers திருமதி நிரோஷா விஜேதுங்க ஆகியோரும் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மேலும் மாற்றங்கள் செய்யப்படும்

பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தில் அவசரமாக முன்னெடுக்க வேண்டிய திருத்தங்களே முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் மேலும் மாற்றம் செய்யப்படும் என்றும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அவசரமாக முன்னெடுக்க வேண்டிய திருத்தங்களே முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் முக்கிய பகுதிகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. இந்த சட்டத்தில் பிணை வழங்க அனுமதி இருக்கவில்லை. அதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தடுப்பு காவல் தொடர்பில் கேள்வி எழுப்ப முடியாது என்று இருப்பதும் திருத்தப்பட்டுள்ளது. முக்கிய பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. அவசரமான திருத்தங்களை காலதாமதப்படுத்த முடியாது. முழுமையாக தேசிய பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கிரியெல்ல பல திருத்தங்களை முன்வைத்தார். அவற்றை ஆராய்வோம். அவற்றை தற்போதைய நிலையில் ஏற்க முடியாது. முழுமையான திருத்தத்தின் போது கவனம் செலுத்தப்படும் என்றார்.

லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி

நாட்டில் யுத்தம் முடிவடைந்து 10 வருடங்களாகி விட்ட நிலையிலும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பது வெட்கப்படவேண்டிய விடயம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் ஒருவரை பிடியாணையின்றி கைது செய்ய முடியும். அவரின் வீட்டை சோதனையிடமுடியும், அதுமட்டுமன்றி இவ்வாறான நடவடிக்கைகளை பொலிஸார் சிவிலுடைகளில் சென்று செய்வதற்கும் இதில் இடமுண்டு. நாகரிகமடைந்த நாடொன்றில் இவ்வாறு செய்ய முடியுமா?இவை தொடர்பான திருத்தங்களை நாம் முன்வைத்துள்ளோம்.

ஒருவரை 72 மணி நேரம் தடுத்துவைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் போது அங்கு வழங்கப்படுகின்ற சித்திரவதையினால் எல்லாமே இடம்பெறுகின்றது. தலையில் துப்பாக்கியை வைத்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றப்பட்டது. கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதனை தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை. அதனால் 24மணி நேரத்தில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவேண்டும் .

இவ்வாறான திருத்தங்களையே மனித உரிமை ஆணைக்குழுவும் கோரியுள்ளது. அதனால்தான் அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் திருத்தம் போதுமானதல்ல. அதே போன்று தடுப்பு உத்தரவின் கீழ் 18 மாதங்கள் தடுத்து வைக்க முடியுமாக இருந்ததை ஒருவருடம் வரை குறைத்திருக்கின்றது. இதனை 2 மாதங்களுக்கு குறைக்க வேண்டும். எமது காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாருக்கும் தடுப்பு உத்தரவு பிரயோகிக்கப்படவில்லை. ஆனால் கடந்த காலத்தில் ரிஷாத் எம்.பிக்கு இது இடம்பெற்றது. அதே போன்று முன்னணி சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பல மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த அரசாங்க காலத்தில் இந்த சட்டத்தின் மூலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 7 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். இதற்கு முன்னர் இப்படியான படுகொலைகள் இடம்பெற்றதில்லை.

நாட்டில் யுத்தம் முடிவடைந்து 10 வருடங்களாகி விட்ட நிலையிலும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பது வெட்கக்கேடானது. நாம் சர்வதேச நாடுகளில் நடக்கும் கூட்டங்களுக்கு சென்றால் இந்த சட்டங்களை காட்டும்போது மிகவும் கவலை ஏற்படுகின்றது.

முஜிபுர் ரஹ்மான் (ஐ.ம.சக்தி எம்.பி)

பயங்கரவாத தடைச்சட்ட திருத்தம் உள்நாட்டு பொதுமக்களுக்காக கொண்டு வரப்படவில்லை. மாறாக சர்வதேசத்தை திருப்திப்படுத்த கொண்டு வரப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்ட விடயம், நீதியமைச்சர் அலி சப்ரியின் பொறுப்பில் இருக்கின்றபோதும் இந்த திருத்தத்தை வெளியுறவு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கொண்டு வந்திருப்பதன் ஊடாக இந்த நோக்கத்தை எடுத்துக் காட்டுகிறது.

இலங்கை அரசாங்கத்துக்கு இன்று சர்வதேசத்தில் பாரிய அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்ற நிலையில் அதனை குறைக்க எடுக்கப்படும் முயற்சியே இது. புதிய திருத்தத்தின்படி, சட்டத்தின் அடிப்படைகள் மாறவில்லை. அமைச்சருக்கு சந்தேகம் ஏற்பட்டால் அவரை இந்த சட்டத்தின்கீழ் கைது செய்து தடுத்து வைக்கமுடியும். 12 மாதங்களுக்கு வீட்டுக்காவலில் ஒருவரை தடுத்து வைக்கமுடியும்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவரை நீதவான் ஒருவர் சென்று பார்க்கமுடியும். அவர் தொடர்பில் உத்தரவுகளை வழங்க முடியும். எனினும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவரின் இடத்தை மாற்றுவதற்கு நீதிவானுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றார்.

சபை நிருபர்கள்:
லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம்

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், தடுத்து வைக்கப்பட்டுள்ளவரின் இடத்தை மாற்றுவதற்கு நீதவானுக்கு அதிகாரம் வழங்குவதற்கான திருத்தம் கொண்டு வரப்படும் என்று குறிப்பிட்டார்.

ராஜித சேனாரத்ன (ஐ.ம.சக்தி எம்.பி)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாக வேறுபட்ட விடயமே இடம்பெறுகிறது. இதனை மாற்ற வேண்டும் என ஜீ.எல்.பீரிஸ் 2019 இல் தெரிவித்தார். பல சிவில் செயற்பாட்டாளர்கள். ஊடகவியலாளர்கள் விசாரிக்கப்படுகின்றனர். ஜே ஆர் ஜெயவர்த்தன கெட்ட மனிதர் என்று கூறுகிறார்கள். ஆனால் அவரின் சட்ட நடைமுறைகளை மாத்திரம் சிறந்தது என்று கூறுகின்றனர். அவரின் திறந்த பொருளாதாரம், நிறைவேற்று ஜனாதிபதி முறை பயங்கரவாத தடைச்சட்டம், தேர்தல் முறை என்பன சிறந்தது என்று கூறி அவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்விடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டபோது பிள்ளையின் வாயில் கைத்துப்பாக்கியை வைத்துக் கொண்டே பெறப்பட்டது. இந்த நிலையில் சர்வதேசத்துக்கு காட்டுவதற்காக மாத்திரமல்லாமல், இலங்கையின் மக்களின் நலனுக்காக இந்த சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சிவனேசத்துரை சந்திரகாந்தன் எம்.பி

ஒற்றுமை மற்றும் இறையான்மை குறித்து இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டாலும் மனித உரிமைமீறல்களுக்கே பயன்படுத்தப்பட்டது. யுத்த காலத்தில் அப்பாவி தமிழ் மக்கள் பல் ஆண்டில் சிறையில் இருக்கின்றனர். அரசியல் பழிவாங்கல் நடந்தன. மக்கள் பிரதிநிதியாக நல்லாட்சி அரசும் கூட்டாளிகளும் என்னை சிறையில் அடைத்தார்கள். ஜனநாயக விழுமியங்களுக்கு மாற்றமாக இந்த சட்டம் அமைந்தது. இந்த சட்டத்தில் மனித உரிமைக்கு ஆபத்தான பகுதிகள் திருத்தப்பட வேண்டும். நீண்ட காலதடுப்புக்காவலில் வைக்கப்படுவதை தவிர்க்கவும் சுதந்திரத்திற்கு குந்தகமான பகுதிகளை மாற்றவும் வேண்டும். இந்த சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் விரைவுபடுத்த வேண்டும். இந்த சட்டம் கொண்டுவரப்பட்ட காலப்பகுதிக்கும் தற்காலத்திற்கும் வேறுபாடு உள்ளது. நான் நேரடியாக பாதிக்கப்பட்டவன்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
(தமிழ் தேசிய மக்கள் முன்னணி)

பயங்கரவாத தடை சட்டத்தில் திருத்தங்களை முன்வைத்துள்ள நிலையில் முக்கிய இரண்டு விடயங்களை அடையாளப்படுத்த வேண்டும். குறிப்பாக தடுப்புக்காவல் காலத்தை குறைந்துள்ளமை மற்றும் நீதிபதி சிறைக்கும், தடுப்பு முகாம்களுக்கும் சென்று தடுப்புக்காவலில் உள்ளவர்களை பார்வையிடுவது போன்றவை சித்திரவதையை தடுக்கும் செயற்பாடாக இருக்கும். ஆகவே இவை இரண்டுமே குறிப்பிடத்தக்க மேம்பாடாகும்.

இந்த திருத்தங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப் பித்த போதிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இது குறித்து அதிருப்தியையே வெளிப்படுத்தியிருந்தார். பொறுப்புக்கூறல் விடயத்தில் கலப்பு நீதிமன்ற முறையை இலங்கை நிராகரித்து உள்ளக பொறிமுறையை வலியுறுத்தியமை, நாட்டின் இன முரண்பாடுகள் விடயத்தில் சட்டம் மற்றும் நீதிப்பொறிமுறையானது ஊழல் மிகுந்ததாக உள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

பெரும்பான்மையின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீர்மானம் எடுப்பது தேசியம் ஆகாது. பெரும்பான்மையின் தேவைகளை பூர்த்தி செய்வது தேசியம் என அர்த்தப்படுத்த வேண்டாம். பல்வேறு அடையாளங்கள் இந்த நாட்டில் இருக்கின்ற நிலையில் பல்லினத்தன்மை கொண்ட நாடாக இலங்கை உள்ளதென நாம் கூறுகின்ற நிலையில் இரண்டு மூன்று இனங்கள் இந்த நாட்டில் வாழ்கின்ற சூழலில் சகலரதும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே அது தேசியமாக கருதப்படும்.

எம்மை தொடர்ச்சியாக புறக்கணித்து எம்மை புறந்தள்ளிக்கொண்டுள்ளீர்கள். அவ்வாறான நிலையில் எவ்வாறு எமது மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். எமது மக்கள் மறுக்கப்படுகின்ற நிலையில், எமது காணிகள் பறிக்கப்படுகின்ற நிலையில், எமது மத அடையாளங்கள் அழிக்கப்படுகின்ற நிலையில் நாம் என்ன செய்ய முடியும்? பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வடக்கிற்கு விஜயம் செய்த வேளையில் மக்கள் ஜனநாயக ரீதியில் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

புலம்பெயர் தமிழர்கள் உலகில் பல செல்வந்த நாடுகளில் உள்ளனர், அவர்களிடத்தில் இந்த நாட்டை மீட்கும் செல்வம் உள்ளது. அவர்களை இணைத்துக்கொண்டால் இன்றைய நெருக்கடி நிலைக்கு தீர்வு கிடைக்கும். ஆனால் அதற்கு நீங்கள் இடம் கொடுக்கவில்லை என்றார்.

விஜித ஹேரத் (தேசிய மக்கள் சக்தி)

பயங்கரவாதம் என்பதற்கு இதுவரை வரைவிலக்கணம் வழங்கப்படவில்லை. வரைவிலக்கணம் எதுவும் இல்லாத நிலையிலேயே இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் இன்று நாட்டில் அமுல்செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள திருத்தத்தை கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்தை ஏமாற்ற முடியாது. ஏற்கனவே இந்த திருத்தம் போதுமானதல்ல என்று ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.எனவே தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக ரத்துச்செய்ய வேண்டும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் திருத்தம்:

நீண்ட காலம் துஷ்பிரயோகப்படுத்தப்பட்ட சட்டத்தையே நாம் பாதுகாக்கின்றோம்

நீதியமைச்சர் அலி சப்ரி சபையில் தெரிவிப்பு

அரசாங்கம் என்ற வகையில் நாம் அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் நாம் அதில் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளோம். அதனை கருத்திற் கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு இந்த நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொள்வது முக்கியம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பயங்கரவாத தடைச்சட்டம் திருத்தச் சட்ட மூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே நீதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்: தேசிய பாதுகாப்புக்கு இந்த சட்டம் மிகவும் அவசியமானது. நீண்ட காலம் இந்த சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்தது. அதனைப் பாதுகாப்பதற்காகவே தற்போது திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

எல்லைப் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கும் அனைத்து மக்களையும் பாதுகாப்பதற்கும் இந்த சட்டம் முக்கியமானதாகும்.

யுத்தகாலத்தில் எல்.ரி.ரி.யினர் தமிழ் இளைஞர்களை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றுள்ளதையும் அதனால் மக்கள் சந்தித்த துயரங்களையும் அண்மையில் நான் வடக்கிற்கு சென்ற போது மக்கள் என்னிடம் தெரிவித்தனர்.

இது ஒரு முக்கியமான படிநிலை நியாயமான திருத்தங்கள் இந்த சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

சந்தேக நபர்களை தடுத்து வைக்கும் காலங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தடுத்து வைத்தலை சவாலுக்கு உட்படுத்த முடியும். அதே வேளை ஒரு வருடத்தில் பிணை கூட கோர முடியும் அது போன்ற வாய்ப்புகள் இதன் மூலம் வழங்கப்படுகின்றன.

தேவைப்படும் சமயத்தில் மட்டுமே இந்த சட்டத்தை உபயோகிக்க வேண்டும் என ஜனாதிபதியும் வலியுறுத்தியுள்ளார். பயங்கரவாதத்தில் நேரடியாக சம்பந்தப்பட்டாலன்றி நாம் இந்த சட்டத்தை தேவையற்ற விதத்தில் உபயோகிக்க முடியாது.

பிரதம நீதியரசரின் பணிப்பின் பேரில் தினமும் தற்போது வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

வழக்குத் தொடரப்படாமல் இருந்தால் பிணைக்கு விண்ணப்பிக்கவும் முடியும். உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் விடுதலைக்காகவும் இந்தத் திருத்தம் முக்கியம் பெறுகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சபையில் அமர்ந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை பார்த்து கருத்து தெரிவித்த அமைச்சர், நல்லாட்சி அரசாங்கத்தில் நீங்கள் பிரதி பிரதமராக செயற்பட்டு என்ன மாற்றங்களை கொண்டு வந்தீர்கள். நீங்கள் எதுவும் செய்யவில்லை. நாங்கள் இப்போது அதனை மேற்கொள்கிறோம் இதனை எதிராக நினைக்காமல் உங்கள் ஆதரவை எங்களுக்கு தாருங்கள். சர்வதேச நாடுகளில் இது தொடர்பில் பிரசாரங்களை மேற்கொள்வதை விடுத்து ஒத்துழைப்பு வழங்குங்கள். உங்கள் ஆதரவு எங்களுக்கு தேவை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நகலை கிழித்தெறிந்தார் ரவூப் ஹக்கீம்

பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் திருத்த நகலை நாடாளுமன்றில் கிழித்தெறிந்தார். பயங்கரவாத தடைச்சட்டம் எமது நாட்டு சட்டக்கட்டமைப்பில் இருந்து முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று கோரிய அவர் நகல் சட்டத்தை கிழித்து வீசி தனது எதிர்ப்பை முன்வைத்தார்.

பயங்கரவாத சட்ட தற்காலிக திருத்தம் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தத்தை கொண்டு சர்வதேசத்தை ஏமாற்றும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த சட்டம் தொடர்பாக நீதிபதிகள் பலரும் தமது மாற்றுக் கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக தெரிவித்த அவர்,

பயங்கரவாத தடைச் சட்டம் நாட்டு மக்கள் பலருக்கு பல இன்னல்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இந்த சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது வெட்கக்கேடானது என்றும் குறிப்பிட்டார். எனவே இந்த திருத்தத்தை தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றார்.

முன்னாள் பிரதமர் ரணில் தனது அனுபவங்களை முன்வைத்து கருத்து தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவரும் கட்சி நிலைப்பாட்டை தெரிவித்தார். அரசியல் நோக்கில் இந்த சட்டம் பயன்படுத்தப்படுவது வெட்கக் கேடானது. உயிர்த்த ஞாயிறு விசாரணை வேறுபக்கத்திற்கு செல்கிறது. கார் தினல் ஜெனீவாவுக்கு சென்றார். படையினர் இதில் தொடர்புபட்டுள்ளனரா என ஆராயுமாறு ஆணையாளர் கோரியுள்ளார். எந்த குற்றச்சாட்டுமின்றி பலர் பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் எமது நாட்டு சட்டக்கட்டமைப்பில் இருந்து முற்றாக நீக்கப்பட வேண்டும் என்றார்.

கைத்தொழில் பிணக்குகளை துரிதமாக தீர்க்க சட்டத் திருத்தம்

கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொழில் வழங்குநரால் தொழிலாளர் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை மீறல் மற்றும் ஊழியர்களுக்கு உரித்தான நியதிச் சட்ட உரித்துக்களை அறவிட்டு வழங்கல் போன்ற குறுகிய காலத்தில் தீர்வு காணக்கூடிய வழக்குகள் அதிகமாக நீதவான் நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ளது. அதுதொடர்பான தீர்ப்புக்களை வழங்குவதற்கு நீண்ட காலம் எடுக்கின்றமை தெரியவந்துள்ளது. இவ்விடயங்களைக் கருத்தில் கொண்டு தொழிலாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொடரப்படும் வழக்குகளைத் துரிதமாகத் தீர்ப்பதற்காக நீதவான் நீதிமன்றத்துக்கும், தொழில் நியாய சபைக்கும் சமமான நீதிமன்ற அதிகாரம் கிடைக்கும் வகையில் கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள இச் சட்டமூலத்திற்கு சட்ட மாஅதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இச்சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தை திருத்த முடிவு

வெளிநாட்டு விவாகரத்து பதிவு செய்தல், திருமண முடிவுறுத்தல் அல்லது சட்ட ரீதியான பிரிதலை ஏற்றுக் கொள்ளல் தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், அதற்கமைய சட்ட வரைஞரால் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதுடன், திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தில் திருமணத்தைப் பதிவு செய்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் உள்வாங்கப்பட வேண்டியதுடன், வெளிநாட்டு விவாகரத்து பதிவு செய்தல், திருமண முடிவுறுத்தல் அல்லது சட்ட ரீதியான பிரிதலுக்கான ஏற்பாடுகள் இக் கட்டளைச் சட்டத்தில் உள்வாங்கப்படாமையால், திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கும், அதற்கான சட்ட மூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இறுதி விருப்பு ஆவண சட்டத்தில் திருத்தம்

இறுதி விருப்பு ஆவணக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக இதற்கு முன்னர் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்துக்கு சட்ட மாஅதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, இச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்புக்கு அமைச்சரவைக் குழு நியமிக்க அரசாங்கம் தீர்மானம்

அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக தேசிய ரீதியாக முன்னுரிமையளிக்கப்படும் துறைகளை அடையாளம் கண்டு, அதற்கு ஏற்புடைய துறைகளில் முதலீட்டு வாய்ப்புக்களை இனம் கண்டு ஊக்குவிப்பதற்குத் தேவையான கொள்கை ரீதியானதும், நடைமுறை சாத்தியமானதுமான தீர்வுகளை வழங்குமுகமாக ஜனாதிபதியின் தலைமையில், பிரதமர் உள்ளிட்ட ஏற்புடைய அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுடன் கூடிய முதலீட்டு ஊக்குவிப்புக்கள் தொடர்பான அமைச்சரவைக் குழுவை நியமிப்பதற்காகவும், அமைச்சரவைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் இந்த அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய அலுவலர்களுடன் கூடிய உத்தியோகத்தர் குழுவொன்றை நியமிப்பதற்காகவும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கிழக்கின் குரல்

20வது சீர்திருத்தத்திற்கு கை உயர்த்தியது குற்றமா?

பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர்

கல்குடா தினகரன் நிருபர்

20வது சீர்திருத்தத்திற்கு கை உயர்த்தியவர்கள் என றிஷாட் பதியுதீன் எம்.பி வீண்பழி சொல்லித் திரிகிறார். 20வது சீர்திருத்தத்திற்கு கை உயர்த்தியது தவறு என்றால் 17ம், 18ம், 19ம் சீர்திருத்தத்திற்கு நீங்கள் அமைச்சராக இருக்கும் போது கை உயர்த்தியது சரியா என பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள முஹைதீன் அப்துல் காதர் வித்தியாலய அங்குரார்ப்பண நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (20) மாலை அறபா நகர் ஜும்ஆ பள்ளிவாசல் முன்றலில் இடம்பெற்ற போது கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்சொன்னவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் அமைச்சர் றிஷாட் பதியுதீன் 20வது சீர்திருத்தத்திற்கு கை உயர்த்தியவர்கள் என ஏசி திரிகின்றார். 20வது சீர்திருத்தத்திற்கு கை உயர்த்தியது பிரச்சினை என்றால் 17ம், 18ம், 19ம் சீர்திருத்தத்திற்கு நீங்கள் அமைச்சராக இருக்கும் போது கை உயர்த்தினீர்கள் அது சரியா.

20வது சீர்திருத்தத்திற்கு கை உயர்த்தவில்லையாயின் கோறளைப்பற்று மத்திக்கும், ஓட்டமாவடி பிரதேசத்திற்கும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக பிள்ளையான் அல்லது வியாழேந்திரன் வந்திருப்பார்கள்.

20வது சீர்திருத்தத்திற்கு கை உயர்த்தியதால் எல்லாவற்றுக்கும் சரணைந்து நிற்போம் என்று நினைக்க கூடாது. எங்களுடைய அரசியல் காய் நகர்த்தல் காரணமாக உடல்கள் அடக்கம் செய்யப்பட்டது என்றார்.

பெண் ஆளுமைகள் கௌரவிப்பு

(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் பெண் ஆளுமைகள் கௌரவிப்பு நிகழ்வு செவ்வாய்க்கிழமை (22) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. ஷாபிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்திருந்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துடன் இணைந்து இந் நிகழ்வினை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஸீஹா முஷாபிர், நிருவாக உத்தியோகத்தர் ஆர்.எம். நழீல் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபையில் உறுப்பினர்களாக பிரகாசிக்கும் நான்கு பெண் உறுப்பினர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

சம்மாந்துறையில் இடம்பெற்ற எண்ணெய்க்காப்பு

(காரைதீவு குறூப் நிருபர்)

வரலாற்று பிரசித்திபெற்ற சம்மாந்துறை தமிழ்க் குறிச்சி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தின் புனராவர்த்தன மஹா கும்பாபிசேக குடமுழுக்கு பெரும்சாந்தி பெருவிழாவின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (22) சிறப்பாக இடம்பெற்றது.

ஏராளமாக பக்தர்கள் வந்து அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் எண்ணெய்க்காப்பு சாத்தினர்.

கும்பாபிசேக பிரதமகுரு சிவாச்சர்யதிலகம் சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் தலைமையில், ஆலயத் தலைவர் சீ.சுப்பிரமணியம் முன்னிலையில் மஹா கும்பாபிசேக கிரியைகள் யாவும் நடைபெற்றது.

இம் மஹா கும்பாபிசேக குடமுழுக்கு பெரும்சாந்தி பெருவிழா 21ஆம் திகதி திங்கட்கிழமை வாஸ்துசாந்தி கணபதிஹோமம் உள்ளிட்ட கிரியைகளுடன் ஆரம்பமாகியது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் செவ்வாய்க்கிழமை (22) நடைபெற்றது. இன்று 23ஆம் திகதி புதன்கிழமை 9.51மணி தொடக்கம் 11.03 மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில் மஹாகும்பாபிசேகம் நடைபெறஉள்ளது.

திருமலையில் தொண்டர் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

காலம் தாழ்த்தாமல் உரிய நிய மனங்களை வழங்குமாறு கோரி தொண்டர் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக இவ் ஆர்ப்பாட்டம் திங்கட்கிழமை (21) முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்களை வழங்குமாறு வலியுறுத்தி இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நல்லாட்சி காலத்தில் அரசியல் ரீதியாக பழி வாங்கப்பட்ட எமக்கு நீதி வேண்டும், நிரந்தர ஆசிரியர் நியமனம் வேண்டும், ஆளுநர் அவர்களே அநீதி இழைக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது எப்போது, 2018ஆம் ஆண்டுக்கு பின்னர் கல்வி கற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதை விட நீண்டகால தொண்டர் ஆசிரியர்களான எமக்கு ஒரு தீர்வை தாருங்கள், கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை எமது நீண்ட கால தொண்டர் ஆசிரியர்களின் சேவையினை கொண்டு தீர்க்க முடியும் என்ற பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தொண்டர் ஆசிரியர்களில் ஒருவர்,

ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வந்த காலகட்டத்தில் பாடசாலைகளின் ஊடாக ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் தொண்டர் ஆசிரியர்கள் ஆகிய நாங்கள், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்து இருந்தோம், ஆனால் நிரந்தர வேலைவாய்ப்பு என்று வரும்போது அரசியல் இலாபத்திற்காக சுயநலமாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடாத பல ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள விடயமானது கவலைக்குரியது என இதன்போது தெரிவித்தார்.

Panasonic இலங்கையில் தனது விநியோகத்தை விரிவுபடுத்த சிங்கர் உடன் கைக்கோர்த்துள்ளது

இலங்கையின் மிகப் பெரிய நுகர்வோர் சில்லறை விற்பனையாளரான சிங்கர் நிறுவனமானது பிரபல ஜப்பானிய வர்த்தக நாமமான Panasonic உடன் கூட்டு சேர்ந்துள்ளது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் Panasonic தயாரிப்புக்களான மின்சார மற்றும் வீட்டுப்பாவனை தயாரிப்புக்கள் உள்ளிட்ட குளிரூட்டிகள், தொலைக்காட்சி பெட்டிகள், குளிர்சாதனப்பெட்டிகள், தனிநபர் பராமரிப்பு, ஆடியோ, மின்விசிறிகள், மைக்ரோ அவன்கள், சுடுநீர் சவர் மற்றும் தூசி அகற்றி (வெக்கும் கிளினர்) போன்றவற்றை நாடளாவிய ரீதியில் உள்ள சிங்கர் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம். Panasonic நிறுவனத்துடனான கூட்டிணைவு குறித்து சிங்கரின் பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் விஜேவர்தன கருத்துத் தெரிவிக்கையில், Panasonic உடன் விரிவான கூட்டாண்மை உடன்படிக்கை செய்துகொண்டதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில் நுகர்வோருக்கு சிறந்த வாழ்க்கை மற்றும் சிறந்த உலகளாவிய பொருட்கொள்வனவு அனுபவத்தை வழங்குவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பு சிங்கரின் நம்பிக்கையுடன் சிறப்பாக உள்ளது. Panasonic உடன் கூட்டிணைவதன் முக்கியத்துவம் என்னவென்றால் நுகர்வோருக்கு முழு அளவிலான Panasonic தயாரிப்புகளை வாங்குவதற்கான வாய்ப்பை வழங்குவதாகும். அது அவர்களின் வர்த்தக நாம பிரசன்னத்தை மேம்படுத்த உதவும் என்றார்.

SINGER Panasonic

உலக மீள்சுழற்சி தினத்தை முன்னிட்டு பிளாஸ்டிக் மீள்சுழற்சி முயற்சிகளை அதிகரிக்கும் Eco Spindles

2022ஆம் ஆண்டு உலக மீள்சுழற்சி தினத்தை நினைவுகூரும் வகையில், பிளாஸ்டிக் போத்தல் மீள்சுழற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இலங்கையின் முன்னணி நிறுவனமான BPPL Holdings PLCஇன் துணை நிறுவனமான Eco Spindles (Pvt.) Ltd, நாடு முழுவதும் அதன் மீள்சுழற்சி வசதிகளை (MRFs) விரிவுபடுத்துவதற்கான தனது திட்டங்களை அறிவித்தது.

Eco Spindles, அதன் திட்ட பங்காளியான CocaCola Beverages Sri Lanka உடன் இணைந்து, அலுமினியம், கண்ணாடி, காகிதம் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் போன்ற பல்வேறு வகையான மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை சேகரிக்க அதன் MRFகளை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், பிராந்திய கழிவு சேகரிப்பு வலையமைப்புகளை உருவாக்கவும் வலுப்படுத்தவும் மற்றும் சேகரிக்கப்பட்ட பாலிஎதிலீன் டெரெப்தாலேட் (PET) போத்தல்களை செயலாக்கவும் உதவும்.

வசதியான பகுதிகளில் சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி விகிதங்களை அதிகரிப்பதே இதன் நோக்கம். நிறுவனம் 2024ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஒரு மாவட்டத்திற்கு ஒரு MRFஐ நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் பாடசாலைகள், உள்ளூர் அதிகாரிகள், கழிவு சேகரிப்பாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் கடலோர சமூகங்களுடன் கூட்டு சேர்ந்து மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் சேகரிக்கப்படுவதையும் இது உறுதி செய்யும்.

கடந்த ஆண்டில், நிறுவனம் 2021 மற்றும் 2022க்கு இடையில் 62 மில்லியன் PET போத்தல்களை மீள்சுழற்சி செய்வதன் மூலம் இலங்கையில் பிளாஸ்டிக் மீள்சுழற்சி துறையை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆரம்பத்திலிருந்தே, Eco Spindles 452 மில்லியன் PET போத்தல்களை மீள்சுழற்சி செய்துள்ளது.

Hameedia தமது கண்டி காட்சியறையை இல. 398, பேராதனை வீதி, கண்டி என்ற முகவரிக்கு மாற்றியுள்ளது. இப்புதிய காட்சியறையின் பிரமாண்டமான திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றதுடன், பிரதம அதிதியாக கண்டி மாநகரத் தலைவர் . கேசர சேனாநாயக்க மற்றும் டாக்டர். எஸ். எம்.எம். நியாஸ் சத்திர சிகிச்சை நிபுணர் கண்டி தேசிய வைத்தியசாலை சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டதுடன், முகாமைத்துவப் பணிப்பாளர் பவுசுல் ஹமீட்நலன் விரும்பிகள் மற்றும் Hameedia ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் வகையில், பெண் தொழில்முனைவோரை வலுவூட்டும் நிகழ்வுகளை இலங்கை வங்கி ஏற்பாடு செய்தது. பிரதான நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பிரதிப் பொது முகாமையாளர் நிலாந்த மெனரிபிட்டியகே, விசேட பேச்சாளர், பேராசிரியர் பிரதிபா மஹாநாமஹேவா மற்றும் உதவிப் பொது முகாமையாளர் நயனா சமந்தி ஆகியோரையும் நல்லூர் கிளையில் நடைபெற்ற நிகழ்வையும் படங்களில் காணலாம்.

ஸ்ரீ லங்கா ரெலிகொம் வருடாந்த நிதி அறிக்கை 2020க்கு மற்றுமொரு பெருமைக்குரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. தெற்காசிய கணக்காளர் சம்மேளனத்தின் சிறந்த வருடாந்த நிதி அறிக்கை விருதுகள் ஒன்றிணைந்த அறிக்கையிடலுக்கான விருதுகள் மற்றும் கூட்டாண்மை ஆளுகை வெளிப்படுத்தல் 2020 போட்டிக்கான விருதுகள் கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டது. நிதிக் கணக்கீடு மற்றும் வரி விதிப்பு பிரதி பொது முகாமையாளர் யு.எச். ரொட்ரிகோ மற்றும் பொது உறவுகள் முகாமையாளர் உமேஷா சந்தரேனு ஆகியோர் ஸ்ரீ லங்கா ரெலிகொம் சார்பாக விருதைப் பெற்றுக் கொள்வதைக் காணலாம்.

வானொலி அரச விருது விழா 2022 மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் திங்கட்கிழமை (21) மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் விழா மலரை கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் தரணி அனோஜா கமகே, டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமருக்கு வழங்குவதையும் விருது பெற்ற ஜெ.யோகராஜன், ஏ.எல்.ஜபிர், ராதிகா வின்சன் ஆகியோருடன் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: சுதத் மலவீர)

அஸார்தீன் நற்பணி மன்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டி

அஸார்தீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் டி.எஸ்.சி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அஸார்தீன் கிரிக்கெட் சுற்றுப் போட்டி குருநாகல் மல்லவப்பிட்டிய சாமோதய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. எட்டு விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்ட இந்த சுற்றுப் போட்டியில் இறுதியாக தெரிவு செய்யப்பட்ட ஓல்ட் ஸ்டார் விளையாட்டு கழகத்திற்கும் வயம்ப வீல்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே இடம்பெற்ற போட்டியில் 13 ஓட்டங்களால் வயம்ப வீல்ஸ் வெற்றி இலக்கை தனதாக்கிக் கொண்டது.

இதன் சிறந்த விளையாட்டு வீரராக ஓல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் பஸ்மில் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்து வீச்சாளராக வயம்ப வீல்ஸ் விளையாட்டுக் கழக வீரர் பர்ஹான் தெரிவு செய்யப் பட்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக ஓல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழக வீரர் சப்ரி தெரிவு செய்யப்பட்டார்.

சுற்றுப் போட்டிக்கு பிரதம அதிதியாக குருநாகல் மாநகர சபை உறுப்பினர் அசார்தீன் மொகைய்னுதீன் கலந்து கொண்டு சிறப்பித்தார். அத்தோடு குருநாகல் ஹிஸ்புல்லாஹ் மத்திய கல்லூரியின் அதிபர் ஏ. எச்.எம். முனாப், பௌத்த சமயத் தலைவர்கள், குருநாகல் பள்ளி வாசல்கள் சம்மேளனத்தின் செயலாளர் மௌலவி ஏ.ஜீ.எம். பௌமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சுகாதார சேவையை விரிவுபடுத்த புதிய கெப் வண்டிகள்

(திறப்பனை தினகரன் நிருபர்)

வட மத்திய மாகாணத்தின் சுகாதார சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் புதிய கெப்ரக வண்டிகளை வழங்குவதற்கு மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதன் கீழ் அநுராதபுரம் மாவட்ட சுகாதார சேவைக்கு 07 கெப்ரக வாகனங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. மேற்படி மாவட்டத்தின் நொச்சியாகம, பளுகஸ்வெவ, நுவரகம்பளாத்த, நாச்சியாதீவு, அநுராதபுரம், கெப்பித்திகொல்லாவ, மதவச்சி ஆகிய சுகாதார அதிகாரி காரியாலயங்களுக்கே பெற்றுக் கொடுக்கப்பட்டன. இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

சுற்றுலா அமைச்சு

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் – பேராதனை

கேள்வி கோரல்

வேலை மற்றும் சேவைகள் – 2022

01. தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்குரித்தான பின்வரும் பெறுகை நடவடிக்கைக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொ. இல.	ஒப்பந்தத்தின் பெயர்	தகைமை	கேள்விப் பிணை முறி		
			ரொக்கப் பணமாக தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்திற்குச் செலுத்துவதானால் (ரூபா)	வங்கிப் பிணை முறியாக வழங்குவதானால் (ரூபா)	மீளளிக்கப் படாத கேள்வி விண்ணப்பக் கட்டணம் (ரூபா)
1.	ரோயல் தாவரவியல் பூங்காவில் உத்தேச சிற்றுண்டிச்சாலைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (சராசரி மதிப்பீட்டுப் பெறுமதி 24 மி.ரூபா)	C_6 அல்லது C_5	120,000.00	240,000.00	5,000.00
2.	ரோயல் தாவரவியல் பூங்காவில் பாதுகாப்புச் சேவையை நடாத்திச் செல்லல்	வியாபாரப் பதிவுச் சான்றிதழ்	87,500.00	175,000.00	2,500.00
3.	ஹக்கல தாவரவியல் பூங்காவில் நலன்புரி சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல்	வியாபாரப் பதிவுச் சான்றிதழ்	15,000.00	30,000.00	2,000.00
4.	சீத்தாவக்க தாவரவியல் பூங்காவின் தேயிலைத் தோட்டத்தை குத்தகைக்கு வழங்குதல்	வியாபாரப் பதிவுச் சான்றிதழ்	15,000.00	30,000.00	2,000.00
5.	ஹம்பாந்தோட்டை உலர் வலய தாவரவியல் பூங்காவிற்கான சுத்திகரிப்புச் சேவைகள்	வியாபாரப் பதிவுச் சான்றிதழ்	5,000.00	10,000.00	1,000.00

02. கேள்வி கோரல் தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் நடைமுறைக்கமைய இடம்பெறும்.

03. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் 2022-03-23ஆம் திகதி முதல் 2022-04-19ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அந்தந்த வேலைகளுக்குரித்தான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி (ஒரு தொகுதிக்காக) கேள்வி மாதிரிப் படிவங்களை பேராதனை தாவரவியல் பூங்காக்கள் திணைக்கள தலைமை அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு CIDA/ICTAD பதிவுப் புத்தகம் (மூலப் பிரதி) / வியாபாரப் பதிவுச் சான்றிதழ் சகிதம் நிறுவனக் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

04. மேற்குறிப்பிடப்பட்ட கேள்விப் பிணை முறியை தேசிய தாவரவியல் பூங்காவின் பெயரில் அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியில் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறல்லாவிடின் அக்கேள்விப் பிணை முறியை ரொக்கப் பணமாக பேராதனை தேசிய பூங்காத் திணைக்களத்தில் வைப்புச் செய்யலாம். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணையைச் சமர்ப்பிக்காத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். (கேள்விப் பிணை முறியை ரொக்கப் பணமாக அல்லது வர்த்தக வங்கி பிணை முறியின் மூலமாக மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் காசோலைகள் மற்றும் வங்கிக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விக் பிணை பெறுதியை கேள்விகள் திறக்கப்படும் நாளான 2022-04-20ஆம் திகதி முதல் எதிர்வரும் 90 நாட்களுக்குப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்)

05. இரு நகல்களில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை முறையாக முத்திரைக் குறி பொறித்து (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு) 2022-04-20ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் தலைவர், திணைக்கள பாரிய பெறுகைக் குழு, தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், த.பெ. இல. 14, பேராதனை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். என்பதுடன் பிந்திக் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன் அந்தந்த கடித உறைகளில் இயைபுடைய ஒப்பந்த நிறுவனத்தின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டும்.

06. கேள்விப் படிவங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் முழுமையான உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது மாதிரியில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத பெறுகைச் செயற்பாடுகளுக்கு இயையான எந்தவொரு விடயம் தொடர்பாக தீர்மானத்தை வழங்கும் அதிகாரத்தை தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார். (இது தொடர்பான மேலதிக விபரங்களை 081-2388654 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் தலைமைக் கணக்காளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.)

07. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2022-04-04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், பேராதனை.
2022-03-23.

விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

நீர் வழங்கல் அமைச்சு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் – (செயற்றிட்டம் 02)

திகதி	:	**2022 மார்ச் 23**
கடன் இலக்கம்	:	**ADB கடன் இல. 3030 - SRI**
செயற்றிட்டத் தலைப்பு	:	**பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம் - செயற்றிட்டம் 2**
ஒப்பந்த இலக்கம்	:	**GCWWMIIP/ADB/TAB/NCB/50**
ஒப்பந்தத் தலைப்பு	:	**வெளிக்கள சேவை செயலிக்கான டெப்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் (Supply and Delivery of Tabs for Field Service Apps)**
விலைமனுக்களைச் சமர்ப்பிப்பற்கான இறுதித் திகதி	:	**2022 ஏப்ரல் 26, மு.ப. 10.00 மணி (உள்ளூர் நேரம்)**

01. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம் - செயற்றிட்டம் 2 எனும் திட்டத்தின் கிரயச் செலவிற்கு நிதியுதவியைப் பெற்றுள்ளது. இதன் ஒரு பகுதியை மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளை ஈடுசெய்ய பிரயோகிக்க விரும்புகின்றது.

02. மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்திற்கு தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் ஒரு கடித உறை ஒற்றைக் கட்ட விலைக்கோரல் நடைமுறையில் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல்களை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சார்பில் செயற்றிட்ட பெறுகைக் குழு - மேல்நிலை (PPC-Major) தலைவர் இப்போது அழைக்கின்றார்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையாக சித்திகரமான விலைமனுதாரர் பின்வரும் தகைமைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

நிர்மாண அனுபவம்:
- கடந்த ஐந்து (05) ஆண்டுகளில் 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் (வழங்கல் அட்டவணை) வழங்கல் நோக்கத்தைக் கொண்ட சிக்கலான தன்மையிலான 20 மில்லியன் ரூபா மொத்தப் பெறுமதியான டெப்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தலை ஒரு பிரதான ஒப்பந்தக்காரராக வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

தொழில்நுட்ப அனுபவம்
- விலைமனுதாரர் வழங்கும் பொருட்களுக்கான (தயாரிப்பு / வர்த்தக நாமம்) செயல்முறை விளக்கமொன்றை வழங்குதல் வேண்டும்.

I. குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் (சர்வதேச ரீதியில் நன்கு அறியப்பட்ட தயாரிப்பு / வர்த்தக நாமம்) தயாரிப்பில் இருத்தல் வேண்டும். மற்றும்

II. இலங்கையில் மூன்று (03) ஆண்டுகளுக்கு மேல் நிகரான வகை மற்றும் விபரக்குறிப்பைக் கொண்ட குறைந்தபட்சம் 1000 எண்ணிக்கையான டெப்களை (Tabs) விற்பனை செய்திருத்தல் வேண்டும்.

III. குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள் செயற்பாட்டில் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-06, இல. 65, சென் லோரன்ஸ் வீதி, பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம், செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து +94 11 2363705 எனும் தொலைபேசி இலக்கம் மற்றும் +94 11-2363725 எனும் தொலைநகல் இலக்கத்தின் (மின்னஞ்சல்: cwssiadb@yahoo.com) ஊடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் ஆவணங்களை இதே முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று கொழும்பு-06, இல. 65, சென் லோரன்ஸ் வீதி, GCWWMIIP, செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் 2022 ஏப்ரல் 4ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தொழில்தருநரால் நடாத்தப்படும். சகல விலைமனுதாரர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

06. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 147 நாட்களுக்கு விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 12,500.00 ரூபா கேள்விக் கட்டணத்தை ஏற்புடைய வரிகள் சகிதம் 2022 மார்ச் 23ஆம் திகதி முதல் 2022 ஏப்ரல் 25ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ரொக்கப் பணமாக அல்லது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பெயரில் வங்கி வரைவாக செலுத்தி, கொழும்பு-06, இல. 65, சென் லோரன்ஸ் வீதி, பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம், மேல்நிலை செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவருக்கு எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

08. பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல்களை 2022 ஏப்ரல் 26ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், மேல்நிலை பெறுகைக் குழு, பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம், இல. 65, சென் லோரன்ஸ் வீதி, கொழும்பு-06 எனும் முகவரிக்கு விலைமனு ஆவணங்களில் (தரவுத் தாள்) குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான பிணை முறி சகிதம் ஒப்படைத்தல் வேண்டும்.

09. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இந்த விலைமனுக்கள் 2022 ஏப்ரல் 26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இதே இடத்தில் சமுகம் தந்துள்ள விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் விநியோகம் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு கிரயம் அல்லது செலவுகளுக்கு பொறுப்பாகாது.

தலைவர்,
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.

விலை கோரலுக்கான அழைப்பு

மேல் மாகாண சபை
பொறியியல் பணியகம்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிராந்தியப் பொறியியலாளர் / பணிப்பாளர் (கட்டிடங்கள்) பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. I. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியனுக்குக் குறைவாக இருப்பதனால் மாகாண முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.

   II. 03/2020(i)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், ''அரசுரிமை தொழில்முயற்சி (SOE) விலைகளைக் கோருகையில் ஐந்து வீதமான (5%) முன்னுரிமை வழங்கப்படும்.''
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்கள் அல்லது ஒப்பந்தங்கள் விலைமனுதாரர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் ஒப்படைக்கப்பட்ட காலப்பகுதியில் கைவிட்டவர்களாகவும் மற்றும் பூர்த்தி செய்யாதவர்களாகவும் இருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(1) தொ. இல.	(2) ஒப்பந்தத்தின் இலக்கம்	(3) வேலையின் பெயர்	(4) நேரடி மதிப்பீட்டுக் கிரயம் (மில்லியன்)	(5) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு	(6) CIDA பதிவு	(7) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)	(8) விலைமனுப் பிணை / விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலம்	(9) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம்	
1	WP/PU/CON/22/36	மேமா/கொ ராஜசிங்க மகா வித்தியாலயத்தின் மின்சார முறைமை திருத்தவேலைகள்	0.4	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 2,500.00	பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இல. 151/4/2/1, மாளிகாவத்த பிளேஸ், மாளிகாவத்தை, கொழும்பு-10. தொலைபேசி-: 011-2447773 பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பத்தரமுல்ல, தெபானம, பன்னிபிட்டிய. தொலைபேசி இல. 011-2844354	
2	WP/PU/CON/22/37	மேமா/கொ புனித மைக்கல் வித்தியாலயத்திலுள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள்	0.9	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 5,000.00		
3	WP/PU/CON/22/38	மேமா/கொ ஸ்ரீ மகிந்தானந்த வித்தியாலயத்தின் இரண்டு மாடிக் கட்டிடத்தின் கூரைத் திருத்தவேலைகள்	1.3	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 7,500.00		
4	WP/PU/CON/22/39	கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தின் களஞ்சியசாலையைப் புதுப்பித்தல்	1.2	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 6,500.00		
5	WP/PU/CON/22/40	மேமா/கொ விகாரமாதேவி மகளிர் வித்தியாலயத்தின் 60'×20' ஒற்றை மாடிக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள்	2.5	இல்லை	C8 மற்றும் C7	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,000.00		
6	WP/PU/CON/22/41	மேமா/கொ புனித லூசியாஸ் வித்தியாலயத்திலுள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் கூரைத் திருத்தவேலைகள்	2.3	இல்லை	C8 மற்றும் C7	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,500.00		
7	WP/PU/CON/22/42	மேமா/கொ எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் சா/த ஆய்வுகூடத்தின் திருத்தவேலைகள்	0.9	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 5,000.00		
8	WP/PU/CON/22/43	மேமா/கொ சுசமயவர்தன வித்தியாலயத்தின் 70'x25 ' மூன்று மாடிக் கட்டிடத் திருத்தவேலைகள்	1.4	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 7,500.00		
9	WP/PU/CON/22/44	மேமா/கொ விபுலானந்த தமிழ் வித்தியாலத்தின் 80'x20' ஒற்றை மாடிக் கட்டிடத்தின் கூரைத் திருத்தவேலைகள்	2.0	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00		
10	WP/PU/CON/22/45	மாளிகாவத்தை மாவட்ட வைத்தியசாலையிலுள்ள பற்சிகிச்சை அலகைப் புதுப்பித்தல்	1.0	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 6,000.00		
11	WP/PU/CON/22/46	கிறீன்பாத் கட்டிடத்தொகுதியின் புதுப்பித்தல் வேலைகள் (கட்டம் 03) (INF01)	10.5	ஆம்	C6 மற்றும் C5	3,500.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 120,000.00		
12	WP/PU/CON/22/47	அங்கொடயிலுள்ள பிராந்திய மருந்துர் வழங்கல் பிரிவுக் (RMSD) கட்டிடம் மற்றும் எல்லைச் சுவரின் திருத்தவேலைகள்	9.6	ஆம்	C6 மற்றும் C5	3,500.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 120,000.00		
13	WP/PU/CON/22/48	அங்கொடை PMCU எல்லைச் சுவர் திருத்தவேலைகள் மற்றும் ஏனைய தேவையான திருத்தவேலைகள்	3.1	இல்லை	C8 மற்றும் C7	1,500.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 20,000.00		
14	WP/PU/CON/22/49	நவகமுவ பிரதேச வைத்தியசாலையின் 03ஆம் இலக்க வார்டின் புதுப்பித்தல் வேலைகள்	5.8	ஆம்	C7 மற்றும் C6	2,500.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 35,000.00		
15	WP/PU/CON/22/50	தலங்கம பிரதேச வைத்தியசாலையிலுள்ள களஞ்சியசாலையின் புதுப்பித்தல் வேலைகள்	1.4	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 7,500.00		
16	WP/PU/CON/22/51	நவகமுவ பிரதேச வைத்தியசாலையிலுள்ள சாக்கடை மற்றும் வடிகாலமைப்பு முறைமைக்கான அத்தியாவசிய புதுப்பித்தல் வேலைகள்	1.8	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00		
17	WP/PU/CON/22/52	நவகமுவ பிரதேச வைத்தியசாலை RMO விடுதியின் புதுப்பித்தல் வேலைகள்	2.1	இல்லை	C8 மற்றும் C7	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,000.00		
18	WP/PU/CON/22/53	கொத்தட்டுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் புதுப்பித்தல் வேலைகள்	3.7	இல்லை	C8 மற்றும் C7	2,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 20,000.00		
19	WP/PU/CON/22/54	தலங்கம பிரதேச வைத்தியசாலையின் தாதி அதிகாரிகளின் உடைமாற்றும் அறையை விஸ்தரித்தல் மற்றும் பகுதி பிரித்தல்	1.8	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00		
20	WP/PU/CON/22/55	கடுவளை சு.வை.அ. அலுவலக புதுப்பித்தல் வேலைகள்	1.8	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00		
21	WP/PU/CON/22/56	அத்துருகிரிய பிரதேச வைத்தியசாலையின் மருந்தக இடப்பரப்பு மற்றும் மருந்து களஞ்சியசாலை இடப்பரப்பை மேம்படுத்துதல்	1.8	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00		
22	WP/PU/CON/22/57	மேமா/ஜய/ஸ்ரீ ரேவத்த ரோயல் கல்லூரியிலுள்ள 90'×25' இரண்டு மாடிக் கட்டிடத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்தல்	7.6	ஆம்	C7 மற்றும் C6	3,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 42,000.00		
23	WP/PU/CON/22/58	மேமா/ஜய/ கொத்தலாவல மகா வித்தியாலயத்திலுள்ள 45'×25' Activity அறை கூரைத் திருத்தவேலைகள்	2.3	இல்லை	C8 மற்றும் C7	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,500.00		
24	WP/PU/CON/22/59	மேமா/ஜய/ ஹென்றி ஒல்கொட் மகா வித்தியாலயத்திலுள்ள 90'x25' மூன்று மாடிக் கட்டிடம் மற்றும் 80'x20' ஒன்றை மாடிக் கட்டிடங்களில் கூரைத் திருத்தலேலைகள்	3.0	இல்லை	C8 மற்றும் C7	1,500.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 20,000.00		
25	WP/PU/CON/22/60	மேமா/ஜய/கொரதொட்ட சோமானந்த வித்தியாலத்திலுள்ள 110'x20' கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள்	2.0	இல்லை	C8 மற்றும் C7	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,000.00		
26	WP/PU/CON/22/61	மேமா/ஜய/புவனேகபாகு ஆ. வித்தியாலயத்திலுள்ள 70'x40' "U" வடிவிலான கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள்	4.4	இல்லை	C8 மற்றும் C7	2,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 25,000.00		
27	WP/PU/CON/22/62	மேமா/ஜய/ஒருவல க. வித்தியாலத்திலுள்ள 60'x20' அலுவலக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள்	1.7	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 9,000.00		
28	WP/PU/CON/22/63	மொரட்டுவ மாவட்ட வைத்தியசாலையிலுள்ள பற் சிகிச்சையகம் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் மீள்கம்பியிணைத்தல் (Rewairing)	1.7	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00	பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இரத்மலானை, இல. 25, மாளிகாவ வீதி, இரத்மலானை. தொலைபேசி இல. 0112-622517	
29	WP/PU/CON/22/64	மொரட்டுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகக் கட்டிடத்தின் கூரை புதுப்பித்தல் வேலைகள் மற்றும் சீலிங் மற்றும் ஏனைய திருத்தவேலைகள்	3.5	இல்லை	C8 மற்றும் C7	2,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 20,000.00		
30	WP/PU/CON/22/65	மேமா/ஜய/பிலி மகளிர் உயர் பாடசாலையின் கூரை மற்றும் தரம் 6 வகுப்பறைக் கட்டிடத்தின் திருத்தவேலைகள்	1.4	இல்லை	C9 மற்றும் C8	1,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 7,500.00		
31	WP/PU/CON/22/66	மினு/லோலுவாகொட க. வித்தியாலத்திலுள்ள 70x25 இரண்டு மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள்	2.6	இல்லை	C8 மற்றும் C7	1,500.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,000.00	பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மினுவாங்கொட. தொலைபேசி இல. 0112-296418	
32	WP/PU/CON/22/67	மினு/நவன மகா வித்தியாலயத்திலுள்ள 120x25 மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள்	8.9	ஆம்	C7 மற்றும் C6	3,500.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 50,000.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 100,000.00		
33	WP/PU/CON/22/68	மினு/குரீகொட்டுவ க. வித்தியாலயத்திலுள்ள 70'x25' மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள்	5.6	ஆம்	C7 மற்றும் C6	3,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 35,000.00		
34	WP/PU/CON/22/69	பிம்புர ஆதார வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் நிறுத்தகத்தை நிர்மாணித்தல் (படிநிலை II)	14.4	ஆம்	C6 மற்றும் C5	5,000.00	விலைமனுப் பிணை முறி - ரூபா 170,000.00	பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மத்துகம. ஆனந்த சிராஸ்தலாய, மத்துகம. தொலைபேசி இல. 034-2243082	
35	WP/PU/CON/22/70	மத்துகம - வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள நான்கு மாடிக் கட்டிடம் மற்றும் அலுவலக இடப்பரப்பின் மிகுதி வேலைகள்	4.0	இல்லை	C8 மற்றும் C7	2,000.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 25,000.00		
36	WP/PU/CON/22/71	இத்தபான பிரதேச வைத்தியசாலையின் DMO விடுதியின் புதுப்பித்தல் வேலைகள்	8.9	ஆம்	C7 மற்றும் C6	3,500.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 50,000.00 விலைமனுப் பிணை முறி - ரூபா 100,000.00		
37	WP/PU/CON/22/72	ஹீனட்டியன ஆயுர்வேத கட்டிடத்தொகுதியிலுள்ள கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள்	5.0	ஆம்	C7 மற்றும் C6	2,500.00	ரொக்கப் பண வைப்பு - ரூபா 27,500.00	பிரதேச பொறியியலாளர் அலுவலகம், நீர்கொழும்பு இல. 75, லுவிஸ் பிளேஸ், நீர்கொழும்பு. தொலைபேசி இல. 0312-232357	
38	WP/PU/CON/22/73	வத்தளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வத்தளை MCH சிகிச்சையகத்திற்கான புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல் - படிநிலை 2	10.7	ஆம்	C6 மற்றும் C5	4,000.00	விலைமனுப் பிணை முறி - ரூபா 124,000.00	பிரதேச பொறியியலாளர் அலுவலகம், வத்தளை, இல. B/25/1, மகுள்பொக்குண வீதி, ராகம. தொலைபேசி இல. 0112952126	
39	WP/PU/CON/22/74	மேமா/ஜய/அம்பத்தலை டிகிரி குமாரர வித்தியாலத்தில் 90'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல்.	30.3	ஆம்	C5 மற்றும் C4	10,000.00	விலைமனுப் பிணை முறி - ரூபா 400,000.00	வழங்குதல்: பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பத்தரமுல்ல, தெபானம, பன்னிபிட்டிய. தொலைபேசி இல. 011-2844354	சமர்ப்பித்தல்: பணிப்பாளர் (கட்டங்கள்), பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. **011-2092504**

04. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. மீளளிக்கப்படாத கட்டணத்தை 2022-03-23ஆம் திகதி முதல் 2022-04-06ஆம் திகதி வரை (1 முதல் 38 இலக்கம் வரையான திட்டங்களுக்கு) எந்தவொரு வேலை நாளிலும், 2022-03-23ஆம் திகதி முதல் 2022-04-12ஆம் திகதி வரை (39ஆம் இலக்கம் திட்டத்திற்கு) எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையிலும் மேல் மாகாணம் - மாகாண சபைக்குக் கட்டிடப் பணிப்பாளருக்குச் செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அவர்களுக்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
06. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்திட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) 2022-04-07ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் (1 முதல் 38 இலக்கம் வரையான திட்டங்களுக்கு) கிடைக்கச் செய்தல் வேண்டும். 39ஆம் இலக்க திட்டத்திற்கு 2022-04-19ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் பத்தரமுல்ல, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் மாடி, பொறியியல் பணியகம் (மே.மா), பணிப்பாளர் (கட்டிடங்கள்) அவர்களுக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறி அல்லது ரொக்கப் பண வைப்பு பற்றுச்சீட்டி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்). செல்லுபடிக் காலமானது விலைமனு ஆவணத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.
08. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 05ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

பெறுகைப் பிரிவு,
பொறியியல் பணியகம் (மே.மா),
5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.
2022-03-22
தொலைபேசி: 0112-092504, தொலைநகல்: 0112-092505

ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ண கால்பந்தாட்டம்:

கொழும்பு ஹமீட் அல்-ஹுசெய்னி, களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி

வட கொழும்பு தினகரன் நிருபர்

கொழும்பு ஹமீட் அல் ஹுசெய்னி கல்லூரியின் ஒக்ஸ் போர்ட் ஜனாதிபதி கிண்ண அரை இறுதி கால்பந்தாட்ட போட்டியின் முதலாவது ஆட்டம் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி சென் தோமஸ் கல்லூரி அணிகளுக்கும் இடையே கொம்பனித் தெரு சிட்டி லீக் மைதானத்தில் (20) நடைபெற்றது.

கொழும்பு ஹமீட் அல் ஹுசெய்னி கல்லூரியின் 80 களின் பழைய மாணவர்கள் குழுமம் ஏற்பாடு செய்த 2021 ஆம் ஆண்டுக்கான 19 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு மத்தியிலான ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ண கால்பந்தாட்ட போட்டியின் 15 ஆவது சுற்றுப் போட்டியிலேயே சென் தோமஸ் கல்லூரி

அணியினரும், களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியும் மோதின.

கொரோனா தொற்று காரணமாக கடந்த வருடம் இப்போட்டிகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டது. இந்நிலையிலேயே இப்போட்டிகள் நேற்று முன்தினம் மீண்டும் தொடர ஆரம்பித்தது.

அரை இறுதியின் முதலாவது போட்டியில் களம் இறங்கிய களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி, சென் தோமஸ் கல்லூரி அணியை 02 கோல்களால் தோல்வி அடைய வைத்து வெற்றியை பெற்றது.

இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் இக்கிண்ணத்தின் 16ஆவது ஆட்டத்தில் நீர்கொழும்பு மேரிஸ் ஸ்டெல்லா கல்லூரி அணியும் ஹமீட் அல்ஹுசெய்னி கல்லூரியும் மோதின.

இப்போட்டியில் ஹமீட் அல் ஹுசெய்னி கல்லூரி 07 கோல்களையும் மேரிஸ் ஸ்டெல்லா கல்லூரி 02 கோல்களையும் பெற்ற நிலையில் ஐந்து மேலதிக கோல்களால் ஹமீட் அல் ஹுசெய்னி கல்லூரி அணி வெற்றியை சுவீகரித்தது.

இவ் ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ணத்திற்கான மூன்றாம் வெற்றி அணி தெரிவிற்கான போட்டியும், வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றும் அணிக்கான போட்டிகளும் இம்மாதம் 27 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கும் மாலை 3.30 மணிக்கும் கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் இடம்பெறவுள்ளது.

மூன்றாம் அணி தெரிவிற்கான போட்டியில் கல்கிசை சென்தோமஸ் கல்லூரி நீர் கொழும்பு மேரிஸ் ஸ்டெல்லா கல்லூரி அணிகள் மோதவுள்ளன. மாலை 3.30க்கு இறுதி சம்பியன் அணி தெரிவிற்கான போட்டியில் இருபெரும் பலம் கொண்ட அணிகளான கொழும்பு ஹமீட் அல்- ஹுசெய்னி அணியினரும், களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி அணியினரும் மோதவுள்ளனர்.

ஜனாதிபதி விளையாட்டு விருதுகள் 2020 விண்ணப்பங்கள் கோரல்

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வெற்றிகரமான விளையாட்டு வீரர்களை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில் 'ஜனாதிபதி விளையாட்டு விருதுகளை' நடத்த இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு முடிவு செய்துள்ளது. அதன்படி, விளையாட்டில் சிறந்தவர்களை அங்கீகரிக்கும் வகையில் ஜனாதிபதி விளையாட்டு விருது வழங்கும் விழா 2020 ஜனவரி 1 முதல் 2020 டிசம்பர் 31 வரை நடைபெறும். 2020 ஆம் ஆண்டிற்கான நான்கு முக்கிய பிரிவுகளின் கீழ் இதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதன்படி, ஆண்டின் திறமையான விளையாட்டு வீரர், வருடத்தின் எழுச்சி, விளையாட்டு வீரர்கள், விசேட விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விளையாட்டு ஊடகங்கள் ஆகிய நான்கு முக்கிய பிரிவுகளில் 34 விருதுகள் வழங்கப்படவுள்ளன. விருது வழங்கும் விழாவிற்கான விண்ணப்பங்கள் ஏப்ரல் 7, 2022 அன்று மாலை 7:00 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். மாலை 4.00 மணியுடன், விண்ணப்பங்களை பதிவு செய்யப்பட்ட அஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலம் அந்த திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்கலாம்.

விருது வழங்கும் விழா பற்றிய மேலும் விவரங்களுக்கு மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்ய www.moys.gov.lk ஐப் பார்வையிடவும். மேலும், கே.எஸ். டி. என். எம்.தேசபிரிய (உதவிப் பணிப்பாளர் அபிவிருத்தி) 076 8347376/0112 680276 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலமும் விவரங்களைப் பெறலாம்.

இல்ல விளையாட்டுப்போட்டி

தோப்பூர் தினகரன் நிருபர்

மூதூர் பிரதேச செயலக ஊழியர்களுக்கிடையேயான இல்ல விளையாட்டுப்போட்டி மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக் தலைமையில் மூதூர் பகுரியா நகர் பொதுவிளையாட்டு மைதானத்தில் 4.3.2022 நடைபெற்றது.

இதன்போது மூதூர் பிரதேச செயலக ஊழியர்களுக்கு இடையிலான மூன்று இல்லங்கள் கலந்து கொண்டன. இதில் பச்சை இலம் முதலாம் இடத்தை பெற்றது இரண்டாம் இடம் சிவப்பு மூன்றாம் இடம் நீலம் பெற்றுக்கொண்டன.

இந் நிகழ்வுகளில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கி வைத்ததோடு இன்னும் பலரும் கலந்துகொண்டனர்.

தேசிய மாணவர் சிப்பாய்கள் படையணி பொலிஸ் கடெற் பிரிவில் சாஜன் தரத்துக்கு பதவி உயர்வு

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

ஒலுவில் அல் ஹம்றா மகா வித்தியாலய தேசிய பாடசாலை மாணவன் தேசிய மாணவர் சிப்பாய்கள் படையணி பொலீஸ் கடெற் பிரிவில் சாஜன் தரத்துக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

தரம் 9 இல் கல்வி கற்கும் ஏ.எல். ரினோஸ் என்ற மாணவனே இவ்வாறு சாஜன் தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவருக்கான சாஜன் பயிற்சி, கடந்த 03.02.2022 தொடக்கம் 07.03.2022 வரையான காலப்பகுதியில் பதுளை மாவட்டத்தின் பொறலந்தை நகரத்தில் அமைந்துள்ள இலங்கை போலீஸ் பயிற்சி பாடசாலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இம்மாணவனை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு (14) திங்கட்கிழமை பாடசாலையில் அதிபர் யு.கே. அப்துர் ரஹீம் தலைமையில் இடம் பெற்றது.

இதற்கான அனுமதியை வழங்கி ஒத்துழைத்த பாடசாலையின் அதிபர் அஷ்ஷெய்க் யூ.கே.அப்துர் ரஹீம் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களான ஏ.எம்.எம் கியாஸ், ஆர். நௌஷாத் ஆகியோருடன் விளையாட்டு பயிற்றுவிப் பாளர்களான ஏ.ஏ.அஸ்மத் ஸஹி, எம்.முனாஸிர் உட்பட இப் பயிற்சியினை வழங்கும் பொலீஸ் கடெற் இன்ஸ்பெக்டர் எஸ்.சுதர்சன் ஆகியோருக்கும் பாடசாலை சமூகம் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் ஒருநாள் உலகக்கிண்ணம்: 13 வருடங்களுக்கு பிறகு மே.தீவுகளை வீழ்த்தியது பாகிஸ்தான் அணி

மகளிர் ஒருநாள் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான போட்டியில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் சிறப்பு மிக்க வெற்றியை பதிவுசெய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் 13 வருடங்களுக்கு பின்னர், மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்தி பாகிஸ்தான் அணி, வெற்றிபெற்றுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டுக்கு பிறகு மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக தொடர்ச்சியாக 18 தோல்விகளை சந்தித்து வந்த பாகிஸ்தான் மகளிர் அணி, இந்த வெற்றியின் மூலம் தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

மழையினால் ஐந்து மணி நேர தாமதத்திற்கு பிறகு ஆரம்பமான, இந்த 20ஆவது லீக் போட்டியானது, 20 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டு ஆரம்பமானது.

ஹெமில்டன் சிடொன் பார்க் மைதானத்தில் ஆரம்பமான இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய, மேற்கிந்திய தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 87 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, டோடின் 27 ஓட்டங்களையும் டெய்லர் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சில், நிடா டார் 4 விக்கெட்டுகளையும் பாத்திமான சனா, நஸ்ரா சந்து மற்றும் ஓமைமா சொஹைல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 88 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 18.5 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, முனிபா அலி 37 ஓட்டங்களையும் ஓமைமா சொஹைல் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், அஃபீ பிளெட்சர் மற்றும் ஷகேரா செல்மன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகியாக, பாகிஸ்தான் அணி சார்பில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய நிடா டார் தெரிவுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியுடனான போட்டியில் யாழ்.மத்திய கல்லூரிக்கு இலகு வெற்றி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிக்கு எதிராக (21) நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான டிவிஷன் 3 ஐம்பது ஓவர்கள் கொண்ட போட்டியில் யாழ்ப்பாணம் மத்தியக் கல்லூரி அணி 171 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பெற்றுக்கொண்டது.

யாழ். மத்தியக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மத்தியக் கல்லூரி அணி சாரங்கன், கஜன், சன்சஜன் மற்றும் சயந்தன் ஆகியோரின் பங்களிப்புடன் சிறப்பாக ஓட்டங்களை குவித்தது.

சாரங்கன் 45 ஓட்டங்கள், கஜன் 42 ஓட்டங்கள், சன்சஜன் 34 ஓட்டங்கள் மற்றும் சயந்தன் 33 ஓட்டங்கள் என பெற்றுக்கொடுக்க மத்தியக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 254 ஓட்டங்களை குவித்துக்கொண்டது. பந்துவீச்சில் இந்துக் கல்லூரி சார்பாக S.பரத்வாசன் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணியினர், மத்தியக் கல்லூரியின் பந்துவீச்சுக்கு தாக்குபிடிக்க முடியாமல் தடுமாறினர். இந்துக் கல்லூரி அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கே. பரேசித் மாத்திரம் போராடி 32 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இதன்காரணமாக யாழ். இந்துக் கல்லூரி அணி 32.5 ஓவர்கள் நிறைவில் 83 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து 171 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மோசமான தோல்வியை சந்தித்தது. யாழ். மத்தியக் கல்லூரியின் பந்துவீச்சில் கடந்த போட்டிகளில் சகலதுறையிலும் பிரகாசித்துவரும் நியூட்டன் 12 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அவன் காட் சூப்பர் கிண்ணம் 2022 கூடைபந்து போட்டி ஆரம்பம்

கொழும்பு மாவட்ட கூடைப்பந்து சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "Avant Super Cup 2022" போட்டிகள் மார்ச் 19 ஆம் திகதி ஆரம்பமானது. Avant garde குழுமம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. ஏப்ரல் 02 ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கிலும், றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கிலும் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்கள் என 4 பிரிவுகளின் கீழ் நடைபெறவுள்ளது. இதில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விளையாட்டு வீரர்கள் பங்கேற்க உள்ளனர். 04 ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் 02 வெளிநாட்டு அணிகளில் பங்குபற்றுகின்றனர். கூடைப்பந்தாட்ட வீரர்களின் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதே பிரதான இலக்காகும். இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் ஐரோப்பிய நாடுகளில் தவறான நிலையை ஏற்படுத்த சில ஊடகங்கள் முயற்சிப்பதாக அவன்ட் கார்ட் குழுமத்தின் தலைவர் மேஜர் நிஸ்ஸங்க சேனாதிபதி தெரிவித்தார். இது இலாப நோக்கமற்ற விளையாட்டுப் போட்டி என்றும், ரூ. 50 மில்லியனிலிருந்து 60 மில்லியன் ரூபா. இதன் மூலம் ஒவ்வொரு உள்ளூர் கூடைப்பந்து வீரரையும் சிறந்த விளையாட்டுத் திறன் கொண்ட வீரராக உருவாக்குவதுடன் சர்வதேச வீரர்களுடன் விளையாடிய அனுபவத்தையும் அறிவையும் கொண்டு இலங்கையில் கூடைப்பந்தாட்ட விளையாட்டை மேலும் மேம்படுத்துவது அவரது நம்பிக்கை. 2014ஆம் ஆண்டிற்குப் பின்னர் சில அணிகள் விளையாட்டின் எதிர்காலத்தை கையகப்படுத்தினாலும் நாளுக்கு நாள் அதல பாதாளத்திற்குச் சென்றுவிட்டதாகவும், அவர்களை விமர்சிக்காமல், விளையாட்டுக்கு புத்துயிர் அளித்து சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் செல்வதற்குத் தேவையான சூழலை உருவாக்குவதாகவும் தெரிவித்தார். முடிந்தவரை.

எதையாவது செய்யக் கூடியவர்களிடம் விட்டுவிட வேண்டும். பண ஆசையில் உத்தியோகபூர்வ நியமனங்கள் வழங்கப்பட்டதாகவும், இதனால் விளையாட்டில் எந்த முன்னேற்றமும் ஏற்படாது எனவும், கூடைப்பந்து விளையாட்டில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதை காண விருப்பம் இல்லை எனவும் அவர் தெரிவித்துதார்.

போட்டியில் பங்குபற்றுவதற்கு எவருக்கும் கட்டணம் விதிக்கப்படமாட்டாது எனவும், இவை அனைத்தும் இலங்கையின் விளையாட்டின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் எனவும் அனைவரது ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் அவன்ட் கார்ட் குழுமத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 23ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

இல. 84

மரணசாதன அதிகாரப் பத்திர அலுவலரால் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தலின் படிவம் மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கை முறை சட்டக் கோவையின் 529 (2)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட இறந்தவரான ஆளின் மரணச் சொத்து தொடர்பில் விருப்பாவணத்தை எண்பிப்பதற்கான.'. மரணசாதன அதிகாரப் பத்திரத்துக்கான/ மரணசாதன நிருவாகப் பத்திரத்தின் அளிப்புக்கான/ மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களின் வழங்குகைக்கான பின்வரும் விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ள என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒரு இறுதி விருப்பாவணம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு மரணசாதன அதிகாரப் பத்திரத்தின் அல்லது இறுதி விருப்பாவணமொன்று இணைக்கப்பட்டோ இணைக்கப்படாமலோ மரணசாதன நிருவாகப் பத்திரத்தின் அளிப்பிற்கென மரபுரிமையாண்மைச் சான்றிதழொன்றின் வழங்கலுக்கென கட்டளையொன்று ஆக்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆளெவரும் பின்வரும் மாவட்ட நீதிமன்றங்களினால் நிர்மணயிக்கப்பட்ட திகதி அல்லது அதற்கு முன்னர் சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன் அத்தகைய ஆட்சேபனையை எழுத்தில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

அட்டவணை

கல்கிசை மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 26ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/5117/21	வலீகம்பொளகே ஹேமக்க நளின் பெரேரா இல. 6/6 மல்வத்த குறுக்கு ஒழுங்கை, தெஹிவளை	இல்லை	கினிகம ஆராய்ச்சிகே மாலா லலனி பத்மராணி இல. 6/6 மல்வத்த குறுக்கு ஒழுங்கை, தெஹிவளை
T/5132/21	அமிர்தசிங்கம் குகதாசன் இல. 03/1/5, 42ஆம் ஒழுங்கை வெள்ளவத்தை, கொழும்பு -06	இல்லை	வத்சலா குகதாசன் இல. 03/1/5, 42ஆம் ஒழுங்கை வெள்ளவத்தை, கொழும்பு -06
T/5156/21	ஹிக்கடுவகே லக்மினி டிலும் லியனகே நீ பெனார்ந்து இல. 651/31, எல்விற்றிகல மாவத்தை, கொழும்பு -05	ஆம்	சம்பத் உத்பலவன லியனகே இல. 33E, அபோன்ஸ் மாவத்தை, தெஹிவளை
T/5176/21	அப்துல் காதர் அஹமட் பாயிக் ஹாமிட் இல. 19, பார்க் டெரஸ், தெஹிவளை	இல்லை	மொஹமட் பிர்தௌஸ் மொஹமட் இஸ்மாயில் இல. 213, பொல்ஹென்கொட வீதி, கிருலப்பனை, கொழும்பு -05.
T/5185/21	முத்துமுனி அமரதாச சில்வா 124/1ஏ, ஜயசுமணாராம பாதை, இரத்மலான	இல்லை	இந்திக்க பிரியதர்ஷன சில்வா 124/1ஏ, ஜயசுமணாராம பாதை, இரத்மலான
T/5189/21	ரகுபதி நடேசலிங்கம் 42B, 2ஆம் குறுக்குத் தெரு, போறுப்பன வீதி, இரத்மலான	இல்லை	பிரசன்ன நடேசலிங்கம் 42B, 2ஆம் குறுக்குத் தெரு, போறுப்பன வீதி, இரத்மலான
T/5205/21	புஷ்பலதா தஹநாயக்க 35/B, றிதிவெ-லி பாதை, பள்ளஞ்சேனை, கொச்சிக்கடை	இல்லை	மடிகபொல லேக்கம்கே நெவில் சுசந்த பொன்சேகா 35/B, றிதிவெலி பாதை, பள்ளஞ்சேனை, கொச்சிக்கடை
T/5207/21	இளையிதம்பி சாந்த சருபன் அல்லது இளையதம்பி சாந்த சருபன் 19-2/1, சாகர வீதி, கொழும்பு -04	இல்லை	சுப்பரமணியம் கயல்விழி கயல்விழி சாந்த சருபன் 19-2/1, சாகர வீதி, பம்பலப்பிட்டிய
T/5218/21	கொடி மாரக்களாகே சாந்தி அசோக்கா பெர்ணான்டோ இல. 03, பள்ளிதொர பாதை, தெஹிவளை	இல்லை	மார்கரீட்டா வாசிராணி அல்லது மார்கிறீட் வாசிராணி பெர்ணான்டோ இல. 03, பள்ளிதொர பாதை, தெஹிவளை
T/5220/21	சுதுவ தேவகே மஹிந்த பெர்ணான்டோ அல்லது மஹிந்த பெர்ணான்டு அல்லது சுதுவதேவகே மஹிந்த இல. 121/5, ருக்கதென மாவத்தை, அத்திடிய, தெஹிவளை	இல்லை	தனுஜா சமன்காந்தி முணசிங்ஹ இல. 121/5, ருக்கதென மாவத்தை, அத்திடிய, தெஹிவளை
T/5233/21	வராஹேனகே ஹேமந்த அஜித் டீலிக்ஸ் டீ எல்விஸ் அல்லது வராஹேனகே ஹேமந்த பீலிக்ஸ் அஜித் டி அல்விஸ் அல்லது வராஹேனகே அஜித் ஹேமந்த பீலிக்ஸ் டி அல்விஸ் இல. 111/1, எலகண்டிய வீதி, களுபோவிலை, தெஹிவளை	இல்லை	விதானகே சந்திரா சந்தியா குமாரி நாணயக்கார இல. 111/1, எலகண்டிய வீதி, களுபோவிலை, தெஹிவளை
T/5241/21	ஹொன்னன்தர அச்சாரிகே மால-னி சந்திரலதா கருணாநாயக்க இல. 9, ஜய மாவத்தை, 4ஆம் குறுக்கு ஒழுங்கை, இரத்மலான	இல்லை	வித்யா ஹிமாலி டினேஷா கருணாநாயக்க இல. 9, ஜய மாவத்தை, 4ஆம் குறுக்கு ஒழுங்கை, இரத்மலான
T/5244/21	சௌம்யா ரமணி டி சில்வா இல. 281/10, பிரதான வீதி, அத்திடிய, தெஹிவளை	இல்லை	ஹரிந்ர அனில் டி சில்வா இல. 281/10, பிரதான வீதி, அத்திடிய, தெஹிவளை
T/5245/21	வினி. வித்தாரண இல. 67/1 சமுத்திரசன்ன வீதி, கல்கிசை	இல்லை	லலிதா குமுதினி வித்தாரண இல. 67/1 சமுத்திரசன்ன வீதி, கல்கிசை
T/5246/21	வெதகே மஹேந்திர பிரியந்த தயாரத்ன இல. 25, ஸ்ரீ தம்மாதர வீதி, இரத்மலான	இல்லை	ஹேவகே இந்திரா லலினி சுமனதாச இல. 25, ஸ்ரீ தம்மாதர வீதி, இரத்மலான
T/5247/22	மகேஸ்வரி இந்ராணி ராஜேந்ரா இல்லாவிட்டால் மகேஸ்வரி இந்ராணி விவாகத்தின் பின் சோமசுந்தரம் இல. 24, சுபோதாராம வீதி, தெஹிவளை	இல்லை	1. ஜெபமலர் ரெஷல் ராஜேந்ரா 2. ஜெபரன்ஜினி மனோதர்மினி ராஜேந்ரா இல. 24, சுபோதாராம வீதி, தெஹிவளை
T/5249/22	களுமின் சமரதுங்க அல்விஸ் அல்லது களுமின் ஸ்டென்லி அல்விஸ் இல. 22, டிச்போன் இடம், மருதானை. கொழும்பு -10	இல்லை	நெலும் சீனிகம இல. 17/1ஏ, நந்தா மாவத்தை, நுகேகொட
கல்கிசை மாவட்ட நீதிமன்றம் வழக்கு எண் T/5252/22	மருத்துவர் ஜெயசுமன கனக்கஹேவகே மலானி டி சில்வா அல்லது ஜெயசுமன கனக்கஹேவகே மால-னி டி சில்வா எண் 136/A, ஆண்டர்ஷன் வீதி, தெஹிவளை	இல்லை	வீரகொண்ட ஆராச்சி தீபா லலனி சில்வா (தி.மு.) டி. சில்வா எண் 136/A, ஆண்டர்ஷன் வீதி, தெஹிவளை
T/5255/22	அங்குரு கண்கானம்கே வின்சன்ட் விஜய சேகர இல. 3A, தி. சொய்சா மாவத்த, டெம்பளர்ஸ் பாதை, கல்கிசை	இல்லை	உடுகஹாவத்தகே தோன விமலாவதி இல. 3A, தி. சொய்சா மாவத்த, டெம்பளர்ஸ் பாதை, கல்கிசை
T/5256/22	கொட்டுரு அச்சிகே டொன் பத்மா ரஞ்சனி ரத்நாயக்க இல. 138, பிரதான வீதி, அத்திடிய, தெஹிவளை	இல்லை	முத்துக் குட்டிகே திராஜ் நெரஞ்ஜ பீரிஸ், இல. 138, பிரதான வீதி, அத்திடிய, தெஹிவளை
T/5258/22	நோனா பரீஷா காசிம் இல. 14/1ஏ, ஞானதிலக்க வீதி, கல்கிசை	இல்லை	ஐயூப் கான் காசிம் இல. 14/1ஏ, ஞானதிலக்க வீதி, கல்கிசை

திகதி: 2022.02.02 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: கல்கிசை மாவட்ட நீதிமன்றம்**

கல்கிசை மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 26ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/5260/22	டெல்பேசிட்ரா ஆச்சாரிகே டொன் மொக்கலீ வைத்தியசேகர இல. 25ஈ, டி சேரம் பாதை, கல்கிசை	ஆம்	கனேஸ் சுதத் தேவநார-ாயணா இல. 25ஈ, டி சேரம் பாதை, கல்கிசை
T/5261/22	பத்தியகே ஞானசிரி பீரிஸ் இலக்கம் 24/8/A, 2வது பாதை, கடவத்தை வீதி, கலுபோவில, தெஹிவளை	இல்லை	ரம்யா லலனீ அமரசிங்க இலக்கம் 24/8/A, 2வது பாதை, கடவத்தை வீதி, கலுபோவில, தெஹிவளை
T/5262/22	ஜெனிட்டா மெரில் லொரின் பெரேரா (தி.மு. குரே) இல. 20, 1ஆம் ஒழுங்கை, போறுப்பன பாதை, இரத்மலான	ஆம்	சமரப்புலிகே அனுல் ஷாந்த பெரேரா இல. 20, 1ஆம் ஒழுங்கை, போறுப்பன பாதை, இரத்மலான
T/5263/22	சஹருவான் பீபீ இல. 48/2, புனித செபஸ்தியன் வீதி, கொழும்பு -12	இல்லை	மசீர் மொஹிதீன் அல்லது பஸீர் அகமட் மசீர் மொஹிதீன் இல. 40/1A, சமகி மாவத்த கவுடான, தெஹிவளை
T/5264/22	ஹாஜா மொஹிதீன் பஸீர் அகமட் இல. 48/2, புனித செபஸ்தியன் வீதி, கொழும்பு -12	இல்லை	மசீர் மொஹிதீன் அல்லது மஸீர் அஹமட் மசீர் மொஹிதீன் இல. 40/1A, சமகி மாவத்த கவுடான, தெஹிவளை
T/5266/22	ஹியு சானக்க யோசப் குனேவர்தன இல. 18, ஜனப்பிரிய மாவத்தை, போறுப்பன, இரத்மலான	இல்லை	ஜெராட் ஜோசப் ருக்ஷான் குணவர்தன 62/4, பீரிஸ் அவென்யு, களுபோவில	
T/5268/22	நாபடாவ ஹேவகே சந்திரபால 275, காலி வீதி, இரத்மலான	இல்லை	வல்கம் பலகே லலிதா பெரேரா குலசேகர, 275, காலி வீதி, இரத்மலான
T/5269/22	நாவலகே ஜனக்க சரத் குரே 105, சப்புமல் இடம், இராஜகிரிய	இல்லை	தரங்கா தர்ஷனி விஜேகுணவர்தன 12, அல்விஸ் இடம், அத்திடிய, தெஹிவளை
T/5275/22	சந்தியா நிரஞ்சலா வெடிக்கார இல. 69/10A, கேணல் நிசாம் முத்தலீப் மாவத்தை, டெம்பிலர்ஸ் வீதிக்கு அப்பால், கல்கிசை	இல்லை	நுவான் எக்சித் டீ சில்வா கொலம்ப முகாம்திரம்கே இல. 69/10A, கேணல் நிசாம் முத்தலீப் மாவத்தை, டெம்பிலர்ஸ் வீதிக்கு அப்பால், கல்கிசை

திகதி: 2022.02.02 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: கல்கிசை மாவட்ட நீதிமன்றம்**

பண்டாரவளை மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 20ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/145	சரோஜா சுதந்திரன் அல்லது சரோஜாதேவி ராஜலிங்கம்	இல்லை	மாரிமுத்துப்பிள்ளை சுதந்திரன் உமாசுதன் இல. 546/B, குருதுவத்த, முதலாவது தெரு, எவெரிவத்த, வத்தளை

திகதி: 25.01.2022 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: பண்டாரவளை மாவட்ட நீதிமன்றம்**

பலப்பிட்டிய மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 27ஆம் நாளாகும்

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/13	ஹென்ரி ஹேவகே அல்சன், இல. 167/ஜி, கெரேவ கரந்தெனிய.	இல்லை	ஹென்ரி ஹேவகே வீரசூரிய, இல. 167/ஜி, கெரேவ, கரந்தெனிய.

திகதி: 02.02.2022 மரண சாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம் பலப்பிட்டிய மாவட்ட நீதிமன்றம்

மாரவில மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 27ஆம் நாளாகும்

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/343	N.B. கொஸ்மன் பெர்ணான்டோ, "குசும்" பரகஹாவத்த பாதை, நாத்தாண்டிய வீதி, மாரவில.	ஆம்	நாத்தாண்டிகே பீற்றர் அல்கந்டெர் பெர்ணான்டோ அல்லது நாத்தாண்டிகே பீற்றர் அல்கன் பெர்ணாண்டோ "குசும்", பரகஹாவத்த பாதை, நாத்தாண்டிய வீதி, மாரவில.

திகதி: 03.02.2022 மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம் மாரவில மாவட்ட நீதிமன்றம்

கண்டி மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 27ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
DTS/62/21	ஹெலம்பகே தோன ஸ்ரீயாலதா பிரேமசந்த குமாரிஹாமி இல. 21, தயா வீதி, ஹெந்தல, வத்தளை	ஆம்	உபேக்ஷா ஒஷானி ரேசல் இல. 21, தயா வீதி, ஹெந்தல, வத்தளை

திகதி: 2022.02.01 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: கண்டி மாவட்ட நீதிமன்றம்**

மாத்தறை மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 20ஆம் நாளாகும்

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
TS/ 548	சுமணாவதி ரணசிங்ஹ "ருஹுணு சரண", ரத்மலே பாதை, ஹுண்ணதெனிய, கோட்டகொட.	இல்லை	கங்கா தீப்பானி சுரவீர ஆராய்ச்சி தும்பலபிட்டிய வத்த, வில்பாவ பாதை, வதுராகல, குருநாகல்.
TS/ 552	நிரஞ்ஜலா லலிதா குணவர்தன தம்மாராம பாதை, வல்பொல, மாத்தறை.	இல்லை	அந்தோணி படுகே நால-ிகா, இல. 348/1, பஹல இம்புல்கொட வெவ, இம்புல்கொட.

திகதி: 2022.02.02 மரண சாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம் மாத்தறை மாவட்ட நீதிமன்றம்

கம்பஹா மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 28ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/65/2021	கல்லற்றம்பாகே ரஞ்ஜன் அல்லது கல் அற்றம்பாகே ரஞ்ஜன் அல்லது கல் அற்றம்பாகே ரஞ்ஜன் இல. 52/ஏ/18, சூரியவ-ிமன, எல்தேனிய, கடவத்த	இல்லை	மிரிஸ்ஸ சந்ராகே குசும் காந்தி அல்லது மிரிஸ்ஸ சந்ராகே குசும் காந்தி அல்லது மிரிஸ்ஸ சந்ராகே குசும்காந்தி இல. 52/ஏ/18, சூரியவிமன, எல்தேனிய, கடவத்த
T/67/21	சோலங்க ஆரச்சிகே சீலவதி 28/1, கண்டலியத்த பாலுவ, கணேமுல்ல	ஆம்	சஷிகா ஜெயஷன் கமகே 28/1, கண்டலியத்த பாலுவ, கணேமுல்ல

திகதி: 28.01.2022 **மரண சாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: கம்பஹா மாவட்ட நீதிமன்றம்**

கண்டி மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 05 மாதம் 01ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
DTS/03/22	லியனகே ஹயிஜீனஸ் பிரியன்த பெரேரா இல. 36, மீகனுவ வீதி, ஹம்பிடிய	இல்லை	தொம்மனிகே சுதர்ஷனி பிரியங்கிகா அமரசேன, இல. 36, மீகனுவ வீதி, ஹம்பிடிய

திகதி: 2022.01.31 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: கண்டி மாவட்ட நீதிமன்றம்**

அத்தனகல்ல மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 25ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/256	ஹப்புயாராச்சிகே கிறேசன் நிஷாந்த அல்லது ஹப்பு ஆராச்சிலாகே கிரேய்சன் நிசாந்த, பயிற்சி பாடசாலை வீதி, மல்வத்த, நிட்டம்புவ	இல்லை	சந்தமாலி பிரியதர்ஷனி பெரேரா, பயிற்சிப் பாடசாலை வீதி, மல்வத்த, நிட்டம்புவ.

திகதி: 01.02.2022 **மரண சாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: அத்தனகல்ல மாவட்ட நீதிமன்றம்**

காலி மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 27ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
காலி T/652	வன்னி ஆரச்சிகே சுனில் சாந்த திரானகம கிழக்கு ஹிக்கடுவ	இல்லை	வன்னி ஆராச்சிகே சுபுன் தரங்க வனரத்ன மாவத்தை, திரானகம கிழக்கு ஹிக்கடுவ

திகதி: 2022.02.01 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: காலி மாவட்ட நீதிமன்றம்**

கண்டி மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 05 மாதம் 02ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
DTS/71/21	சந்ரசேகர மலுத்தெனிய இல. 433/1(918) யடிவாவல	இல்லை	தினேஷ் திலங்க நயனஜித் மலுத்தெணிய இல. 433/1(918) யடிவாவல, கடுகஸ்தொட

திகதி: 2022.02.03 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: கண்டி மாவட்ட நீதிமன்றம்**

ஹட்டன் மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 29ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/760	ரோஜி நுஷ்கி மஜீத், இல. 36/9, வில்பிரட் டவுன், ஹட்டன்	இல்லை	மம்மு மொஹமட் அன்ஸாரி இல. 36/9, வில்பிரட் டவுன், ஹட்டன்
T/761/2022	பியதாஸா விஜயசூர்யா இல. 18, பிரதான வீதி, ஹட்டன்	ஆம்	காஞ்சனா பெரவத்தேகெதர இல. 38, நியுவ்வெளிகம, நோர்வூட் மனுதாரர்

திகதி: 2022.01.24 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: ஹட்டன் மாவட்ட நீதிமன்றம்**

இல. 84

மரணசாதன அதிகாரப் பத்திர அலுவலரால் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தலின் படிவம் மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கை முறை சட்டக் கோவையின் 529 (2)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட இறந்தவரான ஆளின் மரணச் சொத்து தொடர்பில் விருப்பாவணத்தை எண்பிப்பதற்கான.். மரணசாதன அதிகாரப் பத்திரத்துக்கான/ மரணசாதன நிருவாகப் பத்திரத்தின் அளிப்புக்கான/ மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களின் வழங்குகைக்கான பின்வரும் விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ள என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒரு இறுதி விருப்பாவணம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு மரணசாதன அதிகாரப் பத்திரத்தின் அல்லது இறுதி விருப்பாவணமொன்று இணைக்கப்பட்டோ இணைக்கப்படாமலோ மரணசாதன நிருவாகப் பத்திரத்தின் அளிப்பிற்கென மரபுரிமையாண்மைச் சான்றிதழொன்றின் வழங்கலுக்கென கட்டளையொன்று ஆக்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆளெவரும் பின்வரும் மாவட்ட நீதிமன்றங்களினால் நிர்மணயிக்கப்பட்ட திகதி அல்லது அதற்கு முன்னர் சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன் அத்தகைய ஆட்சேபனையை எழுத்தில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

அட்டவணை

கம்பஹா மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 27ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/116/2021	பிராங்லின் யூஸ்டஸ் கெல் 641/சி, எரியவெட்டிய வீதி, கிரிபத்கொட, களனி	இல்லை	சந்திமா காயத்ரி கெல் 641/சி, எரியவெட்டிய வீதி, கிரிபத்கொட, களனி
T/118/2021	சேனாதீரகே டொனே கருணாரத்ன மற்றும் கமலா குசும் கருணாரத்ன அல்லது மத்தும தொடங்கொடகே கமலா குசும் இல. 348/12, இஹல கரகஹமுன, இராஜசிங்ஹ மாவத்தை, கடவத்த	இல்லை	சேனாதீரகே டோனா திலினி தனுஷிக்கா கருணாரத்ன இல. 348/12, இஹல கரகஹமுன, இராஜசிங்ஹ மாவத்தை, கடவத்த

திகதி: 28.01.2022 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: கம்பஹா மாவட்ட நீதிமன்றம்**

மொறட்டுவ மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 27ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/916/21	மல்லியவடு குசுமா ஜயசேகர இல. 38, ரம்யா இடம், ஆசிரி உயண, கட்டுபெத்த, மொறட்டுவ	இல்லை	வருண லஸன்த ஜயசேகர இல. 38, ரம்யா இடம், ஆசிரி உயண, கட்டுபெத்த, மொறட்டுவ
T/920	டினார் கமகே டொன் தனபால இல. 45, ரோஹொணபுர, தெலவல, கல்கிசை	இல்லை	மேரி பிரிஜ்ஜெட், இல. 45, விமலசிரி டி மெல் மாவத்தை, தெலவல, கல்கிசை.

திகதி: 27.01.2022 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: மொறட்டுவ மாவட்ட நீதிமன்றம்**

கடுவெல மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 26ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/814/2021	சம்பத் வடுகே குப்தே குமாரி சில்வா அல்லது சம்பத்த வடுகே குப்தே குமாரி சில்வா 57/14, மேஜர் ஜெனரல் லரி விஜேரத்னே மாவத்தை, அக்குரேகொட பாதை, பெலவத்த	இல்லை	ஹிக்கடுவ லியனகே தனேஸ்வரி சில்வா (தி.மு. பிரேமதாச) இல. 57/14, மேஜர் ஜெனரல் லரி விஜேரத்னே மாவத்தை, அக்குரேகொட பாதை, பெலவத்த

திகதி: 2022.01.26 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: கடுவெல மாவட்ட நீதிமன்றம்**

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 04 மாதம் 27ஆம் நாளாகும்.

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
மாவட்ட நீதிமன்ற பதிவு இல.	இறந்தவரின் பெயரும் முகவரியும்	இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா?	விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும்
T/1361/21	செல்வநாயகம் பாலசிங்கம் பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி	இல்லை	திருமதி. றூபாஜினி பாலசிங்கம் பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி

திகதி: 2022.01.24 **மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரின் ஒப்பம்: மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம்**

கண்டி மாவட்ட நீதிமன்றம்

ஆட்சேபனைகளை கோப்பிடுவதற்கான கடைசித் திகதி 2022 ஆண்டு 05 மாதம் 05ஆம் நாளாகும்

அட்டவணை

நிரல் I	நிரல் II	நிரல் III	நிரல் IV
